ஓம்

## ரமண மஹரிஷிகளின்

# நிஜ ஸ்வரூபம்

இரண்டாம் பதிப்பு

ரமணாஸ்ரமம்

பெருமாள்சாமி அவர்களால்

வெளியிடப்பட்டது.

1938

விலை அணா 4

PRINTED AT
THE SENGUNTHA MITHRAN PRESS,
MADRAS.

# முகவுரை

1. அடியேன் ஒரு ஸந்யாசி. எட்டைப்பார்த்துப் படித்தது அதிகம் இல்லையெனினும், உலகைப் பார்த்துப் படித்தது சிறிது உண்டு. உண்மை ஸந்யாசிகளிடத்தில் பெருமதிப்பும், பக்தியும் உண்டு. இளமைக் காலத்தில் பர்மா நாட்டில் ஒரு மஹானைத் தரிசித்துப் பழகும் பாக்கியம் பெற்றிருந்தேன். அவர் ஆசிரமத்துக்கு வந்து சேரும் அரும்பொருளெல்லாம் அன்றன்றே பலர்க்கும் செலவிடும் மஹாத்யாகி; அரும்பெரும் ஞானி. அவர் தியாகபுத்தியில் அடியேனுக்கு எண்ணரிய ஈடுபாடுண்டு. பின் இந்தியநாட்டுக்குத் திரும்பியபோது யோகானந்தர் என்னும் உத்தமர், பிராமண சுவாமிகள் நிலையை வியந்து கூறக்கேட்டு, திருவண்ணமலை சென்று பிராமண பால சந்யாசியைத் தரிசித்தேன். பிற அன்பர்கள் அவரை ஜோதிரூபமாகவும், தட்சிணாமூர்த்தமாகவும், இன்னும் பலப்பல வடிவங்களாகவும், தரிசித்ததாகக் கூறுவர். அடியேன் அத்தகைய காட்சிகள் ஒன்றும் காணவில்லை. ஆனால் பல நற்குணங்களையும், அரிய வைராக்கியங்களையும் கண்டேன். அவை, பர்மாதேசத்து மகானைப் போலவே சுவாமிகளைக் கருதும்படி எளியேனைத் தூண்டின. அக்குணங்களுள் ஒன்று ஆசிரமத்துக்கு வரும் பொருள்களை அப்போதே அன்பர் பலர்க்கும் செலவிட்டுவிடும் தியாகபுத்தி; நாளைக்கென்று கருதா நன்மனம். இதில் ஈடுபட்ட அடியேன், மஹரிஷிகளுக்குத் தொண்டுபூண்டு கிடந்தேன். உடல் பொருள் எல்லாம் பகவான் பணிவிடைக்கே என மதித்தேன்.

2. புகழ்பரவாத முன்னெல்லாம் பிராமண சாமிகளை எடுத்துக் காப்பாற்றி ஆளாக்கியது பழநிசாமிகள் முதலான பல சந்யாசிகள் என்பதை ரமண சரித்திரமே கூறும். சாமியின் புகழ் பரவிய பிற்காலத்தில் சுற்றமும், ஜனமும் வந்து சேர்ந்தன. இவ்வருகையே எமதூதர் வருகையாக முடிந்தது. பின் தாய் என்னும் எமனும் வந்து

சேர்ந்தது. அதற்கு வாகனமாக வாய்த்த தம்பி என்னும் எருமைக் கடாவும் ஆசிரமத்தை அண்டியது. இக்காலத்தில் எமபாசம்போல் பொருள்வருவாயும் சிறிது நீண்டு வளர்ந்துகொண்டேவந்தது. இவை எல்லாம் ஒன்றசேர்ந்து பிராமணசாமியின் ஆருயிர்க்குணங் களைக்கொள்ளை கொள்ளத் தொடங்கின.

3. ஆசிரமத்தில் சந்யாசிகள் செல்வாக்கு வரவரக் குறைந்து சுற்றத்தார் ஆதிக்கம் மேலிட்டது. இப்போது சாமிகளை பந்து அபி மானம் ஒருபுறமும், சந்யாசிகளிடம் கொண்ட போலி அபிமானம் மற்றொரு புறமும் பிடித்தாட்டின. ரிஷி, சுற்றத்தார்க்குச் சாதுக் கள் அடங்கியிருப்பது சகியாதவர்போல் நடிக்கத்தொடங்கினர். இந்நடிப்பெல்லாம் மெய்யென்றே நம்பி மதிமோசம்போனேன். சுவா மிகள் விருப்பறிந்து, அவர் உத்தரவுப்படியே ரமணஜயந்தி என்னும் உற்சவம் சாதுக்களுக்கும், பிராமணர்க்கும் பயனுகும் முறையில் கொண்டாட அடியேனுல் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, வருடந் தோறும் நடந்தேறி வந்தது.

படிப்படியாய் சுவாமிகளின் அபிமானங்கள் வளரத்தொடங் கின. ஐயோ! உலக அநுபவமற்ற சிற்றிளம் பருவத்தில் எப்ப டியோ வெளிவந்த இவரை, சுற்றத்தார் சூழ்ந்து இப்படிக் கெடுக் கிறார்களே எனும் இரக்கம், சில சமயம் உண்டாகும். ஆயினும் நாமார் அதைச் சொல்ல என்று எண்ணி அடங்கிவிடுவேன். ஜயந்தி உற்சவம் பிரபலப்பட்டது. அதனுல் புகழும், பொருளும் பெருகின. அவ்வுற்சவத்திற்கு விக்ரகமும் செய்யப்பட்டது. இவ்விக்ரகம் ஸ்தாபிக்கப்படுமாலுல் தம்பிக்கும், சுற்றத்துக்கும் ஆதிக்கம் குறையும் எண்றெண்ணிய ஆசிரமத்துச் சுயநலக் கூட்டத்தார், சூழ்ச்சிகள் செய்து, பலர்க்கும் பயன்படும் தர்மத்தைக் கெடுக்கத் தலைப்பட்ட னர். சுவாமியும் பகிரங்கமாக இச்சூழ்ச்சிக்குத் துணை செய்யத் தொடங்கினர். இந்நிலையில் சுவாமிகளின் நிஜஸ்வரூபம் எப்படியோ என்ற ஐயுற்றேன். தம்பிக்குப் பொதுச் சொத்தில் அதிகாரப்பத்தி ரம் எழுதிக்கொடுத்தது முதலாகப் பின் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல, ஐயந்திர ரிஷியை வஞ்சக மனத்தினர் என்று காட்டி விட்டன.

4. என்னைப்போல் சுவாமிகளை நம்பிப் பலரும் மோசம் போகாமல், அவர் வஞ்சக நிலையைப் புலப்படுத்த வேண்டும் என எண்ணித்து வழக்குகள் தொடர்ந்தேன். ரிஷிகளும் எதிர்பாராதபடி பொய்யும் புனைசுருட்டும் சொல்லித் தம்பியின் கொடுஞ்செயலுக்கும், சூழ்ச்சிக் கூட்டத்துக்கும் ஆக்கம் தந்தனர். உள்ளூர் அன்பர் கசந்தனர். சுவாமிகள் குணத்தை வெளியாக்கும் நோக்கங் கொண்ட அடியேனுக்குப் பூரண வெற்றியும் கிடைத்தது. ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம் வெளிப்பட்டது. அதுபற்றிப் பெரிதும் மகிழ்கிறேன். நிற்க, எதிரிகளின் செல்வத் திமிர், அதிகாரச் சார்பு, ஆள் பலம் இவற்றிற்கிடையே அடியேனால் செய்யக் கூடியதைச் செய்தேன். இனி, செய்வனவற்றை உலகம் செய்க.

5. ரமணாசிரமத்தார் அக்ரமங்கள் அளவு கடந்து போய் ஊர் சிரிக்கவும், நாடு நகைக்கவும், ரிஷிகளின் பொய்ப் பெருமைகள் பல, பத்திரிகை மூலமாகவும், புத்தக மூலமாகவும் வெளிவந்து பரவி உலகை ஏய்க்கின்றன. அவற்றின் பொய்யை விளக்கி உண்மையை மக்கட்கு எடுத்துக் காட்டவேண்டும் என்னும் எண்ணத்தால் இந்நூல் சம்பாஷணை முறையில் எழுதப்பட்டு "ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம்" என்னும் பெயரோடு வெளியாகிறது. இந்நூலில் மறுக்கப்படும் விஷயங்கள் எல்லாம் ஆசிரமத்தார் திருத்தமாக வெளிப்படுத்திய தமிழ் ஆங்கில சரித்திரங்களில் உள்ளவை. இதில் ரமண விஜயத்தின் பக்கங்கள் (முதல் பதிப்பு) எண்களால் குறிக்கப்பட்டுள்ளன. இது தவிர அதிகாரப் பத்திரத்திலும், பிரமாண வாக்குமூலத்திலும், விசாரணையிலும் ரிஷிகள் கூறிய பொய்யும், தீர்ப்பிலிருந்து எடுத்துக் காட்டும் பிறவும் "　　" இப்படி மேற்கோள் குறியால் குறிக்கப் பெற்றுள்ளன. உலகம் உண்மை கண்டு உய்க.

திருவண்ணாமலை
20-5-1937

பெருமாள்சாமி

# ரமண மகரிஷிகள் நிஜஸ்வரூபம்

---

அறிந்தவன்:—என்ன! நான் வந்ததைக் கூடக் கவனியாமல், இவ்வளவு ஆழ்ந்தபடி படிக்கிருயே! இவை என்ன புத்தகங்கள்?

ஆராய்ச்சிக்காரன்:—வருக! வருக! இது பகவான் ரமண மஹரிஷிகள் சரித்திரம். இவை அவர் அருளிய உபதேசங்கள். ஆஹா! அவர் பெருமையே பெருமை. அவர் அவதரித்தில்லாவிட்டால் இந்திய நாடே இருண்டுபோயிருக்கும். ஏதோ அம்மகான் ஒருவராலேயே நம் நாட்டு மஹரிஷிகளின் பழைய சீரும் சிறப்பும் நிலைத்தன. அவர் கொண்ட வீரத்துறவும், அத்தவராஜனிடம் பக்தர்கள் கண்ட வியன் காட்சிகளும், அற்புதங்களும் எண்ணத் தொலையா! ஏட்டில் அடங்கா. இதோ பார்! இதுதான் ரமண விஜயம் என்னும் நூல். இது மற்றைப் புளுகாண்டிகள் சரிதைகளைப் போன்றதன்று. இந்நூலில் கூறப்படும் மஹரிஷிகளின் சரிதம் எவரும் அசைக்க முடியாத உண்மைகளைக் கொண்டது. இதன் உண்மையையும், திருத்தத்தையும் பற்றி முகவுரையில் கூறப்பட்டுள்ளதை வாசிக்கிறேன் கேள். "இதுவரை பல சரித்திரங்கள் வெளி ஆயின. இவற்றில் பல பிழைகள் உள்ளன. ஏனென்றால் இந்த மூர்த்தியானது தன் சரித்திர விருத்தாந்தங்களை உலகோர் சொல்லும் மாதிரியாய்ச் சொல்வது இல்லை. ஆகையால் முதலில் எழுதியவர்கள் தம்தம் புத்தி போக்கின்படி, தாமே ஒருவித அபிப்பிராயம் வைத்துக் கொண்டு சரித்திரம் எழுதினார்கள். மூன்று வருடங்கட்கு முன்பு ஒரு தெளிந்த விவேகியான சீடர்— ஸ்ரீ நரசிம்ம ஸ்வாமியவர்கள்—பகவானுடைய சரித்திரத்தை ஆராய்ந்தும், தேவையான சந்தர்ப்பங்களில் பகவானையே நேரில் கேட்டும், கூடியமட்டில் பிழை இன்றி ஆங்கிலத்தில் ஒரு சரிதம் எழுதித் தந்தார். அதன்பின் தமிழில் விரிவானதும் சுத்தமானதுமான சரித்

திரம் ஒன்று வெளிவராதோ, என்று அன்பர்கள் ஆசை கொண்டனர். அவர்களின் தாகத்தைத் தீர்க்கவே, இந்தத் திவ்விய சரித்திரத்தைத் தமிழில் எழுதவல்ல ஒரு யோக மூர்த்தி இதை நாற்பத்தொன்று அத்தியாயங்கள் அடங்கிய ஐந்து காண்டங்களாக எழுதி முடித்தார். அவர் ஸ்ரீ சுத்தாநந்த பாரதி என்னும் யதிசிரேஷ்டர்". முகவுரை XI

அ:—போதும்! போதும்! நிறுத்து. நான் இப்போது தான் உமது ரிஷி வசிக்கும் திருவண்ணமலையி லிருந்து வருகிறேன். ஆசிரமத்துக்கும் சென்றேன். அருகிலிருந்தாரையும் விசாரித்தேன். அனைத்தையும் ஆராய்ந்துகொண்டு வந்திருக்கிறேன். விஷயமறிந்தவர்கள் எல்லாம் ரிஷியின் யோக்யதையைக் குறை கூறுகின்றனர். இது முன்போல ஏமாறும் காலம் அல்ல. உன் ரிஷி, மலையை விட்டு இறங்கியபோதே அவர் பெருமை எல்லாம் மலை ஏறிவிட்டன.

ஆ:—பாவம்! பாவம்! உலகமே கொண்டாடும் ஓர் உத்தம சந்நியாசியை அப்படிக் கூறலாமா; இரும்புத் தூணைக் கரையான் அரிக்குமா? அவர் மகிமையும் அவர் கண்டுபிடித்த ரமண தீர்த்த மகிமையும் படிக்கிறேன் பார். "ரமணாசிரமத்தில் இளநீர்போன்று இனிய வற்றா ஊற்றொன்றுளது. அதாவது:—பகவானின் கூர்ந்த விழிகள் ஒரு சிறிய ஈர நிலத்தைக் கண்டன. சுற்றிலும் நிலம் வறண்டிருக்க, அங்கு மட்டும் சதுசதுப்பாய் இருந்தது. அவ்விடத்தை அகழ்ந்து பார்க்கவே பகவானின் உபதேசங்களைப் போன்று தெளிவும், சுவையும், இனிமையு முள்ள ஒரு பாலூற்றுப் பொசிந்து பொங்கியது. இதற்கு ரமண தீர்த்தம் என்று பெயரிடுகிறோம். அப்புண்ணியப் புனல் அருங்கோடையிலும் வற்றுவதில்லை!" (பக்கம் 317)

அ:—உன்னைப்போலவே நானும் இப்புண்ணியப் புனலை நேரில் சென்று பார்த்துப் பாவத்தைத் தொலைக்க நினைத்தேன். ரமணாஸ்ரம வாயிலில் சென்றதும், யான் கண்ட காட்சியை என்

னென்பது! "குரங்குகள் உபத்திரவம் ஜாக்கிரதை" என்று எழுதப்பட்டிருந்தது. என்னடா இது தொல்லை! 'மயிலும், பாம்பும், புலியும், நாயும், குரங்கும், அந்தணனும், யானையும், ஆவும், புலையனும் ஒன்று என்னும் உண்மையை ரமணாஸ்ரமத்தில் காணலாம்' எனக் கேள்வியுற்றேமே என்று எண்ணி உள் நுழைந்த போது, குரங்குகளால் எனக்கு யாதொரு உபத்திரவமும் நேரவில்லை. ஆனால் அங்கிருந்த மனிதக் குரங்குகளால் நான் பட்ட அவஸ்தையிலிருந்தும், அவர்கள் மனக் குரங்கின் ஆட்டத்திலிருந்தும் தப்பியது தம்பிரான் புண்ணியம் ஆயிற்று. புண்ணியப் புனலைப் பார்க்கப்போன என்னைச் சூழ்ந்து கொண்டு அக்குரங்குகளுள் ஒன்று, "இது பசுமடம்; செட்டியார் உபயம்" என்று கூறிற்று. மற்றொன்று வந்து, "இது உக்கிராணம்; கவுண்டர் உபயம்" என்று சொல்லிற்று. நான் ரமண தீர்த்தம் எங்கே என்று ஆவலோடு விசாரித்தேன். அதற்குப் பதிலே இல்லை. இதற்குள் வேறொன்று, சில புத்தகங்களையும் படங்களையும் கொண்டுவந்து காட்டி, "இவை, பகவான் அருளிய உபதேசங்கள், சரித்திரங்கள், பூஜைக்கு ஆகும் படங்கள்" என்று என்னிடம் கொடுக்க வந்தது. நான் பணமில்லையே என்று சொன்னவுடன், "பரவாயில்லை. வி. பி. யில் அனுப்புகிறோம். விலாசம் சொல்லுங்கள்" என்றது. அப்போது தம்பி சர்வாதிகாரி வந்து, "பகவான் சந்நிதானத்தில் தங்கள் உபயம் ஒன்று நடந்தேறினால் நல்லது. பகவான் இருக்கும் இந்தக்கூடம் பல பக்தர்களால் கட்டித்தரப்பட்டது. பெண்மணிகள் தங்குவதற்குத் தனியே ஒரு இடம் இருந்தால் மிக்க வசதியாயிருக்கும். இதைப்பார்த்தீர்களா? இது தான் சமையல் கட்டின் பிளான். இதைக் கட்ட 9 ஆயிரம் பிடிக்கும். இதற்கு ஏதேனும் உபயம் நடந்தால் தங்கள் பெயரும், புகழும் நிலைக்கும். பகவான் அருளும், புண்ணியமும் உண்டு" என்று அளந்து கொண்டே போனார். தீர்த்தமிருக்கு மிடத்தைக் கேட்டால் இந்த வார்த்தையெல்லாம் எதற்கு என்று சொன்னேன். உடனே அவர் "தீர்த்தத்தைப்பற்றிக் கவலை வேண்டாம்; தாகத்திற்கு நீர் வேண்டுமானால்


குழாய்த் தண்ணீர் இருக்கிறது." என்றார் "தாகம் இல்லை. வறாப் புனலைக் கண்டு தரிசிக்க வேண்டும்'' என்றேன். ஒன்றும் பேசாது திரும்பிச் சென்றார் சர்வாதிகாரி. அருகே இருந்த ஒருவர் அழைத்துச் சென்று, ஓர் இடத்தைக் காட்டி "இது தான் அது" என்றார். அதன் கோலத்தை என்னென்று கூறுவது! ரமண தீர்த்தத்தின் நிலைமை இப்போது எப்படி இருக்கிறது தெரியுமா: அது ஒரு தீர்த்தமே அல்ல, பெரும்பாறையில் குடையப் பட்டதோர் பள்ளம். அதில் மழைக்காலத்தில் மட்டும் சிறிது நீர் தேங்குவதுண்டு. அது பல வருஷங்களாய் ஆயிரக்கணக்கான கூலி ஆட்களின் முயற்சியையும், ரூபாய்களையும், வெடி மருந்து களையும் தின்று விக்கி, தன் தாகத்தைத் தணிக்கவே தண்ணீருக்கு ஏங்கியிருக்கிறது. ரமணாஸ்ரமத்தார், கண்மூடித் தனமாய் அத்தீர்த் தத்தின் போலிப்புகழை நிலை நாட்டப் பொதுப்பணத்தை விரயம் செய்து, பாறையை 15 அடி குறுக்களவில் 50 அடி ஆழம் வரை யில் குடைந்து பார்த்தார்கள். எதிர் பார்த்த வற்றா ஜலம் சிறிதும் இல்லை. முழுமையும் அருணாசலமே. இதோடு விட்டார்களா! ஊர்ப்பணம் சும்மா இருக்க விடுமா! அதன் கீழ் யந்திரங்களை வைத்து, சோதனைக்கு குழிப்போடத் தொடங்கி, 80அடி வரையில் போரிங்வைத்துத் துளைத்தார்கள். அப்பொழுதும் ஜலம் வந்த பாடில்லை. சரித்திரத்தின் புகழ் போகுமே என்றும், பகவான் மகிமை பறந்துவிடுமே என்றும், ஊர் சிரிக்க நம் நிஜஸ்வரூபம் வெளிப்பட்டு விடுமே என்றும் அழும் கண்ணீர்தான் ஆறாய்ப் பெருகுகிறது. ரமண சரித்திரம் கூறும் வற்றாப் புனலின் தற் காலச் செய்தி இதுவே. இத் தீர்த்தத்தின் வரலாற்றை மேலும் கேட்டால் "பாவி! உன் திருஷ்டிப் பட்டுத்தான் தண்ணீரெல் லாம் இப்படிப் பாறையாய்ப் போய்விட்டது" என்று கூறி இம்சிப் பார்களோ எனப் பயந்து ஓடோடியும் வந்து விட்டேன்.

ஆ:—அடடா! அப்படியா சமாசாரம். ரமண விஜயம் முக வுரையில் "முற்காலத்திய பாகவதம் போன்ற புராணங்கள் இதி காசங்கள் எவ்வளவு மட்டில் நடப்பு, எவ்வளவு கற்பனை என்று

பலர் சங்கிக்கிறார்கள்; ரமண விஜயம் இசைக்கும் ஸ்ரீ ரமணரோ இதோ இருக்கிறார், சரித்திரம் உண்மையென்று அறிய போதுமான சாக்ஷிகளும் உயிருடன் இருக்கிறார்கள்'' (13 பக்) என்று கூறியிருக்கிறதே. ஓர் ஊற்றின் உண்மை இதுவானால் எல்லாம் இப்படித்தான் போலும். மேலும், அந்நூல் "ஒரு நாட்டிற்குச் சிறந்த செல்வம், ஒரு மகரிஷியே என்பதற்கு ஐயமில்லை. பாரதசமுதாயத்தை ஆக்கி அணிவகுத்து வாழவைத்தவர் யார்? வேதமுனிவர், வியாச முனிவர் போன்ற தபசிகளாலன்றோ நம் நாடு உருவானது. ஆனால் காமக்குரோதங்களையும், பணப் பேராசையையும், ஏமாற்றங்களையும், சுயநலத்தையும் நீற்றிலும், காவியிலும் மறைத்து அல்லவை செய்து உழலும் போலிகள் நம் நாட்டிற்கும், தர்மத்திற்கும் நோயென்றே கருதி, அந்நோய்கள் தீர்ந்து துறவறம் களங்கமற்ற சூரியனைப் போலப் பளிச்சிட்டு இயல்பாகி, தவசக்தி கதிரைப் பரப்பி, நிற்கவேண்டுமென்பதை யார்தாம் விரும்பார்? இன்றைய சாஷாய உலகின் விநோதங்கள் பல. அவ்வுலகம் தற்காலம் பல விதம். பூர்ணுதி ஒரு கவளம் விழுங்கி, முருகையாவின் ஆவேசத்தை நடித்து, பேதையரை பிரமிக்க வைத்துப் பணம் வாங்கும் ஒன்று; ஓரிடத்தில் வேலை நட்டுப் பழனியாண்டிக்கு உண்டியல் வசூல் செய்யும் ஒன்று; இன்னொன்று தாயும் குஞ்சுகளுமாகத் தங்கி, சித்த மூலிகை வைத்தியக் கடை விரிக்கும்; மற்றொன்று உடுக்கடித்துக் குறி சொல்லும்; இன்னொன்று ரேகை ஸாஸ்திரம் சொல்லும்; மற்றொன்று ஜோதிடம் மாந்திரீகம், இவற்றின் பெயரால் புகழும் பிழைப்பும் தேடும்; இன்னொன்று கெஞ்சாவில் மயங்கி "அந்தோ பரலோகம், அதற்குக் கீழ் யமலோகம்" என்று வர்ணித்துப் பாடும்; மற்றொன்று தங்கம செய்து கொடுக்கிறேன் என்று தொகை வாங்கிக்கொண்டு ஓட்டமெடுக்கும்; சில கை கால்களிலும், நாவிலும் தந்திரமாக வேல்களைக் குத்திக் கொண்டு பணத்திற்காகத் துணியை விரித்து நிற்கும். சில "சோறு கண்டவிடம் சொர்க்கலோகம்'' என்று நின்று தூங்கும்; சில "மார்பிலும் விலாவிலும் அடித்துக் கொண்டு பணம் கேட்கும்;"

(பக் 168) என்று இப்படிப் போலிச் சந்யாச உலகை இகழ்ந்து பேசியதல்லாமல், சுவாமிகள் பணத்தைக் கையாலும் தொடுவ தில்லை" என்று புகழ்ந்தும் கூறுகிறதே! இப்படிக்கூறும் ஆச்ரமத்தாரா உன்னிடம் பணம் பறிக்கப் பிளானையும் புஸ்தகத் தையும் படத்தையும் காட்டி, அப்படி யெல்லாம் பேசினார்கள்! சரித்திரக் கூற்றெல்லாம் யதார்த்தம் என்றல்லவா ஏமாந்தேன்.

அ:—உன் போல் ஏமாந்த சோணகிரிகள் இருந்தால், இது மட்டுமா எழுதுவார்கள்? அவர்கள் தம்மட்டில் எது வானாலும் எழுதிக் கொள்ளட்டும். பணம் பறிக்கும் விபசாரி அயல் வீட்டுக் காரியைப் பழிப்பதுபோல், காஷாய உலகை எப்படியானால் பழிக் கட்டும். இவை எல்லாம் போதாதென்று, தாம் ஏமாந்ததல்லாமல் மூக்கறையன் போல் ஊராரையும் ஏமாற்றுவதற்குப் பார்க்கிறாரே அந்நூலாசிரியர். அவர் ரமணவிஜயம் 15-ஆம் பக்கத்தில் ஒரு "ஜோதி லிங்கத்தையே கண்ணாரக் கண்டது; பகவானுடைய தலை லிங்கம் போன்றது; சுகாசனத்தில் இருந்த கால்கள் ஆவிடை போன்றன. மூன்று மடிப்புகளுடன் உயர்ந்த பொன்னார் மேனி லிங்கத்தின் உடல்போன்றது. இக்காட்சி மன மயக்கமல்ல. அப்படியே கண் டது. சற்குருவும், ஜோதிலிங்கமும், ஜோதிமலையும் ஒன்றெனத் தெளிந்தது. இச்சிவபோத மெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்க் கிடக்கிறது, எடுத்த தேகம் விழுமுன் புசித்து 'இன்புறுவதற்கு சேரவாரும் ஜெகத்தீரே" என்று ஏமாந்து வாலறுந்த நரி கூறியதுபோல் கூறிப் பொதுமக்களையும் அழைக்கிறார். போதாக் குறைக்கு "இவ்வேலை வெற்றி பெற, நூற்றுக் கணக்கான உண்மைத் துறவிகளும் அம்சினிகளும் (பெண் களும்) வேண்டும்" என்கிறார். இவர் கூறும் இன்பத்தை அனுப விக்கவும், வேலையை வெற்றி பெற நடத்தவும் நம்பெண்கள் அறி யாமையால் மயங்கி, அம்சினிகளாகி அலைய இடம் கொடுக்கலாமா? சரித்திரக் கூற்றெல்லாம் ஊர் சொத்தைக் கொள்ளை அடிப்பதற்குக் கையாளும் தந்திரமே. இது வொருதினுசான போலிச் சந்யாசி உலகம். ரமண விஜயம் ஒருநூலா? அதை எழுதிய எழுதுகோல்,



ரமணாசிரமத்தில் வேலையை வெற்றிபெற நடத்திய ஸ்திரீகளும் ரிஷியும்

உலகத்தையே கன்னம் வைக்கும் கன்னக்கோல். சுய நலக் கூட்டத்தாரைத் துணை கொண்டு, தம்பிக்கும், மற்ற சொந்தக் காரருக்கும் பணம் சேர்ப்பதற்குச் செய்யும் சூழ்ச்சி. என்ன குற்றம் இருப்பினும் மறைத்து விட்டு ரிஷியைப் பெருமையாய்ப்பேசி சோற்றுக்கு வழியின்றித் தவிக்கும் சோணகிரிக் கூட்டங்களும், பத்திரிகையில் விளம்பரப்படுத்தச் சில தாசர்களும், புத்தகம் எழுதவும் தோத்திரம் பாடவும் சில ஏமாளிகளும் கையாளாக இருக்கின்றனர். அவர்களுக்குள்ளும் சில கெட்டிக்காரர்களுக்குச் சுவாமிகள் சமாசாரத்தில் புளிப்புத் தட்டி விட்டது. காரியம் ஆனவுடனே, சர்வாதிகாரியால் சாமியின் புனித சீடர்கள் சிலர் வெளியேற்றப் பட்டு, வைராக்கியம் என்ற பெயரால் மாவுகரைத்துக் குடிப்பதும், பட்டினி கிடந்து சாவதுமாய் இருக்கின்றனர்.


ஆ:—போ போ! பாமரமக்கள் தாம் ஏமாறுகிறார்கள். பண்டிதர்கள்—காவ்யகண்ட கணபதி போன்ற பெரியோர்கள்... என்ன! சிவப்ரகாசம் பிள்ளை போன்ற B.A.க்களும் M.A. க்களும் என்ன! கவர்னர்களும், ஜட்ஜ்களும், சப்ஜட்ஜ்களும், வக்கீல்களும் என்ன! இன்னும் பால்பிரண்டன் போன்ற வெளி நாட்டறிஞரும், மடாதிபதிகளும் என்ன! இவர்களை எல்லாம் ஒரே அடியாகச் சுவாமிகளை நம்பி ஏமாந்த சோணகிரிகள் என்னலாமா? இவ்வளவு பேரும் எப்படி ரிஷியின் மாய வலையில் சிக்கக்கூடும்.

அ:—ஆம். அவர்கள் எல்லாம் அறிவாளிகள் தாம். சரியாக ஆராய்ந்து பார்த்தால் அவர்கட்கு உண்மை விளங்காமல் போகாது இவர்களில் பலர், பலவகையான அபிமானத்தால் ரிஷியின் குட்டுத் தெரிந்தும், தெரியாததுபோல் இருக்கலாம். தாட்சணியம், முதலில் வைத்த நம்பிக்கை, ஜாதி, சொந்தம், சுயநலம், அவகாசமின்மை அலட்சியம், போலிமதிப்புப் போன்ற பல காரணங்கள் உண்மையை மறைத்து, ரிஷியைக் கொண்டாடித் திரியும்படிச் செய்யலாம். இவர்கள் ஏமாந்தவர்களோ இல்லையோ! ரிஷி என்னமோ இவர்களை ஏமாற்றி விட்டார். அவர், தம் கள்ளக்காரியம் பார்ப்பதில் இவர்களைக் காட்டிலும் மஹாமுனி. கைகாரப் பேர்வழி! ஒரே

அடியாக ஒரு சிறு சொல்லில் எல்லாரையும் ஏமாற்றி விட்டார். ஏமாந்து நம்பி உடனிருந்து புகழ்ந்த படிப்பாளிகள் ரிஷியின் போக்கைக்கண்டு வெறுத்து அகன்று விட்டதால், ஆசிரமத்தார் மேலும் ரிஷியின் புகழைப் புதுக்கி மினுக்கி மெருகிட வேறு வழி இல்லாமல், விசிட்டர்ஸ் புக் என ஒன்றை வைத்துப் பகட்டு வேலை செய்யத் தொடங்கியுள்ளனர். விடயமறியாத வழிப்போக்கர்களில் பிரபலஸ்தர்கள் வருகையைக் கேட்டு, வலிய அழைத்துச் சென்று தாசிகள் போல் உபசாரம் சொல்லி மயக்கி ரிஷியின், பெருமையை அப்புத்தகத்தில் எழுதுவித்துக் காட்டிப் பணம் பறிக்க வழிகோலுகின்றனர். அப்புத்தகத்தை ஆசிரமத்தில் இருக்கக் கண்ட உலகம் மதிக்கும் சாஸ்திரி ஒருவர் "இவ்வுலக தந்திரப்பாட்டு வேலை ரிஷிகளிடம் கூடவா புகுந்து விட்டது" என்று ரிஷியின் யோக்யதையை வெளிச்சமாக்கி விட்டுச் சென்றதையும் கண்டேன்.

ஆ:—ஆமாம்! மகா ஆராய்ச்சிக்காரன் போல் பேசுகிறுயே! இதற்கெல்லாம் ஆதாரம் என்ன?

அ:—அப்படிக்கேள். அதுதான் அறிவாளிக்கு அழகு. இந்த ரிஷியை நம்பி ஏமாந்த பெருமாள்சாமி என்னும் சீடர் ஒருவர், ரிஷியின் ஏமாற்று வித்தையை வெளியாக்கும் பொருட்டுத் திருவண்ணுமலை டிஸ்ட்ரிக்ட் முனிசிப்கோர்ட்டிலும் வேலூர் ஜில்லாகோர்ட்டிலும் வழக்குகள் தொடுத்தார். அவ்வழக்குகளில் இந்தரிஷி—புளுகாண்டி—சாட்சியாகவும், பிரதிவாதியாகவும் வரநேர்ந்தது. அப்போது அவர் எழுதிக் கொடுத்த பிரமாண வாக்குமூலங்களாலும், விசாரணையில் சொல்லிய வாக்கு மூலங்களாலும் சீக்கிய குரு நானக் உதாசி மடத்துச் சொத்தை அபகரிக்கச் சூழ்ச்சி செய்தபோது தர்ம பரிபாலன போர்டார் நடத்திய கடிதப் போக்கு வரத்தாலும், சமீபத்தில் தம்பிக்கு எழுதிக்கொடுத்த அதிகாரப் பத்திரத்தாலும், நேரில் சென்று பார்த்து விசாரித்ததாலும் ரிஷியின் நிஜ ஸ்வரூபம் இன்னது என்று தெரிந்து கொண்டேன். அவை, இந்த ரிஷி பசுத்தோல் போர்த்த புலி—கோவணங் கட்டிய கள்வன்—என்பதை வெட்ட வெளிச்ச மாக்கி விட்டன. அவ்வழக்கு விவரம்



ரமண ரிஷியின் நிஜஸ்வருபம்

சுதேசமித்திரனில் 27-10-36 முதல் தொடர்ந்து வெளியாகி உள்ளதையுங் காணலாம். நான் இப்போது மறுத்தும் தழுவியும் கூறும் விஷயங்கள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ரிகார்டுகளிலும் ரமணாசிரமத்தார் திருத்தமாக வெளிப்படுத்திய தமிழ் ஆங்கில சரிதங்களிலும், ரிஷி இயற்றிய நூலிலும் உள்ளவை. மற்றும் பலரிடத்து விசாரித்தும், நேரில் கண்டும் அறிந்து கொண்ட உண்மைகளைப் பின் சொல்லுகிறேன். அவற்றால் விளங்கும் பொய், புனை சுருட்டு, பித்தலாட்டம், ஏமாத்து, ஏய்ப்பு, மாரூட்டங்களை எல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டுவா. பின் ரமணரிஷிகள் நிஜஸ்வரூபத்தை அறிந்து ஆட்பட்டு அடிமையேனும் செய்; அல்லது எவ்வாறேனும் செய், உன் இஷ்டம். ஆனால் நல்லறிவை நம்பிக்கையால் நாசமாக்காதே.

ஆ:—ரிஷிகள்மேல் வழக்கா! ஜெயம் யார் பக்கம்?

அ:—வாதி பிரதிவாதி இருவருமே ஜெயித்து விட்டார்கள். பெருமாள்சாமிக்கு முழு வெற்றி; ரிஷிக்குப் பாதி வெற்றி. எப்படி என்றால், பெருமாள்சாமி ரிஷியின் பித்தலாட்டங்களை வெட்ட வெளிச்சமாக்கவே வழக்குகள் தொடுத்தார். அவர் நோக்கம் பூரண வெற்றியோடு நிறைவேறி விட்டது. ரிஷியும் ஊர்ச் சொத்தைத் தமக்குரிமை யாக்கித் தம்பியையும் பிள்ளை குட்டிகளையும் ஆளாக்கிச் சொந்தப் படுத்த நினைத்தார். அவர் நோக்கமும் அரை குறையாக ஒருவாறு நிறைவேறி இருக்கிறது. அவர் "ஆஸ்ரம சொத்தெல்லாம் தமக்கே சொந்தம்; பொதுவான தர்ம சொத்தல்ல" என்று இனிமேல் பயமின்றிச் சிறிது தைரியமாய்ச் சொல்லிக் கொள்ளக் கூடும். தர்ம சீலர்களும் பக்தர்களும் அறிவு பெற்று மனம் வைத்தால் ரிஷியின் ஜெயம் அம்பலமாகும். இல்லாவிட்டால், ரிஷிகளுக்கும், தம்பிக்கும், அவர் சுற்றத்தார்க்கும், சாதி சனத்தார்க்கும் கொண்டாட்டம்; பக்தர்கள், சீடர்கள், அபிமானிகள் எண்ணிய எண்ணத்துக்கெல்லாம் திண்டாட்டம்.

ஆ:—அப்படியா! எப்படி ஒரே வார்த்தையில் எல்லாரையும் ஏமாற்றிச் சொத்தைத் தன்னுடையது என்கிறார்? இவர் தான்

சந்நியாசி ஆயிற்றே. பணத்தைக் கையால் தொடுவது இல்லையே; சந்யாசி ஆகும்போது கையிலிருந்த ரூபாய் மூன்றரையையும் எறிந்து விட்டார் என்று சரிதம் கூறுகிறதே.

அ:—சரிதத்தில் கூறுவதெல்லாம் சரியாக இருக்கவேண்டுமா? பொய் மதிப்பும், புகழும் பெற அல்லவா அவை எழுதப்பட்டன? கபடமற்றுச் சில காசுகள் பிச்சை எடுக்கும் காஷாய உலகை நிந்தித்தது உலகை ஏமாற்றிப் பெரும் பொருள் திரட்டும் மற்றொரு படித்த கெட்டிக்காரப் புளுகாண்டியின் கபடநாடகச் செய்கையே. "ஸர்வசங்க பரித்யாகம் செய்தான். ஆடையைக் கிழித்து ஒருகோவணம் மட்டும் அணிந்து மீதியை அதில் முடிந்த பணத்துடன் வீசி எறிந்தான். ஜாதிச்சின்னமான பூணூலையும் அறுத்து விசினன். மண், மனை, தானியம், பாண்டம், துணைவர் நண்பர், உறவினர், வாகனம் பீடம், பாய், ஆடை, பணம், அபிமானம், புத்தகம், எழுத்து, படிப்பு ஆசை, சிந்தை, ஜாதி, ஆசாரம், ஸமயம், பேச்சு அனைத்தையும் பீடை என எள்ளித்தள்ளி, ஓடும் செம்பொனும் ஒன்றாகக்கண்டான்; பால சந்யாசி ஆய்விட்டான். நமது பாலஸ்வாமிகள் தம்முள்ளேயே மோனத் தனிமையை அழைத்தார். தவராஜர் கூட்ட முள்ள கோயிலிற் றவம் தொடங்கினர்." (பக் 117) என்று சரிதம் மட்டுமா கூறுகிறது? ஹைகோர்ட் ஜட்ஜ் பதவியும் பட்டமும் பெற்ற அறிஞர் ஒருவர் "சுவாமிகள் உலகப் பொருளில் ஆசை இல்லாத அத்யாத்மீக மகான் என அறிவேன்!" (I understand the Swamigal-First defendant-to be a great spiritual personage who has not the desire for material things) என்று சாட்சியும் கூறியுள்ளார். இன்னும் அவரே, ஆங்கில சரித முகவுரையுள் சுவாமிகளின் சந்யாசிச்சிறப்பை வானளாவப் புகழ்ந்துள்ளார். மேலும் அவர் இச்சந்யாச விவேகத்தில் தாம் கொண்ட உறுதியால், 1000 ரூபாய்க்கு மேல் "மகரிஷியின் விவேகத்திற்கேற்ப உபயோகித்துக் கொள்ளுமாறு" (The contributions aforesaid made by me were intended by me as offerings to the swamigal to be utilised by him according

to his discretion—) அள்ளிக்கொடுத்தும் இருக்கிறார். ஆனால் இந்த எண்ணத்திலும் தன் விவேகத்திலும் இடி விழச் செய்து விட்டார் ரிஷிகள். எவ்வாறெனின், இப்படிப் பக்தர்கள் சந்யாசி எனக் கருதிக் கொடுத்த சொத்தை எல்லாம் தன்னிலும் விவேகியாய் தன்னுடன் பிறந்த விவேகமற்ற தம்பி ஒருவர்க்கு அதிகாரப் பத்திர மூலம் எழுதி வைத்து விட்டார். பின்னும் அந்த ஜட்ஜ், ரிஷி உலக விஷயங்களை வெறுத்தவர் என்று நம்பியதற்கு மாறாக, விசாரணையில் "சொத்துக்களை வைத்துக்கொள்வது உலகு சம்பந்தம் என நான் ஒத்துக்கொள்கிறேன். உலக விஷயங்களை நான் வெறுக்கிறதில்லை" என்று ரிஷி திருவாய் மலர்ந்தருளிவிட்டார். இதை விட நம்பிக்கை மோசம் வேறுண்டா? சந்யாசிகளுக்குரிய சட்டத்தின்படி அதாவது "சந்யாசியின் சொத்து சீடர்களுக்குரியது. முன்னைய குடும்பத்தார்க்கு உரியதல்ல" என்பதற்கேற்பச் சொத்து அந்நியர்க்குப் போய்விடுமே என்ற பயம். அதனால் ரிஷி, நான் சந்யாசி அல்ல வென்று நாணமின்றிப் பச்சையாகப் புளுகிவிட்டார். "வெட்கம் போனாலும் போகட்டும் தொப்பை நிரம்பினால் போதும்" என்பதுதானே பிழைக்க வழியற்று வெளிக்கிளம்பும் சோம்பேறிக் கூட்டத்தின் மோசமான எண்ணம். இப்போதாவது இந்த ரிஷி, தந்தையற்றுக் கஷ்டப்பட்டு, வீடு வாசல்களைத் தோற்று, அந்நியர் தயவால் மதுரையில் வந்து, சிரமப்பட்டு வயிறு கழுவ வேண்டிய நிர்க்கதியான தரித்திர நிலை தாங்காது சந்யாசப் போர்வையில் புகுந்தவர் என்பது தெரிந்ததா?

ஆ:—எது மிகவும் மிஞ்சிப் பேசுகிறாய். அவர் "நான் சந்யாசி அல்ல" என்று எங்கும் கூறவில்லையே. இதற்கு வீரத் துறவு என்னும் அத்யாயம் ஒன்றுமே போதுமே. மேலும், அவரே பாடிய அக்ஷரமண மாலையில் தான் உலக மயலைப் போக்கி மொட்டை அடித்துக் கொண்டதை "மைமயல் நீத்து அருள்மையினால் உனது உண்மை வசம் ஆக்கினை" "மொட்டை அடித்து எனை வெட்ட வெளியில் நீ நட்டம் ஆடினை" என அருணாசலன்மேல் ஏற்றிக் கூறிக் குறிப்பிக்கின்றாரே. மேலும் தனக்கு உலகப் பற்றில்லாதது

பற்றி அருணசல பஞ்சரத்ந பதிகங்களில் " ஆவி உடல் கொண்டாய் எனக்கோர் குறை உண்டோ" எனவும், "மகி(உலகம்) மாயையென் ஆழ்கடல் வீழ்ந்து யான் ஆழ்ந்திடும் முன் இழுத்து உன் பதத்தில் இருத்தினை" எனவும், "இவ்வுலகினைத் தலையில் பற்றியான் பெற்றது போதும்" எனவும் கூறுகிறாரே. போதாக் குறைக்கு உலகத்தவர்க்கும் "பொருள், நாடு, சுற்றமொடு வருணாதி பற்றி, உள்ம் மருள்நாடல் (மன மயக்க முறல்) அற்று, அருள் நாடி நிற்குமவர்" சுகம் பெறுவர் எனத் தன் அநுபவத்தைக் கூறுகிறாரே. இவ்வள விருக்க, சந்யாசி அல்ல என்று கூறிவிட்டார் என்று நீ சொன்னால் உன் வார்த்தையை யார் நம்புவார்கள்?

அ:—ஆம். என் வார்த்தையை நம்பமாட்டார்கள். ஏழைப் பேச்சு அம்பலம் ஏறுமா? செட்டிக்காரன் புளுகு பட்டப்பகல் போல் வெளியாகும்போ தல்லவா யாரும் நம்புவார்கள். நான் கூறுவன எழுத்துருவமாக உள்ளவை. ரிஷி சாட்சிக்காரன் காலில் வீழ்ந்து ரூபிப்பவை. ரிஷி எழுதிக் கொடுத்த பிராமண வாக்கு மூலத்தில் இருப்பவை. அவை "பிரதிவாதியை—ரிஷியை—சந்சாசி என்று வரையறுப்பது சரியல்ல. அவர் குருவும் அல்ல உபதேசியும் அல்ல, அவர்க்கு சீடரோ அநுசரிப்போரோ இல்லை" என்பனவே.

ஆ:—என்ன! இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் இருக்கிறதே! இது உண்மையானால் இது போன்ற திருட்டுச் சந்யாசம் எதுவுமே இல்லை.

அ:—அந்தப் புளுகைத் தான் முன் பின் மாறுபாடில்லாமல் பொருந்தப் புளுகினரா? அதுவும் இல்லையே பாவம்! தம்பிக்குக் கொடுத்த அதிகாரப் பத்திரத்தில் ரிஷி, தன்னை "ரமண மஹரிஷிகள் என விளங்கும் சாமி அல்லது பிராமண சாமிகள்—கிருகஸ்தர் விஷயத்தில் குறிக்கப்படுவதுபோல் குறிக்கச் சாதியும், மதமும், தொழிலும், பிறவும் இல்லாதவர்—" எனக் கூறிக்கொள்ளுகிறார், பின்னும் அதில் தன் தம்பியைச் சிஷ்யன் என்றும் ஏற்றுக் கொள்கிறார்.

ஆ:—ஆம். பூணூலை அறுத்தெறிந்த பின் இவர்க்குச் சாதி எது? மரபேது? ஆசாரமேது? உண்மைதானே. ஆனால் ரிஷி "நான் குருவுமல்ல எனக்குச் சிஷ்யனுமில்லை" என்று கூறியது மட்டும் பிசகுதான்.

அ:—சரிசரி! நீ அவர்க்குச் சாதி இல்லை என்று சரிக்கட்டப் பார்த்தால், ரிஷி என்ன சுலபத்தில் விட்டு விடுவாரா? குறுக்கு விசாரணையில் "நான்பிராமணசாதி. எனக்கு உபநயனம் ஆய் விட்டது." என்று சாதி ஆசாரப் பெருமையைப் பாராட்டிக் கொண்டாரையா? சரியான உண்மை விஷயங்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் எதன் பொருட்டும் மாறா. ஊரை ஏமாற்ற ஒரு பொய் சொல்லி விட்டால், அதை உருப்படுத்த ஒன்பது பொய் சொல்லித் தீரவேண்டும். மட்டுமரியாதை பார்த்தால் சட்டம் சும்மா விடுமா? ஆனால் ரிஷிகள் சாமாரியாகப் பொய் சொல்லி அதிகாரிகள் தய வால், சூழ்ச்சியால் சட்டத்தையும் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிட்டார்.

ஆ:—"பிராமணன், பூணூல் போடப்பட்டது" என்று முன் னைய நிலைமையைக் கூறுவது குற்றமா? பின்னர், இவர் "சிகை யக்ஞோப வீதங்களைக் களைந்து முண்டனம் (மொட்டை) கொண்டு ஐயமற்ற அதி வருணஸ்ரமி யாகிவிட்டார்" என்பதாலல்லவா அவர்க்குச் சிறப்பெல்லாம் வந்தது. சீரெல்லாம் பெற்றார். பேரும் பெருகிற்று.

அ:—அதிவர்ணஸ்ரமியா? அப்படி இன்னொரு தரம் கூறாதே. மஹாரிஷி மண்டையை உடைத்து விடுவார். கதையில் கள்வர்க்குங் கருணை! பொறுமை! பொறுமை! சாந்தம் சாந்தம்! என்று சரடு விட்டிருப்பதைக் கண்டு மயங்காதே. சாமிக்குக் கோபம் வந்து அடித்தால் எப்படி இருக்கும் என்பது எச்சம்மாளைக் கேட்டால் தெரியும். அல்லது சீடர் தண்டபாணி சாமியின் முதுகை விசாரித்தால் விளங்கும். தம்பியை வெறுத்துச் சாமி யால் அடி வாங்கிய தண்டபாணியும், எச்சம்மாளும் பொய் சொல்ல மாட்டார்கள் என எண்ணுகிறேன். ஆனால் முழுப்பொய் மூர்த்தி—

ரிஷியின் கரப்பரிசத்தால் அவர்களும் அடித்தது ஞாபகம் இல்லை, ஒரு வேளை அடித்திருக்கலாம் என்று அரைப்பொய்யேனும் சொல்லக் கற்றுக் கொண்டிருக்கலாம். யார் கண்டார்? போகட்டும். இன்னொரு தடவை அதிவர்ணாஸ்ரமி என்று நினைத்து அபசாரப் படாதே. எல்லார் நினைவையும் புத்தகம் படிப்பதுபோல் படித்தறிந்து விடுவார் ரிஷி. அவர் ஸர்வாந்தர்யாமி. சாபம் கொடுத்தால் சாம்பலாக வேண்டியதுதான். சட்டத்தை ஏமாற்ற, ரிஷி இப்போது ஒரு புது யுக்தி கண்டுபிடித்து விட்டார். அதன்படி, அவரை அத்யாஸ்ரமி என்று சொல்லியாகவேண்டும். இந்த அத்யாஸ்ரமத்தைப்பற்றி ரிஷி சொல்வதைப்பார். நான் இருப்பது அத்யாஸ்ரமம்; அதாவது வாழ்க்கையில் இருக்கும் எதிலும் சேராதது ஆஸ்ரமம். ஆத்யஸ்ரமம் சாஸ்திரத்தில் இருக்கிறது. இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்கள் எனக்கு யாரும் தெரியாது. அத்யாஸ்ரமம் பற்றி விவரம் சூதஸம்ஹிதத்தில் இருக்கிறது. அதில் அத்யாஸ்ரமத்தினுடைய நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைகள் தான் நான் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறேன். அத்யாஸ்ரமத்தில் இருக்கிறவர்கள் பிரியமிருந்தால் சொத்து வைத்துக் கொள்ளலாம். எந்த ஆஸ்ரமத்துக்கும் குரு உண்டு. அத்யாஸ்ரமத்துக்கும் குரு உண்டு. ஆனால் என் ஆத்மாவுக்கு என் ஆத்மா தான் குரு. புராணங்களில் அத்யாஸ்ரமம் அனுஷ்டித்தவர், சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். சூதஸம்ஹிதத்தில் அதாவது கந்தபுராணத்தில் இந்த விஷயங்கள் தெரிவித்திருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் என்னுடைய சொத்தென்று ஒருவர் சொல்லிக்கொள்ளலாம். இந்தமாதிரி சொத்துக்களை இதராளுக்கு டிஸ்போஸ் செய்ததாகவும், அத்யாஸ்ரமத்தில் சொல்லி இருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் இருப்பவர்களுக்கு நித்ய கர்மாநுஷ்டானங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.''

ஆ:—அட தெய்வமே! நான் சூதஸம்ஹிதையைப் பல முறை கரைத்துக் குடித்திருக்கிறேன். அதில் அத்யாஸ்ரமத்தைப்பற்றிப் பின்வரும் வாக்கியங்கள் தான் காணப்படுகின்றன. அவை ''அத்

பாஸ்ரமிகளாய் இருக்கிற சாந்தர்களால் பிரமஞானம் சொல்லப்பட வேண்டியது. சாந்த மற்றவனுக்கும், புத்திரனில்லாதவனுக்கும் இதை ஒரு பொழுதும் சொல்லக்கூடாது. அக்னி என்றல் முதலிய மந்திரங்களால் பஸ்மதூளனமும், திரிபுண்டரதாரணமும் அத்யாஸ்ரமமென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள் என்பன. இதின் உரையாசிரியர் வித்யாரண்யசாமிகள் சிவமந்திர ஜெபமும், சிவபூசை முதலியவைகளும் அத்யாஸ்ரமம் என்று அங்கீகரிக்கிறார். இவை தவிர ரிஷிகள் சொல்வதுபோல் அத்யாஸ்ரமம் வாழ்க்கையில் சேராததென்றோ, அத்யாஸ்ரமிக்குச் சொத்து, மனைவி உண்டென்றோ கூறப்படவில்லை. ரிஷியோ "அத்யாஸ்ரமிகள் சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். பிரியமிருந்தால் அத்யாஸ்ரமி கலியாணம் கூடச் செய்துகொள்ளலாம்" என்று சாதிக்கிறார். சூதஸம்ஹிதையில் கௌதமர் சொத்து வைத்திருந்த செய்தியைக் குறிப்பாக அறியலாம். அதையே ரிஷி குறிப்பிடுகிறார் என்று எண்ணுகிறேன். இவர் பிறந்த திருச்சுழி தலத்தையும். புகுந்த திருவண்ணாமலையையும் கௌதம முனிவர் வழிபட்டவர். அதனால் ரிஷியும் "கௌதமர் போற்றும் கருணைமாமலையே" எனப் பாராட்டிப்பாடியுள்ளார். ஆகவே கௌதமரிடம் இவர்க்கு அபிமானம் உண்டாவதும் இயல்பே. அச்சூதஸம்ஹிதையில் கௌதமர் அத்யாஸ்ரமி என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. அக்கௌதமர் வரலாற்றையுங் கூறுகிறேன் கேள். அந்த ஆபாச கதையைக் கூறவே நாவெழவில்லை. அதன் சுருக்கம் பின்வருவது:—"அந்தஸ்துள்ள பிராமணர் சிலர் பஞ்சகாலத்தில் கௌதமரிடம் சென்றனர். அவர் ஆசிரமம், தவத்தால் சுபகரமாய் இருந்தது. கௌதமர், சென்ற சம்சாரிகளுக்குத் தான்யம், தனம், வஸ்திரம், எள்ளு, எண்ணெய், பசுக்கள் முதலியன கொடுத்தார். திரும்பும்போது அந்நன்றி கெட்ட பிராமணர்கள் அவர்க்கே துரோகம் செய்தார்கள். அதனால் முனிவர் அவர்கட்குச் சாபம் கொடுத்தார். அச்சாபங்களுள் சில கீழ்வருவன:—1. தன் பார்யையிடம் புணர்வதிலும், பரஸ்திரீகளைத் தள்ளுவதிலும் சிரத்தை இல்லாமல் இருக்கவேண்

டும். 2. எப்பொழுதும் பிதா, மாதா, புத்திரன் ப்ராதா, பந்துக்கள், பாரியை—பெண்சாதி முதலியவர்களை விக்ரயம் செய்து கொண்டிருக்கக் கடவீர்கள். 3. தேவதீர்த்த வேதவிக்ரயம் செய்து காலங்கழிக்கக் கடவீர்கள். 4. உங்கள் வம்சத்தில் உண்டாகிறவர்களும் நான் சபித்துச் சொன்ன பிரகாரம் இருக்கட்டும். இன்னும் இப்படிப்பட்ட கொடிய ஆப்ாசமான சாபங்கள் பல. சொல்ல வாய் கூசுகின்றது.

அ:—அடடா! இந்த வரலாற்றையா தனக்கு ஆதாரமாகக் கொண்டு ரிஷி தம்மைச் சேர்ந்தவர்களையே சந்தி சிரிக்கச் செய்துவிட்டார்? நல்லது! நல்லது! ரமணாஸ்ரமத்திலும் இக்கதையின் முற்பாகம் நடந்தேறி விட்டது. பிற்பாகந்தான் பாக்கி. எனக்கென்ன தெரியும் ஈதெல்தாம்? நீ தான் புத்தகப்புழு. போகட்டும் இப்பொழுதாகிலும் சொல். ரிஷிகள் யோக்யதை எப்படி? அவர் கூறியதுபோல் சொத்து சுதந்திரம் முதலிய எல்லாவற்றையும் எற்று எண்ணத்தை முடித்துக்கொண்டார். ஆத்யாஸ்ரமி எது செய்தாலும் குற்றமில்லை. அவரைத் தடுப்பவர் யார்? ஆம் அத்யாசிரமி ஏதோ மந்திரம் ஓதவேண்டுமென்றுயே! அது என்னமந்திரம். சுவாமிகள் அம்மந்திரம் அறிவாரா? சரித்திரம் இது பற்றி ஏதேனும் சொல்கிறதா? பூசை செய்வாரா?

ஆ:—யாருக்குத்தான் மந்திரம் தெரியாது? புத்தகத்தைப் புரட்டினுல் ஏல்லாம் தெரிகிறது. அநுபவம் தான் அரிது. ரிஷிக்கும் மந்திரங்கள் இம்மட்டில் தான் தெரியும். அவர் ஒன்றும் மந்திரம் தந்திரம் செய்யாமலே எடுத்தவுடனே திடீரென்று ஆத்மஸ்வரூபத்தில் ஆழ்ந்துவிட்டவர் அல்லவா! அவரை யாரேனும் மந்திரத்தைப்பற்றி ஏதேனும் கேட்டால், யுக்தியாக எதையேனும் சொல்வார். இதை ரமணகதை படித்த எல்லோரும் அறிவர். மேலும் அவர் "உருப்போடாவிட்டால் மந்திரத்தால் பயனில்லை" என்னும் அரிய உண்மையை வெளியிட்டுப்பின் "மந்திரம் பெற விருப்பமில்லை" என்றவராயிற்றே. இன்னும் மந்திரம் முதலியவற்றில்

"அவரவர் இயல்பிற்கேற்ப அவரவரை சுயேச்சையாக விடுத்து பின்னர் 'நானார்' என்னும் விசார மார்க்கத்திற்கே திரும்புவது ஸ்வாமிகளின் உபதேசமுறை" என்று ரமணவிஜயமும் கூறும்.

அ;—சரி. சரி. மேலும் இவர் "நான் பூஜை எதுவும் செய்வதில்லை. பூஜை செய்வோர் அருகில் இருப்பதுண்டு." என்றும் குறுக்கு விசாரணையில் கூறி இருக்கிறார். இவற்றைக் கொண்டு பார்த்தால் அவர் அத்யாஸ்ரமி அல்லவென்றும் தெரிகிறது. எதுவோ சமயத்திற்கேற்ப மாறிப் பேசும் பலவற்றுள் இதுவும் ஒன்று. ரிஷி பேச்சில் உண்மை ஆராய்வது மணல் சோற்றில் கல்லாராய்வது போலும். இவ்வாராய்ச்சி 'நானார்' என்னும் ஆராய்ச்சியிலும் அரிது. எந்த மடையனும் 'ஐயே அதிசுலபம் ஆன்மவித்தை' என்று எளிதாய்க் கூறித்திரியலாம். அவர் வாக்கில் உண்மை காணும்வித்தை அப்பப்பா! எவர்க்கும் அரிது! அரிது.

ஆ:—ஆமாம். இந்த வழக்குத் தொடுத்தவர் ஆங்கில சரித்திரத்தில் "பெருமாள்சாமி முதலிய சீடர்கள் தாயைச் சமாதி செய்தனர்" (பக். 136) எனக் கூறப்படும் பெருமாள்சாமி தானே? அவர் வழக்குத் தொடுக்கக் காரணம் என்ன?

அ:—ஆமாம் ஆமாம்! தாயைச் சமாதி வைத்தது மட்டுமா? சமாதி வைத்த இடத்தை (15-அடி சதுரம்) முதல் தன் பேருக்குச் சிக்பாவாஜிக்குச் சமாதானம் சொல்லி எழுதி வாங்கியவர் இப்பெருமாள்சாமி தான். தன் தகப்பனுக்கு மனைவியாய்த் தன்னைப் பெற்ற தாய்க்குக் கிரியை செய்யாதவரேனும் ரிஷியின் தாய்க்கு 10ஆம் நாள் கிரியையைச் சொந்தச் செலவிலேயேபிறருடையபண உதவி இன்றிச் செய்தவர். அழுவாரற்று நடுப்பாரற்றுக் கிடந்த தாயின் அழுகல் பிணத்தை மாதுரு பூதேசுவாராகும்படி சமாதி கட்டமும் கட்டியவர். தம் கைப்பணத்தோடு பிறரிடமும் பணம் வசூலித்துக் கந்தாசிரமப் (பழய ரமணாசிரமம்) கட்டியவர். ரிஷியின் உருவம் செய்து வணங்க நினைத்தவர். சமயத்தில் ரிஷியால் பலவிதம் புகழப்பட்டவர்—பாராட்டப் பெற்றவர். ரிஷியின் மலமூத்

திரங்களை வியாதிகாலத்தில் (தம்பி, தாய் முதலியோர் அருகிருந்தும் நெருங்காமல் அநாதரவு செய்தபோது) உடனிருந்து வாரி எடுத்து வைத்தியம் பார்த்தவர்' ரிஷியின் விருப்பமறிந்து ரமண ஜெயந்தி உற்சவம் கொண்டாடியவர். ரமணோற்சவ ஊர்வலம் நடத்தி ரிஷிக்குப் புகழும் பொருளும் தேடித்தந்தவர். "சில பண்டாரங்கள் ரிஷியைத் தூக்கிச்செல்லவந்தபோது திருச்சி எத்தர்க்குச் சரியான தஞ்சை எத்தராய், விடாமுண்டர்க்குக் கொடாமுண்டராய் வந்து, ரிஷியை ஆபத்திலிருந்து காப்பாற்றிய திடசாலி." (பக். 187) எதிர்வழக்காடும்போதும் "சுவாமிகள் பொய் சொல்லமாட்டார்" என உறுதியாக நம்பிக்கூறி ஏமாந்தவர். அவை எல்லாம் பலபடக் கூறிப் பயன் என்ன? ரிஷி அவர் செய்கைகள் பலவற்றையும் மறுத்துக் கூறிவிட்டார். ஊர்சனங்கள் எல்லாம் அறிய, சமாதி வைத்ததையே மறுக்கும்போது மற்றவை எம்மாத்திரம்? பிணம் கிடந்தபோது எந்தப் பிராமணன் எடுக்க முன்வந்தான்? பெருமாள்சாமி இல்லாவிட்டால் தாயின் சவத்தை நான்தானே தலையில் போட்டுக்கொண்டு தவிக்கவேண்டும்" என்று, தம்பியிடம் அன்று திருவாயால் கூறியது போல், இன்று பக்தர்கள் எல்லாம் சமாதி செய்தனர் பெருமாள் சாமியும் அவர்களோடு இருந்திருக்கலாம்" என்றுவெறுவாய் திறந்து உளறுகிறாரே! சிறிய சமாதிக்குழி, பலர் இருக்க இடம் கொடாதே அச்சிறுகுழியில் இறங்கிப் பிணத்தை வைத்தவர் யார் எனுங் கேள்வி எழுமே என்பதையுங் கூடக் கவனியாமல் பொய்கூறி விட்டாரே. இது சனங்கள் கவனத்திற்குக்கூடவாராது என்று நினைத்துக்கொண்டாரா? ரிஷியின் உருவம் செய்ய சென்னை ஆர்டிஸ்ட் உயர்திரு. நாகப்பா அவர்கள், நேரே வந்து திரும்பித் திரும்பிப் போட்டோ எடுக்க அநுமதித்து விட்டு, இப்போது விக்ரகசமாசாரமேஅடியோடு தெரியாது என்கிறார். திருவண்ணாமலை ஈசான்ய மடாதிபதி ஸ்ரீமத் நடேச சாமிகளிடம் தனலக்ஷ்மி ஆர்ட்ஸ் விளம்பரத்தைப் பத்திரிகையிலிருந்து கத்திரித்து எடுத்துக்கொடுத்து இவ்விடம் சென்றால் சுருக்கமான செலவில் விக்ரகம் முடியும் எனக்கூறிக் கடிதமும் சென்னையிலிருந்த பெருமாள்சாமிக்கு எழுதச் செய்தார். இப்

போது இவை எல்லாம் இல்லை இல்லை என்கிறார், இந்தச் சீடர் தான் இப்படி ஆனாரே மற்றவர்களில் யாரேனும் உருப்பட்டவர்கள் உண்டா?

ஆ:—ஏன் இல்லை? சூப்ரவைஸர் ராமசாமி அய்யர் நோய் நீங்கவில்லையா? அவ்வரலாற்றை விஜயம் 260 ஆம் பக்கத்தில் கீழ் வருமாறு விரிக்கிறதே. "ஒரு நாள் ரமண ஸந்நிதியில் படுத்திருக்கையில் ஒரு ஒளி ஓட்டம் பகவானிடமிருந்து தம்முள் புகுந்ததாகக் கண்டார். அவருக்கு எப்போதும் அஜீரண நோவு. உறக்கம் வருவதில்லை. பகவானிடம் நோயைச் சொன்னதும், உடல் சுகம் ஏற்பட்டது. அன்று பகவான் விருந்தளித்தும் 'வயிற்றில் ஒரு நோவும் இல்லை. அயர்ந்து தூங்கினார். எத்தனை மருந்து தின்றும் போகாத நோய் அன்று தீர்ந்தது"

அ:—'தம்பி! என் பசிக்குக் கஞ்சி ஊற்றினால் உனக்குப் பசிக்காத வரம் தருகிறேன்' என்பது போலல்லவா இருக்கிறது இது. பகவான் தன் தலையாட்டத்திற்குக் காரணமான நோயைத் தீர்க்க வழி இன்றித் தவிக்கிறார். அவர் காசநோய் நீங்கக் கண்ட மருந்தெல்லாம் தின்றாய்விட்டது. அதனால் வயிற்றுக்கடுப்புக் கண்டு பட்ட அவஸ்தை பகவானுக்கே தெரியும். இந்த அய்யர் மருந்து கொடுத்து ரிஷிக்கு நோயையல்லவா உண்டாக்கினாராம். முதலில் தாய்க்கு உண்டான நோய்தீர மருந்தெல்லாம் கொடுத்து ஆனவரை பார்த்தாய் விட்டதாக ரமணவிஜயம் கூறுமே. இந்த லக்ஷணத்தில் ரிஷி பிறர் நோயைப் போக்குவதெப்படி?

ஆ:—பகவானைப் பற்றிப் பல காட்சிகளைக் கண்ட லக்ஷ்மி அம்மாள் பாக்கியமே பாக்கியம்!

அ:—லக்ஷ்மி அம்மாளா? இந்த அம்மாளை எச்சம்மாள் என்பார்கள். இந்த அம்மாள் இளம்பெண்ணாக இருக்கும்போதே புருடனை இழந்து, துயர் ஆறாது ரமணாஸ்ரமத்தை அடைந்து இன்பம் பெற்ற புனிதவதி என விஜயத்தில் (பக். 261) படித்திருப்பாயே. இந்த அம்மாள் சமாச்சாரந்தான் அபாரம்! இப்புனித

வதி பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பணத்தோடு பகவானிடம் வந்து உணவுத்தொண்டு செய்தவள். அம்மை இப்போது ஆஸ்ரமத்தில் படும் அல்லலெல்லாம் ஆண்டவனே அறிவான். அம்மை கையில் இருந்த காசும் கரைந்தது. விருத்தாப்பியம் மேலிட்டு விட்டது. இனிமேல் இவ்வம்மையால் என்ன பயன் என்று, அம்மையாரிட்ட திண்டியைத் தின்றுகொழுத்த ரமணாஸ்ரமத்தார், இப்போது சமையல் கட்டில் நுழையக்கூடாதெனக் கண்டிப்பாகக்கூறித் தடுத்துக் கஷ்டப்படுத்துகின்றனர். இந்த அம்மாள், தன் இளமைக்காலத்தில் பகவான் கையால் அடியும் உதையும் பட்டவள் செல்லம்மாள் என்னும் இப்பெண் இறந்ததைக் கேட்டுத்தான் "பகவான் விம்மி அழுதாராம்" (பக். 262) என்று ரமண விஜயமும் கூறும். பாவம்! தாய் இறந்த போதும் சந்தோஷம் கொண்டாடியவர், இத்தையல் இறந்தபோது விம்மி விம்மி அழுவானேன்? காரணம் பகவானுக்குத்தான் தெரியும். இப்படியே அலங்காரத்தம்மாளும், மருமகளும் கணவன் பணிவிடை தவறினும் ரிஷியின் பணிவிடைக்குக் குந்தகம் இல்லாமல் தொண்டு புரிந்து வறுமையுற்று வாடுகிறார்கள்.

ஆ:—மஹரிஷிகள் உருவை ஜோதிமயமாகக் கண்ட சாந்தம்மாள் எப்படி? (பக். 262)

அ:—இவ்வம்மாள் தான் இனிமையாகப் பாடியும், சமையல் சிறக்கச் செய்து இன்சொல் கூறியும் உணவூட்டுபவள். ரிஷிகளையும் விசேடமாகத் தம்பி சர்வாதிகாரியையும் திருப்திப்பண்ணி சமையல் கட்டிற்கும், இளம்பெண்கள் கூட்டத்திற்கும் தலைவியாய் சர்வாதிகாரிக்குமேல் சர்வாதிகாரியாய் இருப்பவள். பெண்களை வசப்படுத்தி ஆஸ்ரமத்துக்கு மகிழ்வூட்டுபவள். வரும்பெண்களுக்கு "பரோபகாரார்த்தம் ஹி,ம் சரீரம்" என்னும் ஞானம் கைவரக் கூட்டுபவள். இவ்வம்மையார் இல்லையானால், தம்பி—சர்வாதிகாரி—நிரஞ்சனானந்த சுவாமிகட்குக் கால் பிடிக்கவும், உடம்பழுத்தவும், எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டவும் இளம் பெண்கள் எவரும் தைரியமாய் முன்வரமாட்டார்கள். இவ்வம்மாள் சொற்படி கேட்டிருந்தால் திருமங்கலம் அய்யர் மகளுக்குச் சர்வாதிகாரி

யின் தடபுடலால் கை ஒடிந்திருக்காது. வேலூர் வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. சுகமும் ஏற்பட்டிருக்கும் எனக் கேள்வி. இப்பெண்ணின் இசையிலும், அழகிலும் ஈடுபட்டுக் கள்ளத்தனமாக எழுதப்பட்ட காதற் கடிதம் ஆஸ்ரமத்தில் கண்டெடுக்கப்பட்டு கலவரப்பட்டதும் உண்டு. கலவரத்திற்குப் பின்னும் இவ்விளமங்கையின் சம்பந்தத்தை ஆஸ்ரமம் இழக்க வில்லை.

ஆ:—சென்னையில் ஒரு பெரிய உத்யோகஸ்தரின் மனைவியாயிருந்து, விரக்தியால் 1928-ஆம் ஆண்டு மஹரிஷிகள் சந்நிதிக்கு வந்து, காஷாயம் பூண்டு ஸந்யாசினியாய் இருக்கும் சுந்தரம்மாள் என்ற உத்தமியோ (பக். 355)

அ:—இந்த அம்மையாரா? இவ்வம்மைக்கு இருபதாவது வயதிலேயே வைராக்யம் முற்றி விரக்தி ஏற்பட்டுவிட்டது. ரமண பக்தி தலையேறி, தாலியை யறுத்துக் கணவன் தலையில் போட்டு விட்டுத், தாய் தந்தை சுற்றத்தார்க்குப் பழியை நிலைநிறுத்தி விட்டு வெளியேறிய மஹா உத்தமி. இவள் வீட்டை விட்டுத் தொலைந்தும், புருஷனைப் பிடித்த சனியன் தொலைந்த பாடில்லை. இக்கற்பிற்கரசி கணவன் மேலும் வழக்குத் தொடுத்தாள். இவ் அவமானம் பொறாது இறந்த கணவனை இப்பழிகாரிச் செய்கையும், ரமணன் அருளும் சேர்ந்து பரமபதம் சேர்த்தன. இவ்வுத்தமிகளை ஆங்கில சரிதப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ள படத்தில், வேண்டுமானால் தரிசித்து வரமும் பெறலாம். ரிஷியோடு இந்த அம்மாமார்களைச் சேர்த்து எடுக்கப்பட்ட அப்படம் துரதிர்ஷ்ட வசமாகத் தமிழ்ச் சரிதத்தில் இடம் பெறவில்லை. காரணம் யாதோ? ஆங்கில சரிதத்திற்குப் பின் செய்த சுத்தங்களுள் இதுவும் ஒன்றாயிருக்கலாம்.

அ:—சரி. காவ்யகண்ட சாஸ்திரிகள், முகவைக் கண்ணமுருகனார், நடேச முதலியார்—நடனானந்த சாமிகள்—சேலம் B. V. நரசிம்ம ஸ்வாமிகள் இவர்களைப்பற்றி என்ன சொல்லுவாய்?

அ:—இவ்வுத்தமர்கள் அனைவரும் தத்தம் அளவில் சிறந்தவர்களே. இவர்களிடம் குறைகூற வேண்டுமானால், அது ரமண சேர்க்கையேயாகும். சாஸ்திரிகள் சிறந்த அறிஞர். ஆனையில் அவர் சுவாமிகளை இல்லாத வகையில் சிறப்பித்துத் தனக்குச் செல்வாக்குத் தேடினார். ரிஷி இவரைச் சிறப்பித்துத் தனக்குப் பொய் மதிப்பைத் தேடினார். 'பண்டிதனும் நாயும் பகவானுக்குச் சமம்' என்பதெல்லாம் சாஸ்திரிகள் முன்னிலையில் பறந்துவிடும். 'ஸர்வ பூதஸமத்வேநலிங்கேன ஞான மூஹ்யதாம்' எல்லா பூதங்களிலும் பக்ஷபாதமில்லாமல் நடக்கிறதென்கிற அடையாளத்தால் ஞானமிருக்கிறதென்று ஊகிக்கவேண்டும்) என்று தான் கொண்ட அடையாளத்தையும் கைவிட்டுத் தன்னை அஞ்ஞானி என்றும் ரிஷி விளம்பரப்படுத்தி விடுவார். எப்படி எனில், எல்லாரும் ரிஷியைத் தரையில் வீழ்ந்து நமஸ்கரிப்பார்கள். கணபதி சாஸ்திரி நமஸ்கரிக்கும் போது மட்டும், கீழே கம்பளம்போன்ற விரிப்பு ஏதேனும் விரிக்கப்படும். அவ்வளவு படித்தவர்க்கு இந்தச் சிறுமதிப்பை எனும் கொடுக்காவிட்டால், ரிஷியின் ஞானமெல்லாம் அம்பலமாக்கி விடுவாரல்லவா? இப்படி எல்லாம் அவர்க்கு மதிப்புக் கொடுத்து வைத்திருந்தும், அவர் அதிகமாகப் பிற்காலத்தில் ஏமாறவில்லை. சர்வாதிகாரியின் கொடுமைக்குக் கும்பிடு போட்டவர்களில் இவரும் ஒருவர்.

முகவைக்கண்ண முருகனார் மகா சாந்தசீலர். தமிழறிஞர். பகவானுக்கு யாப்பிலக்கணத்தில் சிறிது அறிவுண்டாக்கியவர். இப்போது பணம் சம்பாதிப்பதற்கேதுவாய் இருக்கும் பல உபதேச நூல்கள், பகவான் பேரால் வெளிவரத் தூண்டுகோலாகவும், சகாயமாகவும் இருந்தவர். இவரும் சர்வாதிகாரியின் கொடுங்கோற்கு அஞ்சி வெளியே இருந்து காலந்தள்ளுகிறார். இவர் பாடிய ரமண சந்நதி முறைக்குச் சர்வாதிகாரித்வம் தம்பிக்குக் கொடுக்காமையால் தாட்சணியமின்றி துரத்தப்பட்டார். வேண்டா வெறுப்போடு பலநாள் ஆஸ்ரமத்தில் கல்லைக் கழுவியும் இவர்தம் வயிறு கழுவிப் பார்த்தார். இனி ஆசிரம வாழ்க்கை அசாத்யமெனக் கண்டு,

"உள்ளதும் போயிற்று நொள்ளைக் கண்ணு" என்று ஊர்க்குள் வந்து பிச்சை எடுத்தும் மாவு கரைத்துக் குடித்தும் வைராக்கியாதி சாதனங்களோடு கஷ்டப்பட்டு கவுரவமாய்க் காலம் போக்குகிறார்.

நடேச முதலியார் பகவானிடம் கனவில் உபதேசம் பெற்று நடனானந்த ஸ்வாமிகள் ஆனார். வீடும், வேலையும், நல் அறிவும் விட்டார். சாமியைப் புகழ்ந்து இல்லாத தோத்திரங்களெல்லாம் இனிக்க இனிக்கப் பாடினார். கண்மூடி கடுந்தவம் எல்லாம் செய்தார். பகவானை அடைந்தும் ரிஷியைத் துதித்தும் பயனில்லை. "எல்லாப் பயனும் தம்பிக்குத்தான் உண்டு. என்னைக் குறித்து இல்லாத சொன்ன உனக்கு ஏதும் இல்லை" எனக் கனவில் ரிஷி கை விரித்து விட்டாரோ என்னவோ? நடனானந்த சுவாமி மீண்டும் நடேசமுதலியாராயிற்று. 'பழைய குருடி கதவைத்திறடி' என்று இல்லறத்திற்குத் திரும்பிவிட்டார். நல்லறிவும் பெற்றார். பழைய கறுப்பனே கறுப்பன் என்று வீட்டோடு போய்ப் பழைய வேலையைத் தொடங்கிச் சுகம் பெற்றுவிட்டார்.

நரசிம்ம ஸ்வாமிகளை (B. V. நரசிம்ம அய்யர் சேலம்)ப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ரிஷியின் ஆங்கில சரித ஆசிரியர்; அறிவாளி; உண்மையாளர்; பழைய தேசபக்தர். இவர் எழுதிய சரிதமே பண வருவாய்க்குக் காரணமாய் ரிஷியைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டது. இவர் முதல் பதிப்பில் ரிஷியைக் கேட்டு எழுதிய சில உண்மைகள், தம்பி சர்வாதிகாரியின் பிற்கால கௌரவத்திற்குக் குறைவை உண்டாக்கின. பின் பதிப்பில் அவற்றைத் திருத்தவும், இல்லாத பொய்யை மேலும் கூட்டவும், முன் எழுதிய பல உண்மைகளை எடுத்து விடவும் சர்வாதிகாரி கட்டளை இட்டார். அக்கட்டளையைச் சிரமேற் கொள்ள முடியாமையாலும், தான் முதலில் ரிஷியை ஏமாந்து நம்பி எழுதிய பெருமைக்குப் பங்கம் வருமாறு நடந்துகொண்ட தன் முகத்தில் ரிஷி கரிபூசி விட்டாரே என்னும் மனவருத்தத்தாலும் ஆஸ்ரமத்தை விட்டு வெளிக்கிளம்பி விட்டார்.

இவ்வுத்தம குணசீலர்கள் எல்லாம், "தன் தம்பியைக்கூட மற்றவர்களைக் காட்டிலும் தனிச்சிறப்பொன்றை அடைவதற்குரிய உரிமையைக் கொண்டாட அநுமதிக்காதவர்". (He does not allow even his brother to arrogate to himself any right of superiority over others பக். 219 ஆ. ச.) என்று புகழப்பட்ட சுவாமிகள், திடீரென்றுமாறி விவேகம் இன்றி, விட்டுவருவதற்குச் சொத்து, சுதந்திரம், வீடு, வாசல், மனை, மனைவி இன்றி, ஒரு பிள்ளைக்குச் சோறு போடவும் சக்தி இன்றித் தவிக்க விட்டு, உடல் ஒட்டி எலும்பெழுந்து, கஞ்சிக்குத் தாளம் போட்டுக்கொண்டு, பக்தர்கள் தயவால் அண்ணன்— ரிஷியிடம் வந்து ஆஸ்ரமத்தில் ஒட்டி வயிறு கழுவிய அற்பன்—கற்கண்டு கள்வன்—இரக்கமற்ற வன்னெஞ்சன்—காசை கண்டறியாக் கயவன்—லோபியான தம்பிக்கு ஊர்சொத்தில் உரிமைகொடுத்த விஷபம் சிறிதும் பிடிக்காமல், "ஈனக்கனவு கண்டால் எவரோடு சொல்வதென்று" வெளியேறி விட்டார்கள். உத்தமர்கள் சர்வாதிகாரியின் கொடுமையால் திண்டாட்டப்படுவதையும், சுயநலக்கூட்டமும், வகை வகையான இள மங்கையரும் சர்வாதிகாரியோடு கூடிக்கொண்டு கொண்டாட்ட மிடுவதையும் சுவாமிகளிடம் எவரேனும் எடுத்துச் சொன்னால், தம்பியின் யோக்யதை தெரிந்திருந்தும் தெரியாதவர்போல், ரிஷி "எனக்கென்ன அதிகாரம் இருக்கிறது? ஏதோ கொடுத்ததை உண்டு காலங் கழிப்பவன். நான் யாரையும் வரச்சொல்வதுமில்லை போகச் சொல்வதும் இல்லை. அவரவரிஷ்டம்" என்று தம்பியின் குறும்புச் செயலுக்கு எரு விடுகிறார். ஏன் சாமி! விசாரணையில் "என் உத்தரவுமேல் தான் யாரும் ஆசிரமத்துக்கு வருவதும், போவதும், தங்குவதும்" என்று கூறினீர்களே என்று எந்த அறிவாளியேனும் கேட்டுவிட்டால், ரிஷிக்குக் கையாலாகாத அசட்டுக் கோபம் பொங்கி வழியும். "கழுதை, நாய் வந்து ஒரு கும்பிடு போட்டுவிட்டாலும் அவை சொன்னபடி ஆடவேண்டும்" என்று கௌரவம்போல் கண்ணீரும் கம்பலையுங் காட்டிக்கூறிவிடுவார் ரிஷி. இத்தம்பியால் அடிபட்டவர் எத்தனை பேர்? உதைபட்டவர் எத்

தனை பேர்? வசவு வாங்கியவர் எத்தனை பேர்? இத்தம்பியின் கொடுமையை அடக்க ரிஷிபோட்ட கும்பிடுகள் எத்தனை. கொடுமைக்கு அஞ்சிப் பிறர்போடும் கும்பிடுகள் எத்தனை. மனவெறுப்போடு வழியற்ற மற்றும் பலர்போடும் கூழைக் கும்பிடுகள் எத்தனை? இரத்தப்பாசத்தால் ரிஷியும் தன் தம்பிக்கு எல்லா விவேகிகளும் அடங்கி ஒடுங்கி வழிபடவேண்டும் என்று கூறுகிறார். உதைத்த காலுக்கு முத்தம் கொடுப்பதுபோல் சர்வாதிகாரிக்கு இச்சகம் பேசி வயிறு வளர்க்கும் வழி அற்றவர்களும், சுயநலக் கூட்டத்தார்களும், வாழ்க்கையில் தோல்வியுற்ற வழிப்போக்கர்களுமே ஆசிரமத்தில் இப்போது பக்தரென்று கூட்டம் போட்டுக்கொண்டு, கொள்ளை கொண்டு வருகிறார்கள். அன்றி, உண்மையான விவேகிக்கோ, சாந்தர்களுக்கோ, துறவிகளுக்கோ ஆசிரமத்தில் சிறிதும் இடமே இல்லை.

ஆ :—பெரும் பொருட்செலவில் செய்துமுடித்த ரிஷியின் உருவச்சிலை எங்கும் ஸ்தாபிதம் செய்யப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அதனால் சுவாமிகள் புகழ் குறைந்துவிடுமா?

அ :—புகழ் குறையாது. ஆனால் வரும்படி குறையும் என்று ஆசிரமத்தார் கருதி விட்டார்கள். எப்படி என்றால், ஏமாந்த மூட நம்பிக்கையால் அவ்வுருவம் செய்த பெருமாள்சாமி, அதைப்பலரும் தொட்டு வணங்கும் முறையில் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டார். சர்வாதிகாரியும், சாமியும் அது தங்களிடம் கொடுக்கப்பட்டுச் சுயநலக்கூட்டத்தார் ஆதிக்கத்திலேயே இருக்குமென்று எதிர்பார்த்தார்கள். அது முடியாது என்று கண்டவுடன் மாறி ஆடத்தொடங்கினர். விக்ரகத்தை ஆசிரமத்தில் வைக்கக் கூடாதென்று தடுத்தார்கள். பின்னர் பெருமாள்சாமி அதைத் தான் கட்டிய பழய ரமணாசிரமத்தில் கனம் மந்திரி முனுசாமி நாயுடுவைக்கொண்டு திறந்து வைக்க முயன்றார். அதற்கும் ஆசிரமத்தாரால் தடை ஏற்பட்டது. பின் பெருமாள்சாமி விக்ரகத்தை வடக்கு வீதியில் வைத்து விடலாமென ஓர் இடம் வாங்கினார். அதற்கும் இடையூறுகள் ஏற்பட்டன. கடைசியில் ஆசிரமத்துக்கு

எதிரில் ஓர் இடத்தை வாங்க உத்தேசித்தார். அவ்விடத்தையும் சர்வாதிகாரி வாங்கித் தன் வசப்படுத்திவிட்டார். இந்நிலையில் பெருமாள்சாமி வேறு வழி இன்றிச் செய்த சிலையை எப்படியும் ஸ்தாபிதப்படுத்தவேண்டுமே என்று அதற்காக ஆசிரமத்துக்குச் சேர்ந்தாற் போலுள்ள பாவாஜி மடத்துநிலம் ஒன்றை குத்தகைக்கு வாங்கினர். அதிலும் ரிஷியின் சிலை வைக்கக் கூடாமல் ரமணாசிரமத்தார் தடுத்தனர். அதற்குச் சிலை செய்ய அநுமதித்த ரிஷியும் வெளிப்படையாகத் துணை நின்றார். அதன்மேல் தான் ரிஷியின் பொய்யை வெளியாக்கவும், தம்பிக்குக் கொடுத்த அதிகாரத்தை வெளியாக்கிக் கண்டிக்கவும் பெருமாள்சாமி வழக்குத் தொடுக்க நேர்ந்தது.

ஆ:—எப்படி இருந்தாலும் தன்னை ஆட்கொண்ட குருவை வழக்குக்கிழுக்கலாமா? நீ என்ன சொன்னாலும் சரி. இது ஒழுங்கே அல்ல.

அ:—அடடா! குரு அநியாயக்காரர்களோடு கூடி ஒழுங்கீனங்களைச் செய்தால், அதற்கு உடன்பட்டு இருந்து அவரை மேலும் குற்றத்திற் காளாக்கிக் கெடுக்க வேண்டுமென்பது உன் வாதமா? அநீதிக்காரர்களோடு கூடிய குரு துரோணரை சீடன் அருச்சுனன் எதிர்க்கவில்லையா? அதைக் கண்ணனும் அநுமதித்திருக்கிறாரே. அதனால் எழுந்த நூலல்லவா பலரும் போற்றும் கீதை. மேலும் 'தர்மத்தில் மாறுபடாததே குரு பணிவிடை' (அறத்தில் திரியாப் படர்ச்சி வழிபாடே) என்று நூலும் கூறுகிறதே. ஆத்ம புராணம் 'கிரமந் தவறிய குருவைத் திருத்த சீடனுக்கு உரிமை உண்டு' என முழங்குகிறதே. நீ தான் படித்தவன் என்ற தலைகிறுக்கா? கொழுப்பா? நானும் கொஞ்சம் கேட்டிருக்கிறேன் ஐயா. இதெல்லாம் குரு சீடன் என்ற முறைவரும்போது. ஆனால் ரிஷி "தான் குருவுமல்ல எனக்குச் சீடரும் இல்லை" என்னும் போது அடியோடு அடிபட்டுப்போகும். அந்த வீண்வாதமெல்லாம் நமக்கெதற்கு? ரிஷியின் மோசக் கருத்துக்களை வெளிக்குக் கொண்டுவந்த அந்த வழக்கை நாம் மனமார வாயார வாழ்த்தி வாங்

கொடுக்க வேண்டும். எவன் எப்படிப்போனுல் நமக்கென்ன? "எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபம்." என்றிருக்கும் மோசக்காரர் வலையில் வீழாமல் ஜாக்ரதையாக இருக்க வேண்டுவதல்லவா நம் கடமை?

ஆ:—என்ன பிரமாதமாக மோசம் செய்து விட்டார். ரிஷியைக் கேட்டாலல்லவா தன் நியாயத்தை எடுத்துக் கூறுவார்?

அ:—கேட்பதா? ரிஷி அறிவாளிகளைக் கண்டால் பேசாமல் மௌனம் சாதித்துத் தன் ஞானத்தை நிலை நிறுத்திக் கொள்வார். அப்போது அவர் மௌனத்திற்குப் பலப்பல விந்தையான வியாக்யானங்கள் கூறப்படும். படித்து ஏமாந்த கூட்டங்களிடந்தான் சாமிக்குப் பேச்சு கிளம்பும். பெண்களுக்கு உபதேசம் செய்வதாய் இருந்தாலும் ரிஷிக்குப் பெருமகிழ்ச்சி. அவரிடம் உண்மை அறிவாளி ஒருதரம் சென்றுல் மறுமுறை செல்வதற்கே மனம் எழாது. பின் செல்வதெப்படி? சென்று கேட்டாலும் பதில் பெறுவதெப்படி. போனதும் ரிஷி ஒளியாய்த் தோன்றினுர். தட்சிணுமூர்த்தமாய்த்தோன்றினுர். இது மனமயக்கமல்ல. உண்மை, என்று புளுகியோ, மயங்கியோ கூறும் பித்தரிடமும் ஏமாந்து பணம் கொடுக்கும் பைத்தியங்களிடமுந்தான் அவர்க்குப் பேச்சும் மூச்சும். பிறரிடம் கப்சிப். இந்த லட்சணத்தில் ரிஷியைக் கேட்பதாம். கேட்கவேண்டுமானுல் துணியைக் கிழித்துப் பால் பிரண்டனைப்போல் கண்ணில் கட்டிக்கொண்டு இதோ இருக்கிறுர் ரிஷி அதோ இருக்கிறுர் பகவான், ஆஹா! ஊ ஹீ! தெரிகிறது! தெரிகிறது! என்று பிதற்றிக்கொண்டு போகவேண்டும். அல்லது பணத்தை மூட்டை கட்டிக் கொண்டு போகவேண்டும். இந்நிலையில் அவர் வாக்கு மூலத்தைக் கொண்டே எல்லா நியாயத்தையும் அறியவேண்டி இருக்கிறது. இது நிற்க, தாயைச் சமாதிவைத்த நிலம் இருக்கிறதே அது ரிஷியைப் பிடித்த ஒரு சனியன். அதன் விந்தையைக் கூறுகிறேன் கேள். அந்த நிலம் சிக்கிய குரு நானக் படா அகாடா உதாசி மடத்தார் ஆதீனத்தில் இருக்கிறது. அந்த இடத்தில் சமாதிவைத்த 15 அடி [illegible] மாத்திரம் பாவாஜி இடமிருந்து வர்த்தமானக்

கடிதம்மூலம் பெருமாள் சாமி தன்பேருக்கு சமுத்திரம் மணியக்காரர், ஆற்காடு சம்பந்த முதலியார், ரத்ன முதலியார் அறியப் பெற்றுக்கொண்டும் வந்திருக்கின்றனர். நாளடைவில் ரமணாசிரமத்தார் அவ்விடத்தை மேன்மேல் ஆக்ரமித்தபோது உதாசிமடத்தார், தடுத்து, 15 அடிக்குமேல் பிரவேசிக்கக்கூடாதெனவும் கூறிப்போயிருக்கின்றனர். பிறர்க்குரிய தர்மசொத்து என்பதை அப்போதே அறிந்துவைத்தும், ஆசிரமத்தார் அதனை எப்படியேனும் அபகரித்து விடுவதெனத்துணிந்தனர். அதன்பொருட்டுக் குயுக்திக்காரர் சொல்லுக்கு உட்பட்டு சொந்தக்கார பாவாஜி ஊரிலில்லாமல் ஹரித்வார மேளாவுக்குச் சென்றிருந்தபோது, மடத்துசொத்துக்கள் சென்னை தர்மபரிபாலன போர்டார் வசம் வரும்படியாகச் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. அதன்படி சொத்தும் போர்டின் வசப்பட்டுவிட்டன. போர்ட் தலைவர் ஆசிரமத்துக்கு வேண்டியவர். அவர் சகாயத்தால் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம் என்பது ஆசிரமத்தார் உள் எண்ணம். இவ்வெண்ணத்தால் ஆசிரமக் காரியதரிசி சமாதி வைக்கப்பட்ட இடம் முழுதும் கிரயத்துக்குத் தரும்படி போர்டுக்கு விண்ணப்பமும் செய்துகொண்டார். இதற்குள் ஹரித்வாரம் சென்றிருந்த சீக்பாவாஜி, வந்துவிட்டார். பாவம்! வந்ததும் போர்டார் தலையிட்டதை ஆட்சேபித்து மனுப்போட்டார். அதன்மேல் ஆசிரமத்தார் மோசடிக்குச் சகாயமாகத் தெரிந்தோ, தெரியாமலோ போர்டார் ரமணாசிரமத்தைச் சேர்ந்த இடம் தவிர மற்ற சொத்துக்களை சீக்பாவாஜியிடம் ஒப்பித்து விடும்படி கமிஷனருக்கு உத்தரவிட்டனர். பாவாஜி சொத்துக்களை ஒப்புக்கொள்ள திருவண்ணாமலை வந்தபோது, ஆனரரி அஸிஸ்டண்ட் கமிஷனர், ரமணாசிரமத்துக்கு இடத்தை எழுதிக்கொடுத்த பின்னர்தான், மற்ற சொத்துக்களை ஒப்புக்கொடுப்பேன் என்றார். இது கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையார்க்கு உடைப்பதுபோல் இருக்கிறது. எங்கள் தர்ம சொத்தை அப்படி எழுதிக்கொடுக்கமாட்டேன் என்று சீக்பாவாஜி கூறிவிட்டார். போர்டுக்கும் கமிஷனர்க்கும் சமாசாரப் போக்குவரவால்தாமதம் ஏற்பட்ட இடைக்காலத்தில், போலீஸ் அதிகாரிகள்

ரமணாசிரமத்தார் தூண்டுதலின்மேல் பாவாஜியுடன் வந்த சாதுக்களில் சிலரைப்பிடித்துப் போலீஸ்டேஷன் பந்தோபஸ்தில் அடைத்துத் துன்புறுத்திப் பயங்காட்டினர். ஊரறிய நாடறியஇத்துரோகம் —ரமணாசிரமத்தார் பேராசை—ரிஷியின் வஞ்சக எண்ணம்— வெளிப்பட்டுச் சந்திசிரித்து ஆபத்திற்கிடமான நிலையில் வந்தபின், சொத்து பூராவும் பாவாஜியிடம் ஒப்புக்கொடுக்கும்படி உத்தரவு வந்தது. அவ்வாறே பாவாஜிக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அந்நிய தர்மசொத்தை அநீதியாக இவ்வளவு துன்பங்கட்குட்படுத்தி அபகரித்துவிடத் துணிந்த ஆசிரமத்தார் சமயத்தில் கொலைக்குத்தான் அஞ்சுவார்களா? யோசித்துப்பார். ஆனால் பாவாஜி நியாயவிஷயமாகப் பொதுவில் சந்யாசி என்னும் கௌரவத்தை உத்தேசித்து, கட்டிவிட்ட சமாதி போக மற்ற இடங்களில் உத்தரவில்லாமல் கட்டடங்களோ மற்ற காரியங்களோ செய்யக்கூடாதென நோடீஸ் கொடுத்திருக்கிறார். இதுவன்றோ சந்யாசத்துக்கு அழகு! இவ்வளவு நடந்த பின்னும் விட்டாரா ரிஷி? அந்த இடம் எப்படி ஆதியில் சீக்பாவாஜிக்குக் கிடைத்ததென்று ஆராயத்தொடங்கினார். பூர்வோத்திரத்தை அறியப் பழைய ரிகார்டுகளையும், சட்டங்களையும் புரட்டினார். அவ்வாராய்ச்சியில் உலகவிஷயமே அறியாத ரிஷிக்கு அந்த இடம் இந்து சநாதன பாவாஜி மடத்தைச் சேர்ந்ததெனத் தெரிந்தது. இதனால் சீக்பாவாஜியின் பாத்யதையை மறுத்து, சந்ததியற்றுப்போன பூர்வீக இந்து பாவாஜியின் பாத்யதையை எடுத்துக்கூறி, அநுபவ பாத்யதையால் சமாதி வைத்த இடத்தை அபகரித்து விடுவது முடியுமானால் மடத்து சொத்துக்கள் முழுமையும் கைப்பற்றி விடுவது என்று பகல் கனவு கண்டு கொண்டிருந்தார் ரிஷி. எப்படி இக்கருத்தை நிறைவேற்றுவதெனச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த இடத்தைக் குத்தகைக்கு வாங்கிய பெருமாள் சாமியால் வழக்கும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இதுதான் சமயம் என்று ரிஷியும் தன் நிஜஸ்வரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டார். இதற்குத் துணையாகத் தம்பியையும் சேர்த்துக்கொண்டார். ரிஷியும்தம்பியும் தங்கள் ரிட்டன்

ஸ்டேட்மெண்டில் சீக்பாவாஜியின் பாத்யதையை மறுத்துக் கீழ்வரு மாறு கூறி இருக்கின்றனர். "நாங்கள் (ரிஷியும் தம்பியும்) பெருமாள் சாமியோ, பாவாஜியோ பாவாஜிமடமோ வழக்கில் கூறப்படும்சொத்துக்குப் பார்த்யம் உடையவர்கள் என்பதை மறுக்கிறோம். அவர்கட்கு எக்காலத்திலும் எவ்விதமான உரிமையும் இருந்ததில்லை. வழக்கில் கூறப்படும் நிலம் சுபதர்ம பாவாஜிமடம் எனப்பட்ட இந்து ஸநாதன மடத்தைச் சேர்ந்தது. (சீக்பாவாஜி மடத்தைச் சேர்ந்த தல்ல) அவ் இந்து மடம் சந்ததி அற்றுப்போய்விட்டது. ஆகவே நிலத்தின் உரிமை கேள்வியற்றிருக்கிறது. 1922-நவம்பர் முதல் நிலம் எங்கள் அனுபவத்தில் இருப்பதை அறிந்தும் சீக் பாவாஜி மடத்தார் பாத்யம் கொண்டாடியதில்லை. இதில் சீக் பாவாஜியின் பாத்யம் அறிந்தும் அறியாதவர்போல் மனமறிய ரிஷி பொய் சொல்வதைப் பார்த்தாயா? ஊர் சொத்தைக் கொள்ளை அடிக்க எவ்வளவு பேராசை. இப்பேராசைப் பேய்கள் தாம்—பொய்யே உருவெடுத்த பித்தலாட்ட ஜன்மங்கள்தான், ரிஷி என்றும் பகவான் என்றும், பரமஹம்சன் என்றும், சாமி என்றும் பெயர் வைத்துக் கொண்டு குடும்பஸ்தர்களைக் காட்டிலும் கேவலமாகக் கேசுகளை ஜோடனை செய்து கொண்டு மானம் மரியாதை இன்றி உடல் சுமந்து திரிகின்றன. அவ்வழக்குத் தீர்ப்பில் முனிசிப் ரமணாசிரமத்தார் பொய்யைக் கன்னத்தில் அடித்ததுபோல் கீழ் வருமாறு கூறி மறுத்துவிட்டார். "மேற்கண்ட அத்தாட்சிகளாலும், சீக் மடத்து சொத்து தர்மபரிபாலன போர்டார் வசம் இருந்தபோது ரமணாசிரமத்தாரே விலை பேசி வாங்கத் தலையிட்டிருப்பதாலும் வழக்கில் சம்பந்தப்பட்ட நிலத்தின் பாத்தியம் சீக் பாவாஜி மடத்தைச் சேர்ந்ததென்பது தெளிவாகிறது. அப்போது ஆசிரமம் சார்பாக விலை பேசத் தொடங்கிய கோபால்ராவ் அதிகாரத்தை இப்போது ரமணாசிரமத்தார் மறுத்தபோதும் நான் அவர் அதிகாரத்தில் சந்தேகம் கொள்ளவில்லை." (It is thus clear from the above evidence that title to the suit property rests with the mut at one stage in 1927 when the Ashram people were prepared to

negotiate for the purchase of the suit property from the Religious Endowment Board which was in temporary possession of the Mutt's properties. Even though the Ashram people may now deny the authority of Gopala Rao to send a letter like Exhibit L. I have no doubt that it is a genuine letter. It being a clear acknowledgment of the title of the 2nd plaintiff there can be no question of adverse possession of defndants 1 to 3 in respect of the suit properties.) மேலும் அம்முனிசிப்பே பெருமாள்சாமியைப்பற்றி "முதல்வாதி—பெருமாள்சாமி கெட்டவர் என்று எனக்குப் படவில்லை. அவரே, முதல் பிரதிவாதி—ரிஷியின் பெருமை உயர்வதற்குக் காரணமாயிருந்தவர் எனத் தோன்றுகிறது. (The first plaintiff by himself did not strike me as a bad man. It appears that he was responsible for the rise to fame of the first defendant) எனக்கூறி பெருமாள் சாமியின் உயர்நிலையைப் புலப்படுத்தியும் இருக்கிறார்.

பின்னர் இனி தங்கள் ஜம்பம் பலிக்காதெனக் கண்ட ஆசிரமத்தார் பாவாஜியைச் சொல்லத்தகாத பல இழிந்த முறைகளால் வசப்படுத்தி, ஜட்ஜ் கிருஷ்ணமாச்சாரியாரை முன்னிட்டுச் சமாதானம் செய்துகொண்டு, ரிகார்டு பலமாய் இருந்தும், பொய் சாட்சிகளால் வழக்குத் தள்ளுபடியாகும்படி செய்தனர். இந்த நில விஷயமாக இவர்கள் கையாண்ட ஆபாசமுறைகள் அப்பப்ப! சொல்லத்தரமல்ல. கை எழுத்தில்லாமல் அதிகாரப் பத்திரம் எழுதிக்கொண்டு மோசமான முறையில் ரிஜிஸ்டர் செய்துகொண்ட இந்த யோக்யர்கள், குத்தகை பத்திரத்தின் ரிஜிஸ்ட்ரேஷன் மோசகரமானதென்று கூறவும் நாணமின்றி முன்வந்து விட்டனர். அவ்வழக்கு இன்னும் ஐகோர்ட் அப்பீலில் இருக்கிறது.

[illegible]:—அடடா! இவ்வளவு மோசமா! பொய்யா! பித்தலாட்டமா! வேறொரு சந்யாசிக்குரிய தர்மசொத்தை இப்படியா அப

கரிக்கத் துணிந்தனர்! அதன்பொருட்டுச் சாதுக்களைப் போலீஸ் காவலில் வைத்துத் துன்புறுத்தக் காரணமாயிருந்தனர்! இந்தப் பூாவம் பொல்லாது. சும்மாவிடாது. ரிஷியாயிருந்தாலும் முனியாயிருந்தாலும் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டுத்தான் போகும்.

அ:—போ! போ! இவ் எதிர்ப்பெல்லாம், 'பாறையில் அடிக்கும் அம்மா முளைக்குச் சமம்' என்றல்லவா ரிஷி தலை நிமிர்ந்து கூறித்திரிகிறாராம். பொறுத்துப் பார்ப்போம். இரும்புப்பாறைக்கு நெக்குவிடாத கருங்கற் பெரும்பாறைகள் எல்லாம் சிறு செடியின் வேருக்கு நெக்குவிட்டுப்பிளந்து வாயைத்திறந்துகொள்வதில்லையா? இம்மமதை எல்லாம் அடங்கிச் சோற்றுக்கு ஏங்கும் காலம் தூரத்தில் இல்லை. ரிஷி துணிவாகச்செய்த அக்ரமம் இது மட்டுமா? அரசாங்கத்தை விட்டார்களா? முனிசிபாலிட்டியை விட்டார்களா? கவர்னர்களை விட்டார்களா? எல்லரர் தலையிலும் கை வைத்துவிட்டார்கள். நெடுநாம மிட்டார்கள். ஒரு அந்நியன் நிலவிஷயத்தில் இப்படி என்றால், ஓர் அரசாங்க நிலத்தை எப்படி ஏமாற்றி அநுபவிக்கின்றனர் பார். ஓர் அரசாங்க புறம்போக்கு நிலத்தின்பொருட்டு ரமணாசிரமத்தார் தற்காஸ்து விண்ணப்பம் போட்டனர். அதில் "கோயிலுக்கும், ஆசிரமத்துச் சீடர்களுக்கும் பிறருக்கும், ரிஷியைக் காணவரும் ஜனங்களின் உபயோகத்திற்கும் சௌகரியமாயிருக்க நிலத்தை அடமானம் செய்யவேண்டும்" எனக் குறிப்பிட்டுக் கேட்டுக்கொண்டனர். அவ்விண்ணப்பத்தின் மேல் கர்ணம், மணியம் ஆகியவர்கள் "தற்காலம் ஆசிரமம் டிரஸ்டி நிரஞ்சனானந்தசாமி பேரில் அடமானம் செய்யலாம். வெகு ஜனங்களுடைய திரவியங்களைக் கொண்டு மேல்படி வேலை செய்திருப்பதால் நிலத்தை விற்க வாங்க விண்ணப்பதாருக்குக் கண்டிஷன் பேரில் பட்டா செய்யலாம்" என எழுதி மேலுக்கு அனுப்பினர். அதை அநுமதித்து, "மேல்படி 3 நிலங்களையும் திருவண்ணாமலை ரமணாஸ்ரமத்துக்காக ஆஸ்ரமக் காரியதரிசி நிரஞ்சனானந்த சாமி பேரில் அடமானம் செய்யப்பட்டிருக்கிறது," என்ற தாசில்தார் உத்தரவின்படி நிலம் அடமானம் செய்யப்பட்டுள்ளது. இதைப்

பார்த்த உடனே எவரும் பொதுஜன தர்மசொத்து என்றும், நிரஞ்சனானந்தசாமி டிரஸ்டி—காரியதரிசிபேரில் அடமானம் செய்யப்பட்டது என்றும் சந்தேகமின்றிக் கூறிவிடுவான். ஆனால் மகரிஷிகளோ "பொது சொத்து என்று சட்டப்படி கருதக்கூடுமாயினும், அது தனக்கே உரிய தனிச்சொத்து என்றும், அது தன்னுடைய சொந்தத்திற்கு அடமானம் செய்யப்பட்டது என்றும் கூறுவதோடல்லாமல், "ரமணாசிரமம் என்பது என்பேர். அச்சொல் தனிப்பட்ட என்னைக் குறிக்கும்" என வழக்கில் வாதாடுகிறார். ஆசிரமம்-சங்கம் போன்ற சொல் ஒரு தனி மனிதனைக் குறிக்கும் என்னும் விந்தையை, எங்கேயாவது கேட்டிருக்கிறாயா? ரமணாசிரம அற்புதங்களுள் இதுவும் ஒன்று. தற்காஸ்து விண்ணப்பத்திலும் பாவாஜி இடத்தை மோசம் செய்வதற்காக அவ்விடத்தின் ஒரு பாகத்தையும் புறம்போக்கோடு சேர்த்து 5 ஏக்கர் எனக் கணக்குக் காட்டி அவ்வைந்து ஏக்கர் நிலத்தை அடமானம் செய்யவேண்டுமென்று கோரினர். அதிர்ஷ்டவசமாக கவர்மெண்டார் ஏமாறாமல் பாவாஜி நிலத்தை நீக்கி $3\frac{1}{2}$ ஏக்கர் நிலம் மட்டும் அடமானம் செய்தனர். இந்த மோசம் எப்படி? இப்படியே முனிசிபாலிட்டியையும் ஏமாற்றி விட்டனர். எப்படி என்றால் ரமணாசிரமம் பொது சொத்து ஆகையால் அதற்கு முனிசிபாலிட்டியார் வரி வாங்குவது இல்லை. இதை நன்கு அறிந்தும் ரிஷி "இந்த ரமணாசிரமத்துக்கு முனிசிபல் வரி போட்டிருக்கிறார்களோ என்னமோ தெரியாது. கணக்குப் புத்தகத்தில் வரி கொடுத்த தொகை குறிப்பிடப்பட்டிருக்கக் கண்டதில்லை. 2வது பிரதிவாதி—தம்பி—வரி விதிக்கப்படவில்லை என்று என்னிடம் ஒருவேளை சொல்லி இருக்கக்கூடும்" என்று குறுக்கு விசாரணையில் முன்னுக்குப்பின் புரட்டிப்பேசினர். அதன் பயனாய், பொது சொத்தென்று வரியைத் தள்ளிய முனிசிபாலிடியைக் குறித்துத் தீர்ப்பில் கூறி இருப்பதாவது—"முனிசிபாலிடியார் வரி தள்ளியதற்குக் காரணம் யாதெனத் தெரிவிக்கப் படவில்லை. சத்திரம் போன்றதென்று ஒப்புக்கொண்டாலும், ரமணாசிரமம் தாம சொத்தா அல்லவா என்னும் விஷயத்தில் முனிசி

பாலிடி கொள்ளும் அபிப்ராயம், முதல் பிரதிவாதியை—ரிஷியை கட்டுப்படுத்தாது." "No point again can be made of the non-levy of the Municipal tax, though item 2 is within Municipal area. The opinion of the Municipality cannot bind 1st defendant on the ground whether it is a religious or charitable trust or not and even if it is accepted as anologous to a choultry." பொதுஜனங்களின் சார்பான முனிசிபல் சபையின் அபிப்ராயத்திற்கு இப்படி அலட்சியம் ஏற்படும்படி புரட்டிப் பேசிய இவர்கள் பொதுவான நீர்க்குழாயைத் தங்கள் ஆசிரமத்துக்குக் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அநுபவிப்பதற்குக் காரணம் என்ன கூறினர்? இப்போது என்ன கூறுவர்? ரமணாசிரமம் பொது இடம் என்பதல்லவா? குழாயை அநுமதித்ததால் முனிசிபாலிடியும் ஆசிரமத்தைப் பொது இடம் எனக் கருதிற்று—நம்பிற்று என்பது வெளிப்படவில்லையா? அவர்கள் எதுவாயினும் புளுகட்டும். நம்பிக்கையைக்கெடுத்த ஆசிரமத்துக்கு முனிசிபாலிடி என்ன பதில் சொல்லப்போகிறதோ? யாது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமோ? தெரியவில்லை. தன்னைப்பற்றி ரமணாசிரமத்தார் கருதும் அலட்சியத்தை மேலும் ஸ்திரப்படுத்துமா? அன்றி பொது ஜனங்கட்குரிய நீரை மேலும் துர்விநியோகப் படுத்துமா? நிறுத்துமா? அல்லது ரிஷியின் செயலைக் கண்டிக்கத்தக்க வேறு நடவடிக்கைகளை எடுக்குமா? பொறுத்துப் பார்ப்போம். இப்படி ஆசிரமத்தார் முனிசிபாலிடிக்குச் செய்த மோசத்தைப் பொதுஜனங்களும் அறியாமல் கண்மூடி இருக்கின்றனர். மேலும் பழைய ரமணாசிரமம் சம்பந்தமாக யோசிப்பதற்கு 29—12—31௨ திருவாளர்கள் M. B. ரங்கசாமி ரெட்டியார் M.L.C., M. ஷண்முக முதலியார் முனிசிபல் சேர்மென், V. K. சேதுராமஅய்யர் வக்கீல், N. அண்ணாமலைப்பிள்ளை முனிசிபல் கௌன்சிலர் & M. L. A., T. S. ராமநாத சாஸ்திரி, V. V. S. கதிர்வேலுப்பிள்ளை பாங்கர் & மு. கௌன்சிலர், ரா. அருணகிரி முதலியார், T. S. முத்துக்குமாரசாமி முதலியார் பாங்கர் & சேர்மன், K. கோபால்சாமி முதலியார் B.A. B.L. வக்கீல்

முதலிய ஊர்ப்பிரமுகர்கள் கை எழுத்திட்டு ஓர் கூட்டம் கூட்டிய தேன்? ரிஷி இப்போது கூறுவதுபோல் அது தனிச்சொத்தானுல் ஏன் அப்போது தக்க நடவடிக்கை எடுக்கவில்லை? அது ரமணு சிரமத்துக்குத் தெரியாதென்று கூறுவார்களோ? ஆம் உலகையே மறந்தவரல்லவா ரிஷி. ஆசிரமம் பொது சொத்து அல்லவானுல், ரமணுசிரமக் கணக்குகளை திரு. ராவ்சாகிப் சேஷாசல ஐயர் போன்றவர்களால் ஆடிட் செய்து பொது மக்கட்கு அறிவிப்பானேன். சீடர் உரிமையில் மண்போடத்தான்—ரிஷி, சந்யாசி அல்ல என்று கூறி அத்யாஸ்ரமி ஆய்விட்டார். இதற்கெல்லாம் என் செய்வார் பாவம்!

இன்னென்று கேள். ரமணுசிரமத்தார், ரிஷி சிவில் கோர்ட்டில் ஆஜராகாமல் இருப்பதற்கு அநுமதி கொடுக்கவேண்டுமென்று முதலில் மாட்சிமை தங்கிய கவர்னரை வேண்டினுர்கள். அப்போதிருந்த கவர்னர் 27—6—35௳ "சிவில் கோர்ட்டில் நேராக ஆஜராவதை விலக்கக் கூடாமைபற்றி கவர்மெண்ட் வருந்துகிறது" எனக்கூறி ரிஷிக்கு அநுமதி தரவில்லை. ஆனுல் அக்கவர்னர் மாறி மற்றொரு ஆக்டிங் கவர்னர் வந்தபோது பலவகையாகச் சூழ்ச்சி செய்து முந்திய கவர்னர் பெருமான் அநுமதிக்க முடியாதென்று கூறி ஒரு வருஷம் கழியும் முன்னரே 10—6—36௳ பிந்திய கவர்னர் பெருமானுல், ரிஷி சிவில் கோர்ட்டில் ஆஜர் ஆகாமல் இருக்க அநுமதி பெற்றுவிட்டனர். பிந்திய கவர்னர் முன்னைய கவர்னர் உத்தரவைப் பார்த்துக் கவனித்துச் சரியான உத்தரவு பிறப்பிக்க முடியாதபடி சூழ்ச்சிகளும் கையாளப்பட்டனபோலும். இதிலிருந்து ரமணுசிரமத்தாருக்கு வேண்டிய கையாட்கள் எங்கெங்கு எவ்வெவ் விதமாய்த் திறம்படத் தங்கள் சுயநலப்புரட்டு வேலையை முடிக்கின்றனர் என்பது விளங்கவில்லையா? வெளிநாட்டு ஆங்கில கவர்னரும் கூட உண்மையான மஹானைக் கோர்ட்டுக்கு இழுக்க வேண்டிய அவசியம் ஏற்படாதென்றும் அப்படி ஏற்பட்டால் அது அம்மஹானுக்குக் கேவலம் என்றும் அபிப்பிராயப்படுகிருர். ஆனுல் நமது ரிஷிகளோ, அந்த அறிவுகூட இல்லாமல், பல வம்பு தும்பு வழக்குகளுக்கு இடம் கொடுத்துக்கொண்டு வருகிருர்.

ஸ்வாமிகள் வீட்டைவிட்டு வரும்போது ஓர் கடிதம் எழுதி வைத்துவிட்டு வந்தார். அக்கடிதத்தின் முடிவில் எந்தக் காரணத்தாலோ கையெழுத்துப் போடாமல் கடைசியில் கோடு இழுத்திருக்கிறார். அதுபற்றி ரமணகதை எழுதியவர்கள் சாடு திரித்துப் புகழ்ந்திருக்கிறார்கள். கதைக்காரர் ஸ்வாமிகளுக்கு எல்லா அபிமானமும் கரைந்து விட்டதால், அவர், தன்னை முதலில் நான் என்றும், பின் இது என்றும் குறித்தவர், கடைசியில் ஒன்றுமில்லாத கோடுகளால் குறிப்பித்திருக்கிறார் என்பது உண்மை என்றே வைத்துக்கொள்வோம். எல்லா ஆசையும் கரைந்த ஸ்வாமிக்கு இப்போது சுற்றத்தில் ஆசை, சொத்தில் ஆசை, ஜாதியில் ஆசை, தம்பியிடம் ஆசை, எல்லாம் ஏற்பட்டு, தம்பிக்கு அதிகாரப்பத்திரம் கொடுக்கும்போது ஆட்சேபமற்ற முறையில் ஏன் தன் கையெழுத்தைப் போடக்கூடாது என்று கேட்கிறோம். ஸ்வாமிகளோ, அத்தியாஸ்ரமி சொத்துக்களை வைத்திருப்பதும், விற்பதும் குற்றமில்லை என்கிறார். கையெழுத்துப் போடுவதால் மட்டும் வரும் குற்றம் என்ன? இறுத்தாற்போல் குடிப்பது என்பது இதுதானோ? இன்னுமா இப்படிப்பட்ட அர்த்தமற்ற காரியங்களால் உலகை ஏமாற்ற எண்ணம்? முன், தன்னை நான் என்றும் பின் இது என்றும் கடைசியில் ஒன்றுமற்ற கோடென்றும் காட்டிக்கொண்டது போய், சத்தியமாம் பரப்ரஹ்ம ஸ்வரூபமே நான் என்று வறட்டுத் தவளைபோல் வாயளவில் விஷயம் அறியாது தலைகொழுத்துக் கத்தித் திரிந்ததுபோய், இப்போது எனக்குப்பேர் ரமணாஸ்ரமம் என்றும், என் கை எழுத்துச் சீல்தான்என்றும் பிதற்றி, என்னை சந்நியாசி என்று உலகம் நினைத்தது முட்டாள்தனம் என்று கூறித் தான் பொய்யன் என்பதையும் வெளிப்படுத்தி விட்டார்.

ரிஷி கை எழுத்துப் போடாததற்குக் காரணம் தெரியாதென்றும், வீட்டைவிட்டு வந்தபின் எதிலும் தன் பெயரைப் போட்டதில்லை என்றும் கூறுகிறார். இதையாவது முன் பின் யோசித்துக்கூறவேண்டாமா? ரமணவிஜயம் 136ஆம் பக்கத்தில் ஸ்வாமிகள் "வேங்கடராமன் திருச்சுழி" என்று எழுதிக்காட்டித்

தான் யார் என்பதைத் தெரிவித்தார் எனக்கூறியிருக்கிறதே. இவற்றுள் உண்மை எது? பித்தலாட்டம் எது? இன்னும் இப்படி இவர் கதையில் வரும் பித்தலாட்டங்கள் எத்தனை ? மாறுபாடுகள் எத்தனை ?

ஆ:—போதும், போதும். ரிஷிகள் மோசம் இப்படியா? சீ! சீ! இப்புத்தகத்தைப் பிய்த்தெறிகிறேன்.

அ:—வேண்டாம்! வேண்டாம்! பின்னால் கூறுவதையும் கவனித்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் பிய்த்தேனும் போடு, நெருப்பு வைத்தேனும் கொளுத்து. ரமண விஜயத்தில் பல பக்கங்களில் வரும் சில விஷயங்களைக் குறித்து வரிசையாகச் சொல்லுகிறேன் கவனித்துக்கொண்டு வா.

1. ஞானம் வருவதற்குமுன் இப்படி யாரேனும் கேலி செய்திருந்தால் ரிஷியின் உரத்த கரங்கள் வலுத்த விடை யளித்திருக்கும். இப்போதோ அந்த முரட்டுத்தனம் சென்று சக்தியிருப்பினும் சாந்தம் மேற்கொண்டது (பக். 60.)

ரிஷி தன் தம்பிசெய்த குற்றத்தின் பொருட்டு ஒருசமயம் அவன் காலில்விழுந்து வணங்கினாராம். அதனால் ரிஷியின் சீடர் தண்டபாணி ஸ்வாமிகள் தம்பியைக் கோபித்துக் கொண்டபோது அச்சாமியின் முதுகில் பூசைகொடுத்து ரிஷியின் உரத்த கரங்கள் வலுத்த விடையளித்ததாம். சாந்தம், சாந்தம், மஹா சாந்தம். இது முரட்டுத்தனமே அல்ல.

2. புத்தர் அநித்தியத்தை எண்ணி நித்தியத்தைத் தேடப் புறப்பட்டார். ஆனால் பகவானின் ஞானோதயம் அதிசயமானது. அது எடுத்ததும் நித்தியப்பொருளிலேயே அவரை ஊன்றிவிட்டது. உலகம் அநித்தியம் என்ற உணர்வு அப்போது அவருக்கு இல்லை. (பக். 88)

உலகம் அநித்தியம் என்ற அறிவால் வீட்டைவிட்டுப் புறப்பட்டிருந்தால் இப்போது குருட்டு அதிர்ஷ்டமாக வந்து சேர்ந்த

அநித்தியப் பொருளில் ஆசைவைத்து அடிமையாகமாட்டார். உண்மை உண்மை; முக்காலும் உண்மை.

3. "என் மூட்டை தவறிவிட்டது, ஊர்செல்லப் பணமில்லை' என்று ரிஷிகள் ஒருசமயம் பொய் சொன்னாராம். அதை நன்மை பயக்கும் உண்மை என்கிறார் கதைக்காரர். (பக். 98)

இப்போது "சந்நியாசி அல்ல" என்று கூறும் ரிஷியின் பொய்யெல்லாம் தம்பிக்கு நன்மை பயக்கும் உண்மையென்பாரோ?

4. ரிஷியின் சன்னிதியில் பிள்ளைப்பேற்றிற்காகச் சிலர் அருள் வேண்டுவர். (பக். 135)

மெய். மெய். இவ்வருள் இப்போது சென்றால் கட்டாயம் கிடைக்கும்.

5. "வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்" "வட கோடு உயர்ந்தென்ன தென்கோடு சாய்ந்தென்ன வான்பிறைக்கு?" ஆத்மஸ்வரூப நிஸ்சல சமாதிஸ்தன் எதையும் கருதான் எதையும் எண்ணான், என்பதே ரிஷியின் நிலை. (பக். 140).

இது புளியம்பழத்தை முரடர்கள் களவாடியபோது ரிஷி இருந்த நிலை. அப்படி இருந்திராவிட்டால் உதை கிடைத்திருக்கும். இப்போது சிலர் தப்பு பாத்தியதை கொண்டாடுவதால் அந்நிலை தவறி ஊர்சொத்தைத் தம்பிக்கு ஒப்பித்து அதிகாரம் கொடுத்திருக்கிறேன் என்கிறார் ரிஷி.

6. ரிஷிக்கு அன்னையில்லை, அப்பனில்லை, யாதுறவும் இல்லையே. (பக். 144).

பகவான் மனத்தில் தாய், தம்பி, சுற்றம் என்ற உணர்வு சிறிதும் உண்டோ. பற்றற்றவாழ்வின் பண்பை ரிஷி தமது உதாரணத்தாலேயே காட்டினார். (பக். 307). கற்கண்டு பொட்டலத்தைக் கூடத் தம்பி எடுக்கமுடியாமல் செய்தார். நமது நிராசைப்பெரு

மான் உறவினரின் பாச அபிமானம் சூழாது சிதைத்தார். (பக். 308).

இப்பொழுது தம்பி உண்டு, தங்கை உண்டு, தம்பி மகன், மருமகள் பேரப்பிள்ளைகள் முதலிய எல்லா உறவினரும் ஆசிரமத்தில் உண்டு. பற்றற்ற வாழ்வுக்கு அதிகாரப் பத்திரம் ஒன்றே போதுமே. வேறு உதாரணம் வேண்டுமோ? இப்போது தம்மைச் சூழ்ந்து பாதுகாத்த பக்தர்கள் அபிமானத்தைச் சிதைத்தார் ரிஷி

7. ரிஷி அருணசலனையே ஞானசிரியனுகப் பெற்று அவன் மயமாக விளங்குகிருர். (பக். 146).

இது சரித்திரத்தில் விளங்கும் முறை. குறுக்கு விசாரணையிலோ தனக்குத்தானே குருவாய்த் தன் ஆத்மாவுக்குத் தன் ஆத்மாவே குருவாய் விளங்குகிருர். இதில் உண்மை யறிவது உன் கடன்.

8. ரிஷியின் பெயரைச் சொல்லி உண்டியல் வசூலித்தல் பொருந்தாத் தொழிலன்றே. (பக். 163).

பிறர் செய்தால் அப்படி. தம்பி—சர்வாதிகாரி செய்தால் எல்லாம் பொருந்தும். எதுவும் தகும்.

9. எது வரினும் அனைவர்க்கும் பகிர்ந்துண்ணும் நெறியை எப்போதும் கடைப்பிடிக்கும் ஸ்வாமிகள் உடனிருப்பவர்க்கும் இப்போது ஊட்டவேண்டியிருந்தது. (பக். 164).

எப்போதுமா? இல்லை இல்லை, பிச்சை எடுக்கும்போதுதான் அந்த ஞானம். பொய் சொல்லி ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் இப்போது அது செல்லாது. பசிக்குச் சோறுகேட்டால் உதையும் குத்தும். ராமனுத பிரம்மச்சாரி இதை நன்ருய் அறிவார். வண்ணரப்பேட்டை ராமய்யா ஆசிரமத்தில் சோறுகேட்ட தோஷத்திற்காகக் கால் கையைக் கட்டிக் கசையடி தந்தார்கள்.

10. மகரிஷியிடம் பெரிய உத்தியோகஸ்தரும் செல்வரும் வந்து அடியார் ஆவதைக் கண்டு சிலர் பொறாமைப்பட்டார்கள். (பக். 166).

இப்பொறாமை ரிஷிக்குக் கிடையவே கிடையாது. தனக்குச் சோறுபோட்ட எச்சம்மாள் பாகவத சாமிக்கும் சோறுபோடத் தொடங்கியபோது உண்டான கோபமும், த்வேஷமும், பொறாமையும் அந்த அம்மாளுக்கும் ரிஷிக்கும்தான் தெரியும். தன்னைப்போல் கோவணம் கட்டிய ஈஸ்வர சுவாமியை அப்புறப்படுத்தியதற்குக் காரணம் பொறாமையல்ல என்று, வாசுதேவ சாஸ்திரி சொல்லுகிறார்.

11 தடபுடல் ஸ்வாமி ஊரைவிட்டுக் கிளப்பவேண்டுமென பிரசாரம் செய்கிறார். ரிஷிகள் காடு சென்று தவம் கிடக்க எண்ணினர். பிறரும் இவர் ஞானியா காஷாயியா என்று தாக்கத் தொடங்கினர். இந்நிலையில் யோகானந்த ஸ்வாமி என்றோர் உண்மைத் துறவி அங்குத் தோன்றினர். எல்லார்க்கும் அவரிடம் வணக்கம் உண்டு. அவர் வந்தபின் ரிஷிக்குத் தொல்லையில்லாதிருந்தது. காட்டிற்கு ஓடும் எண்ணமும் இல்லை. (பக். 181).

ரிஷியை மலையில் நிலைக்கவைத்த இந்த யோகானந்தர் தான் பெருமாள் சாமியை இந்த ரிஷியிடம் அனுப்பி ஆதரிக்கும்படி ஒப்புவித்தார். ரிஷி நன்றி விஸ்வாசத்தை நன்றாகக் காட்டிவிட்டார். ஒப்புவித்த சீடனைக் கோர்ட்டும் கையுமாய் அலைய வைத்தார்.

12. துறவறம் பூண்டும் அறியாது அடாது செய்தது பரிதாபமே! (பக். 183).

தம்பிக்கு அதிகாரம் கொடுத்த ரிஷி இப்போது செய்வதெல்லாம் அடுப்பதே.

13. பகவானைத் தமது பகைமையால் பக்தி செய்ததால் தடபுடல் சாமி அதிர்ஷ்டசாலியே. (பக். 183).

அப்படி ஆனல் நாமும் அதிர்ஷ்டசாலிதான். அப்பாடா! தொல்லை தொலைந்தது! மகான் கோபம் என்ன செய்யுமோ என்று

பயந்து கிடந்தேன்.' இனிமேல் "கெடுவார்கள் என் கடைமயிர் தான்" என்று பயமின்றிப் பாடலாம் ஆடலாம்.

14. மற்றொரு தினுசு மந்திரச் சாமியார் ரிஷியைப்பார்த்து, 'ஏதோ குருட்டதிர்ஷ்டம் ஜனங்கள் வந்து குவிகின்றனர். அவர்களிடம் பணம் வசூலித்து ஒரு காரியம் செய்யத் திறமை இல்லை' என்று செருக்கிச் சொன்னார். (பக். 184).

நம் ரிஷிக்கா பணம் சம்பாதிக்கத் திறமை இல்லை. இந்தச் சாமியார் இப்போது வந்து பார்த்தால் ரிஷியின் பணம் சேர்க்கும் முழுத்திறமையையும் அறிந்து மூக்கில் விரல் வைத்து வியப்பார்.

15 மஹரிஷிகள் பக்தி, ஞான, கர்ம, யோகங்களில் ஒரு சாதனமும் செய்யவில்லையே. அவர் எதனால் இந்நிலை அடைந்தார். என்பதற்கு ரிஷி திருவாக்கிலிருந்தே விடை கூறுவோம். (பக். 194).

திரு ரிஷி இப்போது திருவிசாரணையில் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்கிலிருந்தும் திரு ஸ்டேட்மெண்டிலிருந்தும் திரு விடை கூறினால் நன்றாயிருக்கும். ரமணவிஜயம் ஆசிரியர் அது செய்வாரா?

16. உறவினர் நெருங்கினால் ரிஷி ஒருவேளை இடர் என்று வேறெங்கேனும் சென்று விடுவாரென்றும் சிலர் அஞ்சினர். (பக். 311).

அந்த அச்சம் ஒரு சிறிதும் இப்போது வேண்டாம். கழுத்தைப் பிடித்து தள்ளினாலும் வெளிக்கிளம்பமாட்டார். வீணாக அஞ்சிய முட்டாள்களைப் போன்றவரா நமது ரிஷி? ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருந்த கொக்கல்லவா?

17. எந்த உறவினரும் அல்லிபோன்று மிதக்கலாமே ஒழிய உப்புப்போன்று கரைய முடியாதென்பதை யாரும் அறிந்திலர். (பக். 311). இப்போது எந்த பக்தரும் அல்லிபோன்று மிதக்கலாம். ஆனால் ரிஷியோடு ஒன்றுபட்டு வித்யாசமின்றி உப்புபோல் கரைய உடன்பிறந்த தம்பியும் சுற்றமும் இருக்கின்றன என்று எல்லாரும் அறிவர்.


18. தம்பி நாகசுந்தரமும் ஆசிரமத்தில் சேர்ந்து துறவறந் தரித்து நிரஞ்சனனந்த சாமிகள் என்னும் தீக்ஷாநாமம் பூண்டான். (பக். 312). யார்கொடுத்த தீக்ஷையோ? ரிஷிதான், தீக்ஷைகொடுப்பதில்லையே. பெருமாள் சாமி நனைத்துவைத்திருந்த காவி ஆடைக்குத்தான் அது தெரியும். தவிர, தாய்க்குக் காவி கொடுத்தது யார் என்பதை ரிஷிகளே அறிவார். பெருமாள் சாமிதானே என்று சந்தேகப் படவேண்டாம்.

19. ஆடம்பரம் என்ற பேச்சே ரமணாசிரமத்தில் இல்லை. (பக். 322) போய்ப் பார்த்தால் அதன் ஆடம்பரமற்ற அழகும் பவிஷும் நன்றாய்த் தெரியும்.

20. திருடர் வந்தபோது ரிஷி "இவர்கள் அறியாதவர்கள். இன்னது செய்கிறோம் என்று தெரியாதவர்கள். நாம் தர்மம் இன்னதென்றறிந்து அதையே கடைப்பிடிப்போம்" என்று தர்மோபதேசம் செய்தார்(பக். 327). இப்படிப் பிறர்க்கு உபதேசம் செய்யத்தான் ரிஷிக்குத்தெரியுமே தவிர தான் நடக்கத்தெரியாதுபோலும். தெரிந்திருந்தால் இத்தனை வம்பு வழக்குக்கு இடம் உண்டாகுமா?

21. பகவானுக்குப் பணிவிடைசெய்த கீரைப்பாட்டி இறந்த பின்னும் பசுமாடாகப்பிறந்து ரிஷியை அன்புசெய்கிறாள் என்பதே அன்பர் நம்பிக்கை (பக். 333) இப்படி நம்பும் அன்பர்கள் இறந்தால், ரிஷியின் சந்நிதி விசேடத்தால் எருமையாகவேனும் பிறப்பார்கள்; பயமே இல்லை.

22. நாய், குரங்கு முதலியவை இறந்தால் சிவக்கோலத்துடன் சமாதிவைத்து மேலே கல்லையும் நடுவார் ரிஷி. (பக். 337-338). ஆமாம். அதுபோலவே தன் தாய்க்கும் கல் நடச் செய்தார். ஆனால் நம்மாழ்வாரிடம் மதுரகவியாழ்வார் வைத்த அன்பையே ரிஷியிடம் வைத்து, கண்ணைக்காக்கின்ற இமைபோல் காத்தவரும், உயிருக்கு உடல்போல் இருந்தவருமான பழநி ஸ்வாமிக்கோ? ஒன்றுமே இல்லை. நாய்க்கும் தாய்க்கும் கிடைத்த கல் இந்த மலையாள சூத்ரசாமிக்குக் கிடைக்கவில்லையா?



ரமணரிஷி, ரிஷியின் தம்பி தாசில்தார், டிப்டிகலக்டர், சப்மாஜிஸ்டிரேட், சர்க்கில் இன்ஸ்பெக்டர், வாட்டர் ஒர்க்ஸ் எஞ்சினீயர், வக்கீல்கள், முதலியவர்கள் சேர்ந்த படம்.

23. பகவான் சமையல் வேலைகளில் துணைசெய்வார். அறுசுவை உணவு பகவான் கையால் ஆக்கப்பட்டால் அதில் ஏழாவது இனிய சிவானந்தச்சுவை ஒன்று சூட்சுமமாகத்தோன்றும். (பக். 344). இப்போதும் பகவான் கோர்ட் விவகாரங்களில் துணைசெய்வார். இவர்க்குத் துணைபுரியும் சட்ட நிபுணர்க்குக்கூடச் சட்டநுட்பம் ஒன்றும்புரியாதபடி சூட்சுமங்களைச் செய்துவிடுவார். ரிஷிகைகாரப் பேர்வழி. பாருமே! இவர் விடயத்தில் எந்தசட்டம் பொருந்தும் என்று புரியாதபடி திகைக்கிறார் ஒரு பிரபல முனிசீப். அவர் தம்தீர்ப்பில் கூறும் பின்வரும் வாக்யங்களைப் பார்த்தால் அது புரியும்.

"It follows therefore that the rule of succession prescribed for Sanyasins may not apply to him that is to say, the rule of succession in regard to Sanyasins or Madathipathis prescribed under the Hindu Law, that his natural family is different from his spiritual family into which he enters or becomes a Sanyasin and that the 'chela or the accepted Shisya should succeed him to his properties and not his relations of the original family, may not apply to him as he is not a regular Sanyasin and does not initiate anybody into any order and has no chelas or Shisyas. It may be a shrewd question of law what rule of succession applies to such persons as 1st defendant describing themselves as Atyasramites, what is to become of the properties after his death unless he executes a will is not known. It may be that, since he does not fall under the classification of Sanyasins, the ordinary law of succession applies in this case *i. e.*, the natural heir in the family succeed him 2nd defendant is the heir in the natural family and according to this view, he may become his next heir in the natural family unless 1st defendant executes a will with reference to his properties. However 1st defendant now describe

himself to be, the question is how the worshippers regard him. I do not think it may be said that any baktha regarded him otherwise than as a Sanyasin or akin to a Sanyasin.

சந்யாசி அல்ல என்று ஏமாற்றும் உலகறிந்த ஒரு சந்யாசிக்கு, குடும்பஸ்தர்கள் சட்டம் பொருந்துமா? சந்யாசிகள் சட்டம் பொருந்துமா? என்று கனம் முனிசீப் திகைப்பது தெரியவில்லையா? நமக்குத் தெளிவாய்த்தெரிகிறது சந்யாசிகள் சட்டந்தான்பொருந்தும் என்று. என் கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ? ஆனால் இது ரிஷிகள் சம்பந்தப்பட்ட வழக்கல்லவா? ரிஷி சூட்சமத்தால் முனிசீப்புக்கும் சட்டத்தில் திகைப்பை உண்டாக்கி, கடைசியில் குடும்பஸ்தர்க்குரிய சட்டந்தான் பொருந்தும் எனக் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்துத் தெளியுமாறு செய்து, "அண்ணன் சொத்து தம்பிக்குச் சேரலாம்" என்று இப்படியுமின்றி, அப்படியுமின்றி நடுநிலையாக (நியாயாதிபதி அல்லவா?) க்கூறும்படி செய்திருக்கிறார். எப்படி? சமையலில் தோன்றும் ரிஷியின் கைச்சூட்சமமெல்லாம் சட்டத்திலும் தோன்றும்படி செய்து விட்டாரா! இல்லையா?

இம்மட்டோ! இம்முனிசீப் முன்னிலையில் ரிஷிகள் கொடுத்த வக்காலத்து, அதிகாரப்பத்திரம் பெற்ற நிரஞ்சனானந்தசுவாமி பேரால் கொடுக்கப்பட்டது. அது ஒத்துக்கொள்ள முடியாதென மறுக்கப்பட்டபொழுது, ரமணாசிரமம் சீல், ரிஷிகளுடைய சீல், அவரது கோடுகள், அதற்கு சாட்சிகள் முதலியன கூடியவக்காலத்து ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதுவும் ரிஷியர்ல் கையெழுத்திடப்படாதிருந்த காரணத்தால் ஒத்துக்கொள்ள முடியாதெனத் தள்ளப்பட்டது. அதுபற்றி அம்முனிசீப் கொண்டகருத்து பின்வருவது:—

"In this case, there is no question of inability to write the name by first defendant (the sami) or illiteracy, blindness or deafness or dumbness. I am therefore of opinion

that the second Vakalat does not constitute a valid power of appointment"

இவ்வாறிருந்தும் கையெழுத்தில்லாது, சீலும், கோடும் பட்டும் பதிக்கப்பட்ட அதிகாரப்பத்திரம் மட்டும் எப்படிச் செல்லுமென ஐயப்பாடு நிகழலாம். சப்ரிஜிஸ்திரார் ஒருசீலை உயிருள்ள மனிதனுக் கொப்பாக எண்ணி இந்த அதிகாரப்பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்திருக்கிறார். இது விஷயத்தை ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்ட் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அறிவித்தபொழுது, அச்செய்கை தண்டிக்கத்தக்கதல்ல வென்று கூறினாராம். அது ஒப்புக் கொள்ளப் படத்தக்கதா வென்பது பற்றி ஒன்றும் தகவல் கிடையாது. இதுவும் ரிஷிகளின் சூட்சுமச்செய்கையின் பெருமையே தவிர வேறென்ன?

கை எழுத்தில்லாத வக்காலத்தை ஒத்துக்கொள்ள முடியாதென தீர்ப்புக்கூறிய முனிசீப்பே, ரிஷிகளின் கை எழுத்திடப் படாத வாக்குப் பிரமாணங்களைக்கொண்டும், அதிகாரப்பத்திரம் பெற்ற ஏஜண்டின் (முதலில் தள்ளப்பட்ட) வக்காலத்தின் ஆதாரத்தைக் கொண்டும் கேசை நடத்தி முடிவான தீர்ப்பும் கூறும்படி நேர்ந்ததென்றால் இவர் தம் பெருமை தான் என்னே. முனிசீப் அவர்கள் ரிஷிகளின் கை எழுத்திடப்படாத பிரமாணங்களைப்பற்றி கடைசியில் ஏதோ கூறுவதாகச் சொன்னாராம். ஆனால் அது விஷயமாகவும் ஏதும் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இவை எல்லாம் எவ்வாறு சூழ்ச்சியால் செய்யப்பட்டன என்று நான் முன்பேகூறினேனல்லவா. ஆகவே அரசாங்கத்தின் சட்டங்களெல்லாம் ரிஷிகள் விஷயத்தில் பொருந்தவே பொருந்தாது. முனிசீப் கருதுகிறபடி அத்யாஸ்ரமிகளுக்கு கை எழுத்திடாமல் கேசுகள் நடத்துவதற்கு வேண்டியபடி சட்டங்கள் திருத்தி அமைத்தல் அவசியம் என்பதை நீ அறியவும். அரசாங்கம் கவனிக்குமா?

24. ஆனால் எப்படியோ ரிஷியை அண்டிவந்த அன்பர் துயரம் ஆடி மேகம் போலப்பறக்கிறது! (பக் 346) அப்படியா? எல்லாம்

தெரிந்த நூல் ஆசிரியர்க்கு இது புரியவில்லையா? கம்பீரம் சேஷய்யர் ஆசிரமச் சேர்க்கையால் அல்லலுக்குள்ளாகி மூல வியாதியால் கஷ்டப்பட்டபோது, அவரைத் தாட்சணியமின்றிக் கிளப்பி விட்டார்களே, அப்போது கேட்டால் அவர் புரியும்படி சொல்லி இருப்பார். பாவம் அவர் இறந்து விட்டார். ஆயினும் நாராயண ரெட்டியும் பெருமாள் சாமியும் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்டாலும் ரிஷியை அண்டிய தங்கள் துயரம் எப்படிப்பறக்கிறது என்பதைப் புரிய வைப்பார்கள்.

25. ஸஹஜஸ்திதியில் உடலை மறந்த பகவான் அதிக தூரம் வெளிச் செல்லாதிருப்பதே அன்பர்களின் கோரிக்கையாகும். (பக் 350) உண்மை அன்பர்கள் ஆனால், அவர் மனம் கோர்ட் விவகாரங்களில் நெடுந்தூரம் செல்லா திருக்குமாறு கோரலாம். ஆனால் கூட இருந்து குளிர்காய்வோர்க்கு—பொறுக்கித் தின்று வயிறு வளர்ப்போர்க்கு—வழக்கும் வம்பும் தும்பும் இருந்தால்தானே கொண்டாட்டம்.

26. நரசிம்மஸ்வாமிகள் ரமண சங்கத்திற்கு வாடா நறுமலர் மாலையாகவிளங்குகிறார். (பக் 356) இவர் நிலையாக இப்போது இருக்கும் இடமும், விலாசமும்தெரியவில்லை. நல்லவர்க்கு ரமணாசிரமத்தில் இடம் எது? இவர் “சாதுக்களாவார் சகவாசம் நண்ணினால், எதுக் காமிஞ்சியமெல்லாமு—மேதக்க, தன் தென்றல் மாருதந்தான் வீசவே விசிறி கொண்டென்னகாரியம் நீ கூறு” (இது விம்மி விம்மி அழுவதற்குக் காரணமாயிருந்த ஸ்ரீமதி செல்லம்மாள் என்னும் இள மங்கையின் பொருட்டு ரிஷி பாடியபாட்டு) என்னும் பகவான் எமாற்றுப் பாட்டை லட்சியம் செய்யாமல் “தீயார்குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ டிணங்கி இருப்பதுவுந் தீது” என்று ஆசிரமத்தை விட்டுப் போய்விட்டார்.

27. ரமண சங்கத்தின் வேலை வெற்றிபெற நூற்றுக்கணக்கான துறவிகளும். ஹம்ஸினிகளும் (பெண் துறவி) வேண்டும். இவர்களே ரமணசங்கமாக ஒன்று படவேண்டும். (பக். 368)

ஒன்றுபடுவது மனத்தாலா? உடம்பாலா?" ஒன்றுபடும் இதுவே, ரமண விஜயத்தின் முடிந்த முடிபாதலால் தெளிவாகத் தெரிய வேண்டும். பின்னது கூடியவரை வெற்றிகரமாக இப்போதே நடந்தேறிவருகிறது என்று கேள்வி.

| | | | |
|---|---|---|---|
| சனி | செவ் | | சந் கே |
| குரு | இராசி | | மாந்தி |
| | | | |
| ர ரா | சுக் புத | ல | |

28. இது பகவான் பிறந்தபோது ராசி நிலையை விளக்கும் சக்கரம். இதைக் கண்டவுடனேயே ஒரு மஹான் பிறந்ததை யாரும் சொல்வார். (பக் 40) ஆனால் அம்மகான் செய்கையை அதிகாரப் பத்திரமும் வாக்குமூலமும் நன்றாகச் சொல்லும். இதன் மாதுர்ப் பாவத்தைப் பார்த்தால் தாயின் கற்பும் விளங்கும். அதைப் பார்த்துக் "கணவன் கையால் உலக்கை அடிவாங்கும் யோகம் பொருந்தியவள்" என்று விடயமறிந்த மற்றொரு ஜோசியர் கூறுகிறார்.

29. அழகம்மை. இவளே பகவானை ஈன்ற பாக்கியவதி. அண்டிய விருந்தினர்க்கன்புடன் ஊட்டுபவள். வசிட்டர்க்கு அருந்ததி போல் வாய்த்தவள். குடும்பநிலை இவளைத் துயர் என்னும் தீயில் உருக்கி மனத்தைத் துறவென்னும் மாற்றேற்றியது. அழகம்மாளுக்கு வேறுகதி இல்லை. திருவண்ணாமலைக்கே வந்துசேர்ந்தாள். ஆசிரமத்திற்குவந்த பக்தர்களை முகமலர்ந்து அம்மை அறுசுவை விருந்தால் உபசரிப்பாள். அம்மையார் அன்று மூட்டிய அடுப்பு இன்னும் ரமணாசிரமத்தில் வேதவேள்வித் தீபோல்வளர்ந்து வைஸ்வாநரயஜ்ஞம் செய்து வருகிறது. (பக் 312) இவ்வம்மையார் தான் கத்தரிக்காய் போன்ற அற்ப வஸ்துக்களையும் சம்பிரம் சேஷய்யர்

கிருஷ்ணய்யர் போன்ற உத்தம பக்தர்கட்குக் கூடக்கொடுக்காமல், லோபகுணத்தால் பலமுறை ஆசிரமத்தில் கலவரம் விளைத்தஉத்தமி. "அக்காலத்தில் குடும்பத்தில் புருஷனிடம் வாங்கிய உலக்கை அடியாலும் திருந்தாத உன் லோபகுணத்தை இங்கு மகனிடம் வந்தும் விடாமல் மானத்தை வாங்குகிருயே" என்று ரிஷி வாக்காலேயே பலர் அறியப் பாராட்டப்பெற்ற மாதரு பூதேஸ்வரி.

ஆ:—போதும், போதும். விஷயம் விளங்கிவிட்டன. ரிஷி எப்படி இருந்தால் என்ன? அவர் உபதேசந்தானே நமக்குத்தேவை. உபதேசங்களில் குறை கூறமுடியுமா? அவரிடம் விளங்கும் அற்புதக் காட்சிகளில் தான் குறைவுண்டா?

அ:—குறைவே இல்லை. அற்புதக்காட்சிகள் ஒன்ரு இரண்டா! பலப்பல. அவை

1. ரிஷியின் நெற்றியை ஒரு நக்ஷத்ரம் வந்து ஆறு தடவை தொட்டுச்சென்றது. (பக் 239)

2. சித்தர்கள் ஆகாயத்தில் உலவுவதுபோல் ரிஷி, ஓரிரவில ஆகாயமார்க்கமாகச்சென்று திருவொற்றியூரில் இருந்த முனிவர்க்கு பிரத்யட்சமாய்த் தோன்றி உபதேசித்தது. (பக் 240)

3. தான் பாராத திருவொற்றியூரை உள்ளபடியேவர்ணித்து சீடர்க்குச் சொன்னது. (பக் 241)

4. மூன்று கேள்விகள் கேட்கவந்த ஒருவர்க்கு ரிஷி அவர் கேட்குமுன் பதில்கூறித் தன் வடிவை ஜோதிமயமான தட்சிணா மூர்த்தமாகத் தோன்றச் செய்தது. (பக் 264)

5. ஒரு ஆங்கிலேயர்க்குக் கனவில் காட்சிகொடுத்துத் தன்னிடம் வருவித்தது. (பக் 276)

6. பிறர் மனத்தைப் புத்தகம் படிப்பதுபோல் படித்தறிவது (பக் 280)

7. சித்தஸம்வித் என்ற யோகசக்தி பகவானிடம் அமைந்திருக்கிறது என்பதை விளக்க ரமணவிஜய நூலாசிரியரே பல உதாரணங்களைக் கண்டது. (பக் 347)

8. இன்னும் விஷம் எருமை பாம்புபணிந்து செல்லல் முத லியவும், பிரண்டன் போன்ஞேர் சொல்லக்கேட்டு எழுதிய பலவும், நேரில் மயங்கிக்கண்டோ, மதிப்பிற்கோ கூறிய சிலவும், பிறவும்.

இவை எல்லாம் உண்மையா பொய்யா என்னும் ஆராய்ச்சிக்கு நான் வேறொன்றும் விசேடமாகக் கூறப்போவதில்லை. இதுபோன் றதோர் அற்புதந்தான், தண்ணீரில்லாது கஷ்டப்பட்டபோது ரிஷி கண்டுபிடித்த வற்ருத ஊற்று. (பக் 317) அதை இப்போது நேரில் சென்றுபார். அது பாதாளம் வரையில் பதித்ததோர் பாறையாலான பாத்திரம்போல் வறண்டு ஈரமற்றுக் காட்சி கொடுப் பதைக் காண்பாய். அதன் நிலையோடு விஜயத்தில் கூறப்பட்ட பொய் வர்ணனைகளை ஒப்பிட்டு நோக்கு. அதனுல் உனக்கு விளங்கும் உண்மை எவ்வளவோ அவ்வளவு உண்மை பொருந்தியவைதாம் மேலே எட்டுவகைப்பட வகுத்துக் காட்டிய அற்புதங்களும் பிற வும். இதில் சந்தேகமே வேண்டாம். எட்டுவகையும் குட்டிச்சுவரே. அவை எல்லாம் மதிமயக்கர்களும், கஞ்சாக்குடியர்களும், கிறுக் கர்களும், சுயநல அசத்திய அ த்துக்களும், அசடுகளும் அளந்து கொட்டும் முழுப் பொய். முற்றும் பொய். முக்காலும் பொய்.

ஆ :—ரிஷியின் உபதேசங்களும் அப்படித்தானே?

அ :—அதற்கென்ன சந்தேகம். அவர் உபதேசங்களின் நிலை மையை அறிந்தோ அறியாமலோ, "நானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்" என்பதுபோல் விஜயம் ஆசிரியரே பின்வரு மாறு விளக்குகிருர். "பகவானின் உபதேசங்களைப் போன்று, தெளிவும், சுவையும், இனிமையுமுள்ள ஒரு பாலூற்றுப் பொசிந்து பொங்கியது." (பக் 317.) இப்பாலூற்றின் இன்றைய தெளிவும், சுவையும் இனிமையும் எல்லார்க்கும் தெரியும். நீயும் சென்ருல் அதன் வறட்டுக்காட்சியைப் பார்ப்பாய். அதுபோல்தான் ரிஷியின் உபதேச ஊற்றின் தெளிவும், சுவையும், இனிமையும் இருக்கின்றன. இவ்வுபதேசங்களின் உண்மையைப்பற்றி மற்ருெருசமயம் விவாதிக் கலாம். இப்போது "இரண்டு குளம் வெட்டினேன் ஒன்று பாழ்

மற்ருென்றில் ஜலமே இல்லை'' என்பதற்கிலக்காக, ரமணவிஜயம் ஒப்பிட்டுக் கூறும் பாழூற்றுக்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று ரமண ரிஷி கண்டுபிடித்த ரமண தீர்த்தம். மற்ருென்று, ரிஷி கண்டுகூறும் உபதேசம். ரமண தீர்த்தம் இப்போது எப்படிப் பாழ்பட்டுக் கிடக்கிற தென்பதை ஆரம்பத்திலேயே கூறினேன். அதை எட்டிப்பார்த் தால் அமெரிக்காவைக் காணலாமே ஒழிய ஜலத்தைச் சிறிதும் கா ணவே முடியாது (மழைநீர் தேங்கினுல் அன்றி). அதுபோல் அவர் உபதேசமும் பாழ்,—பெரும் பாழ்—மிகப்பெரும் பாழ்,—என்று அந்தத்திலும் உறுதியாகச் சத்தியமிட்டுக் கூறி முடிக்கிறேன்.

ஆ:—ரமண விஜயத்தின் ஆசிரியர் வேறு துறைகளில் மதிப் பிற் குரியவராயிற்றே. அவர் விடயங்களை இப்படித் திரித்துக் கூறுவாரா?

அ:—ஆம் இவரை நாமும் நன்கறிவோம். ஒருவனை எல்லா விஷ யத்திலும்யோக்யன் என்று பூரணமாய் நம்பமுடியாது. சோமாதேவி குருகுல போராட்டத்தின் உண்மையையும் ஞாபகப்படுத்திக்கொள். ஆசிரியர் மற்றத் துறையில் எப்படி ஆயினும், இதில் சொல்வார் பேச்சைநம்பி அறியாமலே பலமோசங்களை வெளி இட்டிருக்கிருர். மேலும் பொருள் கொடுத்தால் "போற்றினும் போற்றுவர்" என் பதைக் கேட்டதில்லையா? அவர் நாணமுடையவர்; ஆனுல் இது விஷயமாய் "பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர்" என் பதைக் கடைப்பிடித்துத் தன் உண்மை நிலையையும், ரிஷியின் தற் காலப் போக்கையும் விளக்கி ஒரு அறிக்கை வெளியிடவேண்டும். "சொன்ன சொற்களை மாற்றுவதற்குப்" பின்னிடக்கூடாது. அது புலவர்க்கு இயல்பே. ரிஷியும் இதற்கு வழிகாட்டி இருக்கி ருர். பயம்வேண்டாம். இப்படி இவ்வாசிரியர் செய்யவில்லை யானுல் அவர் "கூற்றினும் கொடியவர்" ஆவார். அன்றி "அரச மரத்துச் சனியன் பிள்ளையாரையும் பிடித்தது" போல் இந்நூலால் இவர்க்கு ஏற்பட்டுள்ள இழிவு, மற்ற நூல்களின் மதிப்பையும் கெடுத் துச் குட்டிச்சுவராக்கிவிடும்.

ஆ:—ரமணன் அல்லும் பகலும் அறிவாகி நின்றான். சித்தம் தெளிந்து சிவமானான். பாசஜாலங்களை ஞானவாளால் அறுத்தான். மனக் கற்பூரத்தைக் கரைத்து ஞானவிளக்கேற்றினான். (பக். 118) ஞான சூரியன் ஆனான். அகண்டமின்சாரமான ரமண தீபத்திலிருந்து பல்லாயிரம் மின்விளக்குகள் ஏற்றப்பட்டு, ஞான சம்பந்தக் கம்பிகளால் இணைப்புண்டு ஆங்காங்கு உலகெங்கும் இருளொழிய விளங்கவேண்டும். (பக் 368) என்று புகழப்பட்ட ரமண தீபம் இப்படியா சக்தியற்று, ஞானமற்று, ஒளியற்று மங்கிக் கிடக்கிறது! ஆஹா! நான் ஏமார்ந்த சோண கிரியாய் இப் பொய்ப் புத்தகங்களையும் ரமண உபதேசங்களையும் மெய்யெனக் கட்டி அழுது புத்தகப்புழுவாய்க் காலத்தை வீணாகக் கழித்து விட்டேனே!

“ எல்லா உலகும் துரும்பாயினும் மறைகள்
எல்லாமே கைக்குள் இருந்தாலும்—பொல்லாப்
புகழ்ச்சியாம் வேசிவசம் புக்கார் அடிமை
அகலவிடல் அம்மா அரிது”

என்று பாடிய ரிஷி, தாமே பொய்ப்புகழுக்கு இவ்வாறு அடிமையாகிக் கெட்டாரா! உன் உபதேசத்தால் உண்மை உணர்ந்தேன், உய்ந்தேன். என்ன கைம்மாறு செய்வேன்.

அ:—மஹான் தூஷணம்—பெரியவாள் அபராதம்—பாவம்—தோஷம்—என்று மகா பக்தனைப்போல் கூறி ஏமாறாமல், என் வார்த்தைகளைச் செவியேற்றுக் கவனித்து உண்மை அறிந்ததே போதும்.

“ எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு”
“ எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு”

இவ்வறிவு வாய்ப்பெற்ற நீயே மஹான், பக்தன், இன்னும் இப்படியே பல சோம்பேறிக் கூட்டங்கள், கோவணம்கட்டிகள், கோவணம் அற்ற மட்டிகள் எல்லாம் மஹான், பெரியவாள், துறவி,

சந்யாசி, ரிஷி, முனி என்று பேர்வைத்துக்கொண்டு ரமண மஹரிஷிகளைப்போலவே உலகை ஏய்த்துக் கெடுக்கின்றன. அந்த மயக்கில் நீ வசப்படாதே. ஒவ்வொன்றின் நிஜஸ்வரூபத்தையும் ஆராய்ந்து பார். உண்மையை ஆய்ந்து அறிந்து பின் ஏதேனும் செய். மூட நம்பிக்கையால் பகுத்தறிவைப் பாழாக்காதே. கடைசியாக ஒன்று சொல்லுகிறேன். அதை நன்றாக ஞாபகத்தில் பதியவை, மறவாதே. "மின்னுவதெல்லாம் பொன்னாகாது."

---

# ரமண மஹரிஷியின் வாக்குமூலம்

---

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (திருவள்ளுவர்.)

இது, ஸ்ரீ ரமணரிஷிகளே நேரில் கமிஷனர் முன்னிலையில் கொடுத்த பிரமாண வாக்குமூலமும், குறுக்கு விசாரணையில் அளித்த பதிலும் ஆகும். இதனைக் கொண்டு ரிஷிகளின் நிஜஸ்வரூபத்தை உலகம் கண்டு உய்க.

Before the Commissioner in O. S. 30/36 on the file of the District Munsif, Tiruvannamalai.

Deposition of the 1st defendant. Name :—Ramanarishi.

[Solemnly] affirmed under the Provision of Act x of 1873 this 15th day of November 1936.

நான் திருவண்ணாமலைக்கு 1896ல் வந்தேன். இந்த ஊருக்கு வந்தபிறகு அநேக இடங்களில் வாசம் செய்திருக்கிறேன். 1914ல் வாதி பெருமாள் சாமியாரைச் சந்தித்தேன். அப்பொழுது நான் விருபாட்க்ஷ குகையில் வாசம். அப்பொழுது எனக்கு பெருமாள் சாமியும், அய்யாசாமியும் சிஸ்ருஷை செய்துக் கொண்டு வந்தார்கள். பெருமாள் சாமியார் சில நாள் வெளியில் யாத்திரை போவதுண்டு. என்னிடமும் இருப்பதுண்டு. 1916-ம் வருஷத்தில் விருபாட்க்ஷ ஆஸ்ரமத்தைவிட்டு ஸ்கந்தாஸ்ரமத்திற்கு வாசம் போனேன். அந்த கந்தாஸ்ரமம் ஒரு கட்டடம். ஒரு ஜோனை, ஒரு தோட்டம் இருந்தது. அந்த ஆஸ்ரமத்திற்குப் போவதற்கு மலையடி ஓரத்திலிருந்து படிகள் போட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அநேகம்பேர் பணம் கொடுத்திருக்கிறார். இந்தப் பணத்தை அநேகபேர் இவ்விடம் இருக்கிறவரிடம் கொடுத்திருக்கிறார்கள். அதில் பெருமாள்சாமியாரும், ஓவர்சியர், இன்னும் ஒரு கந்தசாமியும்

மேல் கண்ட ஓவர்சியர் சேஷய்யர் இப்பொழுது காலம் ஆய்விட்டார். இந்த பணங்களை என்னை உத்தேசித்துத்தான் கொடுத்தார்கள். ஸ்கந்தாஸ்ரமத்தில் அக்டோபர் 1922 வரையில் வாசம் செய்தேன். நான் பெருமாள் சாமியாருக்கு சந்யாஸ்ரமம் கொடுத்ததில்லை. நான் யாரிடமும் சன்யாஸ்ரமம் வாங்கவில்லை. நான் ஸ்கந்தாஸ்ரமத்தில் இருக்கும்பொழுது என் தாயார் 1922ல் காலம் ஆய்விட்டது. பிணத்தை 4, 5 பேர் மலைமேல் இருந்து அடிவாரம் சமாதி செய்ய கொண்டு வந்தார்கள். இந்த ரமணாஸ்ரமத்தில் அந்தப்ரேதத்தை அடக்கம் செய்யப்பட்டது. அநேகபேர் அதை அடக்கம் செய்தார்கள். அநேக ஜனங்கள் கற்பூரம் கொண்டு வந்து கொளுத்தினர். அந்தம்மாளுக்கு வேறே உத்திரக் கிரியைகள் யாதும் செய்யவில்லை. அடக்கம் செய்ததினமே சமாதி கட்டி ஆய்விட்டது. அது முதல் பூஜை செய்யப்பட்டது. தினம் பூஜை D 2 சின்ன சாமி செய்து வந்தார். 16-ம்நாள் அபிஷேகம் செய்யப்பட்டது. அது செய்ததை நான் சொல்லமுடியாது. நாராயணசாமி அய்யர் வகையறா செய்திருக்கலாம். பிரியாதில் கண்டிருக்கும்படி நான் வாதியை என் தாயாருக்குக் கிரியைகளைச் செய்யச்சொல்லவில்லை. வாதியே கிரியைகளைச் செய்யவில்லை. அப்படிச்செய்யச் சொல்லி நான் சொல்லவும் இல்லை. பத்தாவது நாள் வாதி பணத்தை வசூல் செய்து பத்து பேருக்கு சாப்பாடு போட்டார். எனக்கும் சாப்பாடு போட்டார். சமாதி கட்டினது எனக்கு நேரில் தெரியாது. 1922ல் நவம்பருக்குப் பிற்பாடு ஸ்கந்தாஸ்ரமத்தை விட்டு இந்த ஆஸ்ரமத்திற்கு வந்துவிட்டேன். அது முதல் நான் இந்த ஆஸ்ரமத்தை விட வேறே எவ்விடமும் போகவில்லை. 1922க்குப் பிறகு இந்த ஆஸ்ரமத்தில் அநேகபேர் கொடுத்த பணத்தினால் அநேக கட்டடங்கள் கட்டப்பட்டன. குளத்தை மராமத்து செய்து தோட்டம் வைக்கப்பட்டது. இதற்கெல்லாம் பணம் பக்தாள்தான் கொடுத்தார். இந்தப்பணமெல்லாம் என்னைப்பொருத்துதான் கொடுத்தார். ஆஸ்ரமத்தில் தினந்தோறும் செலவுகள் ஆய்க்கொண்டு வருகிறது. வரவுசெலவுகள் நான் கவனிப்பதில்லை. வாசு சிலநாள்;

கோபால ரூவ் சிலநாள், தண்டபாணி பார்த்து நடத்திவந்தார். ருமசாமியும் பார்த்துவந்தார். 1922 முதல் இந்தக் காரியங்களை வாதி கவனித்ததே கிடையாது. மேல்கண்ட வாசு முதலானவர்கள் வாதி உத்தரவு மேல் காரியங்களை நடத்தி வரவில்லை. இவர்கள் வாதியினுடைய மேல்பார்வை கீழ் நடக்கவில்லை. இவர்கள் யாரும் என்னிடம் அவரவர் செய்துகொண்டுவந்தவேலைகளைப்பற்றி சொல்லுவதில்லை. வாதி திருவண்ணாமலை டவுனில் பிரதி வருஷமும் முதலிலிருந்து ஜயந்தி செய்துகொண்டுவந்தார். அதுவும் நான் செய்யச் சொல்லவில்லை. இந்த ஆஸ்ரமத்திலும் ஜயந்தி பிரதி வருஷமும் 1922 லிருந்து நடந்துக்கொண்டு வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் நடந்து வந்த ஜயந்தி வகையரு வேலைகளுக்கும் வாதி ஊரில் செய்து வந்த வேலைகளுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. 1922 பிறகு இந்த ஆஸ்ரமத்திற்கு நான் வந்த பிறகு வாதி இவ்விட கட்டடங்கள் கட்டும் விஷயங்களாவது மற்ற ஆஸ்ரமத்திற்கு சம்மந்தப்பட்ட வேலைகளையும் பார்த்ததே கிடையாது. வாதி என்னுடைய ரூபத்தை விக்கிரஹம் ஒன்று செய்திருக்கிறார். இதற்காக வாதி என்னிடம் மதருவிலிருந்து போடோ எடுக்க ஒரு போடோக்ருப்பரை கொண்டுவந்தார். அவருக்கு நான் சிட்டிங்க்ஸ் கொடுத்தேன். அவர் என்னை பாக்வீல், சைட்வீல், ப்ரண்ட்வீல் எடுத்துக்கொண்டார். ஆர்டிஸ்ட் பின்னல் படங்களை என்னிடம் கரெக்‌ஷனுக்காகக் கொண்டுவந்தார். என்னைப் போடோ எடுக்க அநேகபேர் கேட்டிருக்கிறார். நான் யாருக்கும் மறுத்தது கிடையாது. என் விக்கிரஹம் செய்யச் சொல்லி நான் வாதிக்கு உத்தரவு கொடுக்கவில்லை. இதற்காகப்பணம் வசூல் செய்யச்சொல்லி வாதிக்கு சொல்லவில்லை. வசூல் செய்தவரை நான் தடுக்கவும் இல்லை. இந்த விக்கிரகத்தை இவ்விடம் வைக்க நான் வாதிக்குச் சொல்லவில்லை. அவர் என் விக்கிரகத்தை இவ்விடம் வைக்கக்கூடாதென்று தடுத்து இருக்கிறேன். எக்ஸிபிட் Bல் என்னுடைய கரெக்‌ஷன்ஸ், ரைடிங்கில் ஒன்றும் இல்லை. Exhibit B 1லும் என்னுடைய எழுத்து ஒன்றும் இல்லை. வாதி ரமணாஸ்ரமம் போ

உபயோகப்படுத்தி ஊரில் ஜயந்தி முதலான விசேஷங்களை நடத்துவதுண்டு. வாதி சொல்லும் ரமணாஸ்ரமத்திற்கும், இந்த ரமணாஸ்ரமத்திற்கும் யாதொரு சம்பந்தம் கிடையாது. Exhibit VII ல் சீல்களை நான்தான் வைத்தது. Exhibit K என்னுடைய கை எழுத்து. Exhibit K 1ம் என்னுடைய கை எழுத்து. எனக்கு English, Tamil, இன்னும் இதர பாஷைகள் எழுதப் படிக்கத் தெரியும். 1896 முதல் அதாவது இந்த ஊருக்கு வந்தது முதல் நான் எந்தக் கடிதத்திலும் பேர் போட்டது கிடையாது. எனக்கு எப்பொழுதும் நான் வைத்துக்கொண்ட பெயர் இல்லை. நான் எப்பொழுதும் சிஷ்யாளை வைத்துக்கொண்டு அவர்களுக்கு தீட்சையாவது உபதேசமாவது செய்வதில்லை. என்னைச் சுற்றி இருப்பவர்களுக்கு நான் யாதொரு நேமங்களை நியமித்தது கிடையாது. நான் யாரையும் இவ்விடம் வரச்சொல்வதாவது, இவ்விடம் இருக்கச் சொல்வதாவது கிடையாது. நான் இவ்விடம் அதாவது இந்த ஆஸ்ரமத்திற்கு வந்த பிறகு வாதி வசூல் செய்யும் பணத்திற்காவது, அவர் செய்துவரும் ஜயந்தி விசேஷங்களுக்கும் சம்பந்தமில்லை. வாதி நடத்திக் கொண்டுவந்த ரமணாஸ்ரமத்தைப்பற்றி பின்னால் நான் கேள்விப்பட்டு அவரை இந்தமாதிரி செய்யலாமா என்று கேட்டேன். அவரை அவருடைய ஆஸ்ரமத்திற்கு என் மந்திரம் என்று பேர் வைக்கக்கூடாது என்று கேட்டேன். நான் ஸ்கந்தாஸ்ரமத்தை விட்ட பிறகு பலபேர் அதில் இருந்து வந்தார். இப்பொழுது அதில் விருதாசல குருக்கள் என் உத்தரவு கேட்டுக்கொண்டு அதில் இருந்து வருகிறார். என்னிடம் இருந்து தான் சாவியும் கூவும் இவ்விடமிருந்து எடுத்துக்கொண்டு போனார். நான் எப்பொழுதும் வாதியிடம் விருதாசல குருக்களைப் பற்றிச் சொன்னதே கிடையாது. (Pw 2) சொல்லியபடி கோபால ராவ் என்னை இவ்விடம் கட்டியிருக்கும் 2 ரூம் டிசைனைப்பற்றி கேட்டதும் கிடையாது. அவரை நான் வாதியை கேழ்க்கச் சொன்னதும் கிடையாது. 1925 வருஷத்தில் சிவபிரகாசம் முதலியார் பிள்ளை என்னை இவ்விடம் ஒருமான் வைப்பதற்கு உத்தரவு கேட்டது கிடையாது. அவரை

வாதியை கேழ்க்கும்படி நான் சொல்லவில்லை. பாதாம் செடியை வைக்க உத்திரவு யாரும் கேழ்க்கவும் இல்லை. இந்த இடத்திற்கு ரமணாஸ்ரமம் என்று வாதி பேர் கொடுக்கவில்லை. இவ்விடம் பக்தாள் கொடுத்த பணத்தை எனக்கென்றும் பக்தாளுக்கு என்றும் சொல்லிக்கொடுத்தது கிடையாது.

Cross examination by the plaintiffs Vakil :—

நான் பிராம்ஹணப் பிறப்பு. நான் இவ்விடம் வந்தபொழுது எனக்கு 17 வயசு. நான் இவ்விடம் வருகிறதற்கு முந்தியே எனக்கு உபநயனம் ஆய்விட்டது. நான் இவ்விடம் வரும்போது கிரஹஸ்தாஸ்ரமத்தில் இருந்துதான் வந்தேன். இந்த ஊருக்கு வந்த ஒரு மணி நேரத்திற்குள் யக்யோபவிதம், வேஷ்டி முதலானது கழட்டி எறிந்து விட்டேன். தலையும் மொட்டை செய்துக் கொண்டேன். நான் இவ்விடம் வந்த பொழுது என்னிடம் சுமார் மூன்று ரூபாய் இருந்தது. அந்தப்பணமும் எறிந்துவிட்டேன். அது முதல் நான் பணத்தைக் கையில் தொடுவதில்லை. சாப்பிடுகிற தினுசுகள் கையால் தொட்டு வாங்குவதுண்டு.பணம் வாங்காததற்குக் காரணம் என்னவென்றால் அதை நான் என்ன செய்வது. அது எனக்குத் தேவை இல்லாததினால் தான் வாங்குவதில்லை. நான் இவ்விடம் முதல் வந்த பொழுது, முதல் தடவை ஒரு சாது சாப்பாடு கொடுத்தார். பிறகு பிராம்ஹணர் 2, 3 மாதம் சாப்பாடு கொடுத்தார். அதன் பிறகு யார் கொடுத்தாலும் சாப்பிடுகிறதுண்டு. வர்ண வித்தியாசம் வைத்துக்கொள்ளவில்லை. இவ்விடம் யாராவது வந்து யாதாவது கேட்டால் அதற்குப் பதில் சொல்லுவதுண்டு. உபதேசம் என்று ஒன்றும் கொடுப்பது கிடையாது. நான் குரு உபதேசம் செய்வதில்லை. சந்தேகங்களைப்பற்றி கேட்டால் பதில் சொல்வதுண்டு. முதல் 7, 8 வருஷம் மவுனமாய் இருந்தேன். மவுனமாய் இருக்கும் காலத்தில் கேழ்விகளுக்கு பதில் சிலருக்கு எழுத்து மூலமாய் தெரிவிப்பதுண்டு. இந்த ஆஸ்ரமத்தில் தங்குகிறவர்கள் அவர்களுடைய இஷ்டத்தின் மேல் தங்குகிறார். நான் அவர்களை இருக்கச்சொல்வ

5

தும் இல்லை. போகச்சொல்வதும் கிடையாது. என்வரையிலும் இந்த ஆஸ்ரமத்திற்கு யார் வந்தாலும் ஆட்சேபனை கிடையாது. எவ்வளவு காலம் தங்கினாலும் எனக்கு ஆக்ஷேபனை கிடையாது. 1907 முதல் என்னை ரமணரிஷி என்று கூப்பிடுகிறார்கள். நான் இருப்பது அத்யாஸ்ரமம். அதாவது வாழ்க்கையில் இருக்கும் எதிலும் சேராதது. அத்யாஸ்ரமம்-அத்யாஸ்ரமம் சாஸ்திரத்தில் இருக்கிறது. இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவாள் எனக்கு யாரும் தெரியாது. என்னுடன் இருப்பவர்களை நான் என் போல் நினைப்பதே தவிர சிஷ்யாள் என்றாவது பக்தாள்என்றாவது நான் சொல்வதில்லை. The Self realisation என்ற புஸ்தகம் Exhibit A இந்த ஆஸ்ரமத்தில் பப்லிஷ் செய்யப்பட்டது. நான் அதை பூராவாசித்துப் பார்த்தேன். இதனுடைய Proof நான் கரெக்ஷன் செய்தனோ இல்லையோ கவனமில்லை. இதில் எழுதியிருக்கும் சங்கதிகள் அநேகமாய் சரியாய் இருக்கும்

Q:- Exhibit Aல் 136 பக்கத்தில் disciples of Maharishi என்று எழுதி இருக்கிறது. உங்களுக்கு disciples உண்டா?

A:- Exhibit A foot noteல் (page 46ல்) disciples என்றால் explanation கொடுத்திருக்கிறது.

இந்த explanation Exhibit னுடைய author அவரேஎழுதினார். என்னைக் கேட்டு எழுதவில்லை.

Disciple referred to in Exhibit VII carries the same meaning as is given in foot note in page 46 in the same Exhibit. I Know the Tamil equivalent of the words disciple and devotee

Exhibit VII நான் அனுமதி கொடுத்து தான் எழுதினது. என்னுடைய written Statement ல் 5-வது பாராவில் கண்டிருக்கும் படி இந்த ஆஸ்ரமத்தை பார்த்துக் கொண்டவர்களுடைய நபர்கள் பேர் ஆஸ்ரம ரிகார்டுகளில் இருக்குமோ என்னமோ தெரி

யாது. ஆஸ்ரமரிகார்டுகள் நான் பார்க்கிறது கிடையாது. காட்டினுல் பார்ப்பது உண்டு. அவைகளைக் காட்டா விட்டால் கொண்டு வரச் சொல்லி பார்க்கிறது கிடையாது. நாலு பேருடன் வாதியும் ஊரிலிருந்து பிச்சை கொண்டு வந்து எனக்கும் இதராளுக்கும் சாப்பாடு போடுவதுண்டு. கந்தாஸ்ரமத்தில் இருக்கும் பொழுதே சமயல் ஆரம்பம் செய்யப்பட்டது. அதற்கு முந்தி சமயல் கிடையாது. என்னுடைய தாயார் என்னுடன் 1915ல் ஸ்திரமாய் சேர்ந்தாள். பச்சயம்மாள் கோவிலில் இருக்கும் வரையில் சமயல் உண்டு. பச்சயம்மாள் கோவிலிலும், மலைமேல் இருக்கிற வரையில் ஆஸ்ரமத்தில் இருப்பவரும், தரிசனத்திற்கு வருபவரும் சமயல் செய்வதுண்டு. பச்சம்மாள் கோவிலில் இருக்கிற வரையில் கந்தாஸ்ரமத்தில் இருக்கிற வரையிலும் எத்தனை பேர் பிராம்ஹணர் என்னுடன் இருந்தாரென்று சொல்லமுடியாது. இந்த ஊருக்குவருவதற்கு முந்தி என் ஊரில் எனக்கு சொத்து உண்டு. அவைகளைவேண்டாமென்று விட்டுவிட்டு வந்தேன், அந்த பூர்வீகமான சொத்துக்களைப் பற்றி எவ்விதமான ஹக்கையும் நான் பாராட்டவில்லை. தகப்பனுர் தாயார் என்னும் பாத்யதை பற்றி சொல்லிக் கொள்வதில்லை. நான் கையெழுத்துப் போடாததற்குக் காரணம் சொல்ல முடியாது. In Exhibit Aல் page 28ல் the author has given the explanation for not signing my name. In para 13 of my writen Statement I have stated that I do not worry my self with management etcl and this is correct. எனக்குத் தேவையானதைப்பற்றி இதராளுக்கு நான் சொல்வதில்லை. இந்த ஆஸ்ரமத்திலிருந்து போகும் தபால்களையும் ஆஸ்ரமத்திற்கு வரும் தபால்களையும் நான் பார்க்கிறதுண்டு. சில பதில்கள் நான் சொல்லி எழுதுகிறதுண்டு. அவைகளை எழுதிக் கொண்டு வந்து காட்டுவதுண்டு. எனக்குத் தெரியாமல் ஆஸ்ரமத்து சார்பாக ஒரு தபாலும் போவதில்லை. ஆஸ்ரமத்தில் இருக்கும் அக்கவுண்டு புஸ்தகங்களை நான் சில சமயங்களில் பார்ப்பதுண்டு. நான் பார்க்காததினுல் விவரங்களும், மொத்தம் இவ்வளவு என்று எனக்குத் தெரியாது. ஆஸ்ர

மத்தில் என்ன என்ன கணக்கு புஸ்தகங்கள் இருக்கிற தென்று சொல்ல முடியாது. வரவு செலவு கணக்கு புஸ்தகங்கள் வைத்திருப்பது எனக்குத் தெரியும். I have no desire to acquire properties but properties Come, and I accept them. சொத்துக்களை வைத்துக்கொள்வது உலகு சம்பந்தம் என்பது நான் ஒத்துக்கொள்கிறேன். உலக விஷயங்களை நான் வெறுக்கிறதில்லை. •நான் கந்தாஸ்ரமத்திற்கு வந்த பிற்பாடு என் கூட இருந்தவர்கள் பழக்கம் செய்தபடியால் யாராவது கொடுத்தது வாங்குவதுண்டு, நானு யாரையும் கேழ்பதில்லை. I know some of the details regarding the contributions made after I come to Kandasram. I remember only the names of some who made contributions. Contributions கொடுத்தவர்களுடைய கணக்குகள் இருக்குதோ என்னமோ எனக்கு தெரியாது. ஒருகந்தஸ்வாமி என்றவர் நான் இருப்பதற்காக ஒரு இடம் ஏற்படுத்தவேணுமென்று 1905, 1906ல் சொல்லி இருக்கிறார். கட்ட வேண்டியது அவசியம் என்று நான் சொன்னேன். அப்பொழுது ஆஸ்ரமத்திற்குப் பணம் கிடையாது. கந்தசாமி யாதொரு முதலுமில்லாமல் கட்டடம் ஆரம்பித்தார். பின்னால் பணம் வரப்போரவர்கள் கொடுக்க ஆரம்பித்தார். கட்டடம் வேலையில் 7, 8 வருஷம் அவர் இருந்தார். பிறகு வாதி வந்து சேர்ந்தார். கந்தசாமி காயலாவாய் போய்விட்டார். கந்தசாமி அதை விட்டுப் போவதற்கு ஒரு வருஷம் முந்தி வாதி அவ்விடம் சேர்ந்தார். கந்தசாமி வேலூர் நாராயணசாமி ரெட்டியாரிடம் பணத்தைக்குடுத்து விட்டுப் போனார். பணம் 40, 50 ரூபாய் தான் இருக்கலாம். எனக்கு நேரில் தெரியாது. நாராயண ரெட்டியாரிடமிருந்து வாதியே போய் இந்த பணத்தை வாங்கிக் கொண்டு வந்தார். நானு சொல்லவில்லை கந்தசாமி பிறகு வரவில்லை. மேல் கண்ட பணத்தை வைத்துக்கொண்டு பின்னால் வந்த பணத்தையும் வைத்துக்கொண்டு வாதியும் ஓவர்சியர்களும் இன்னும் இதருளும் கட்டடத்தை பலமாக்கினார். இதற்காக ஈசான்ய மூல ஸ்வாமிகள் மூலமாக பணம் வசூல் ஆச்சுது. இதற்காக வாதி வெளியில் போகவில்லை. உள்ளூரில் செட்டிமாரிடம்

வசூல் செய்தது —வாதிதான். வசூல் செய்த பணத்தை வாதி ஒரு பஞ்சாட்சர செட்டியிடம் deposit செய்து அப்பொழுது அப்பொழுது வாங்கிக்கொண்டு செலவு செய்ததுண்டு. அந்த கட்டடம் சம்பந்தமான கணக்குகள் சிலது வாதி வைத்திருந்தார். சில கணக்கு அவர் எனக்குக் காட்டி இருக்கலாம். I do not remember having seen Exhibit E. கந்தாஸ்ரமம் கணக்குகளை யாரும் audit செய்யவில்லை. வாதி வந்த பிறகு கந்தாஸ்ரமத்து வேலைகள் சுமார் ஆயிரம் வரையில் நடந்திருக்கலாம். கந்தாஸ்ரமத்தில் நான் இருந்த ஆறு வருஷத்தில் வாதி 2, 3 வருஷம் இருந்திருப்பார். நடுவில் நடுவில் வெளியே போய்விட்டார். வாதி இல்லாத சமயத்திலும் அவர் இருக்கும் சமயத்தில் வாசுதேவ சாஸ்திரி பழநிசாமி முதலானவர் அவ்விடம் இருந்திருக்கிறார். கந்தாஸ்ரமத்தில் இராத்திரி பகலும் என்னுடன் வாதி அவ்விடம் இருக்கும்பொழுது அவர் என்னுடன் இருந்திருக்கிறார். சிலகாலம் பெருமாள் சாமியும், சிலகாலம் பழநிசாமியும் என்னுடன் தனியாவும் இருந்திருக்கிறார். கந்தாஸ்ரமத்தில் இருக்கும் காலத்தில் ஆஸ்ரமத்து ரொக்க இருப்பை யார் யார் அதை பார்த்துக்கொண்டு வந்தாரோ அவர்கள் தான் வைத்துக் கொண்டு இருந்தார். இன்னார் தான் என்று நேமனே கிடையாது அந்தக் காலத்தில் தின வரவு செலவு கணக்குகள் வைத்திருக்கலாம். நான் பார்த்தது கிடையாது. கந்தாஸ்ரமம் கட்டும் காலத்தில் அந்த ஸ்தானம் தேவஸ்தானத்திற்குச் சேர்ந்தது. நான் சொல்லி தேவஸ்தான தர்மகர்த்தாக்களை ஆஸ்ரமம் கட்ட பர்மிஷன் கேழ்க்கச் சொல்லவில்லை. தேவஸ்தானத்திற்குச் சம்பந்தப்பட்ட மலையில் எவ்விதமாய் ஆஸ்ரமம் கட்டடம் கட்டினார்கள் என்றால் நான் எவ்விதம் அவ்விடம் வந்து இருந்தேனே அந்த விதமாய்தான் கட்டினார்கள். மலையில் நான் வந்து இருந்த காரணம் எனக்கே தெரியாது.

கந்தாஸ்ரமம் Encroachment என்று B Memo notice வந்தது என்று கேழ்விப்பட்டிருக்கிறேன். யாருக்கு இந்த நோட்டீஸ் வந்ததோ தெரியாது. ஆட்சேபனை யில்லை என்று கவர்ன்மெண்

டூக்கு ஏதாவது மனுவு போட்டிருக்கிறரோ என்னமோ தெரியாது. அந்த B Memo notice வாதி பேருக்கு வந்ததோ என்னமோ எனக்குத் தெரியாது. சுந்தாஸ்ரமத்திற்கு உள்பட்ட Encroachment க்காக பணம் கட்டுகிறர்களோ என்னமோ எனக்குத் தெரியாது.

As it is now 5-20 P. M. the examination of the witness is adjourned to 22-11-36.

(Sd) V. KRISHNA REEDI
Commissioner. 15-11-36.

Commission adjourned to 5-12-36 on the motion of the Vakil for plaintiff

(Sd) V. KRISHNA REDDI
Commissioner. 22-11-36.

5-12-36 Cross-examination of the witness (D 1) Continued

Solemnly affirmed. அத்யாஸ்ரமம் பற்றி விவரம் சூத சம்ஹிதத்தில் இருக்கிறது. அதில் அத்யாஸ்ரமத்தினுடைய நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிபந்தனைகள் தான் நான் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறேன். அத்யாஸ்ரமத்தில் இருக்கிறவாள் உலகத்தில் சொத்து வேண்டியதாய் இருந்தால் வைத்துக் கொள்ளலாம். எந்த ஆஸ்ரமத்திற்கும் ஒரு குருவு தேவை. அத்யாஸ்ரமம் அனுஷ்டிப்பவர்களுக்கும் ஒரு குருவு வேண்டும். ஆனால் எனக்கு ஆத்மாவே குருவு. என் ஆத்மா என் ஆத்மாவுக்குத்தான் குருவு. புராணங்களில் அத்யாஸ்ரமம் அனுஷ்டித்தவர் சொத்து வைத்திருந்ததாகப் படித்திருக்கிறேன். சூத சம்ஹிதத்தில் அதாவது ஸ்கந்த புராணத்தில் இந்தப் விஷயங்கள் தெரிவித்திருக்கிறது. அத்யாஸ்ரமத்தில் என்னிட சொத்தென்று ஒருத்தர் சொல்லிக் கொள்ளலாம். இந்தமாதிரி சொத்துக்களை இதாளுக்கு dispose செய்ததாகவும் அத்யாஸ்ரமத்தில் சொல்லி இருக்கிறது. க்ரஹஸ்

தாஸ்ரமம் அத்யாஸ்ரமம் ஒன்றேதானா இல்லையா என்பது பார்க்கிறவருடைய View. அத்யாஸ்ரமத்தில் இருப்பவர்களுக்கு நித்ய கர்மங்கள் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. In. Ex. A. in page 126, what is stated in the sentence, "That the swami was above relationship and that claims to property based on blood ties were distasteful to the Swami were the valuable lessons then threw" —is true

In. Ex. A. in page 152 what is stated in the Sentences, — "Money was never touched by Maharishi since he threw away his three Rupees and a half when he arrived at Tiruvannamalai. One would suppose that Maharishi at any rate had successfully dealt with problems of wealth and poverty, even in the midst of his dependents and visitors at the Asram But nothing on earth is perfect; — and the general success of poverty at the asram had its exceptions, which may be illustrated by follows." — is true.

In. Ex. A in page 153, what is stated in the sentence— "There again money was freely raised......... .................. among his dependents ever since" is true. In. Ex. A in page 219 what is stated in paragraph beginning with the words "wise, just and frequently...... ......" and ending with the words "places himself lower than the lowest" —is true.

Ex. K. (2) has been written in my hand. The ideas there—in have been suggested by the plaintiff who get the same from two others. Let it be that I have accepted those views. How can it be said that I have accepted them. One may describe a tree as Subramanyar.

He does so. How can I help it. what is stated in Ex. K. 2 reffers to me. The Tamil book Called Ramana Vijayam is not an exactly true translation of Ex. A. In or about 1904 some persons offered sugar-Candy and placed it before me and when my brother the second defendant took it away, I took him to taste saying that he had no right to take it. In ஸ்கந்தாஸ்ரமம் இரண்டு ரூம்களும், ஒரு பெரிய ரூமும் இருக்கின்றன. அவைகள் என்னுடைய சவுக்யத்திற்காகக் கட்டினதுதான். அந்த ஆஸ்ரமத்தில் வந்து தங்குகின்றவர்கள் அதில் இருப்பவர்களுடைய அனுமதியின்பேரில்தான் தங்கிக்கொண்டு இருந்தார்கள். அவ்விடம் தங்குகிறவர்கள் என்னுடைய அனுமதி யில்லாமல் எப்படி தங்குவார்கள். வருவாரை வேண்டாம் என்றும் போவாரை வாரும் என்றும் சொல்லுவதில்லை. ஸ்கந்தாஸ்ரமத்தை கட்டும்பொழுது போட்ட பிளானை எல்லாருடன் நானும் பார்த்து அனுமதித்து இருக்கின்றேன். ஸ்கந்தாஸ்ரமம் திருவண்ணாமலை முனிசிபல் லிமிட்டுக்குள் அடங்கியது. ஸ்கந்தாஸ்ரமத்திற்கு முனிசிபல் வரி போடவில்லை. அது தேவஸ்தானத்திற்குச் சேர்ந்ததென்று வரி போடவில்லை. இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்திற்கு முனிசிபல் வரி உண்டோ என்னமோ எனக்கு தெரியாது. இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்தில் இருப்பவர்களிடம் ரெண்ட் டீட் அல்லது லீஸ் டீட் நான் வாங்கவில்லை. ஸ்கந்தாஸ்ரமம் விட்டு இவ்விடம் அதாவது ரமணாஸ்ரமத்தில் தங்குவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை. ரமணாஸ்ரமம் என்பது என் பேரையும், இந்த இடத்துப் பேர் இரண்டையும் குறித்தது. நான் இருக்கக்கூடிய இடம் எதா யிருந்தாலும் ரமணாஸ்ரமம் என்பது. இந்த ரமணாஸ்ரமத்தினுடைய இடத்திற்கு assignment ஜாரி செய்ய மனுவு போட்டது எனக்குத் தெரியும். நானும் எல்லோரும் கலந்துதான் மனுவு போட்டது. நாலைந்துபேர் கலந்துதான் மனுவு போட்டது. அவாள் யாரென்று ஞாபகம் இல்லை. அந்த மனுவில் second defendant கையெழுத்து சின்னஸ்வாமி போட்டிருப்பார். நான்

அதைப் பார்த்திருக்கிறேன். Extent எவ்வளவு என்று கவனம் இல்லை. Assignment மனுவு போட்டது, என்னுடைய சவுக்கியத்திற்காகவும், கோவில், தோட்டம் முதலானது உண்டாக்கவும் போட்டது. Assignment மனுவு மேல் சர்க்கார் உத்திரவு நான் பார்த்தேன். அதைப் பார்த்தால்தான் assignment எந்த காரணத்தினால் கொடுத்ததாக எழுதியிருப்பது சொல்ல முடியும். எனக்கு இப்பொழுது கவனம் இல்லை. சர்க்காரில் assignment பண்ணும் காலத்தில் என்னுடைய சொந்தத்திற்கு assignment செய்திருக்கிறது. இந்த ரமணாஸ்ரமத்திற்கு சேர்ந்த நிலம் பாவாஜிமட் நிலமும் சர்க்கார் நிலமும் சேர்ந்திருக்கிறது. மேல் கண்ட Assignment ஆவதற்கு முந்தியே பாவாஜி நிலத்தில் கட்டடங்கள் ஆய்க் கொண்டிருந்தது. கட்டடங்கள் கட்ட பாவாஜி சொன்னதின் மேல்தான் கட்டப்பட்டன. பாவாஜி என்பவர் இப்பொழுது காஞ்சிவரத்தில் இருக்கும் பாவாஜி. அவர் பேர் கவனம் இல்லை.

Question:—பாவாஜியை பெர்மிஷன் கேட்டு நீங்கள்தான் வாங்கினதா,— The Vakil for the defendants objected to this question. Then the Plaintif's Vakil put the Question whether Schedule-2-in the plaint comprises both Bavaji land and Government land.

Answer:—2nd Schedule Comprises only Government land,—

Assignment ஆகுவதற்கு முந்தி கவர்மெண்டு நிலத்தில் கட்டடங்கள் கட்டி இருக்கிறதோ இல்லையோ கவனமில்லை. What is stated in Ex. J. that is, the reasons stated therein for asking for assignment are correct. இந்த ரமணாஸ்ரமத்தில் எத்தனை ரூம்கள் கட்டி இருக்கிறதோ எண்ணிப் பார்த்தால்தான் தெரியும். நான் எண்ணிப் பார்த்ததில்லை. அதில் அநேக ரூம்களுக்குள் நான் போய்ப் பார்த்ததில்லை.

Most of these rooms are not intended for your personal Convenience ?

A—என்னுடைய personal Convenience க்காக இல்லே. இந்த ஆஸ்ரமத்தில் some Europeans are staying. அவர்கள் தங்களுடைய வசதிக்காக அவர்கள் சிலவில் சில ரூம்கள் கட்டி இருக்கிறார்கள். அதுவும் ஆஸ்ரமத்திற்குச் சேர்ந்த ஜாகாத்தான். அவாள் என்னுடைய உத்திரவின் பேரில்தான் கட்டினது. இவ்விடம் இருக்கும் Europeans களில் ஒருத்தர்தான் ஒரு வருஷத்திற்கு முந்தி ஒரு ரூம்கட்டியிருக்கிறார். நெல்லூர் ரெட்டிகள் இரண்டு ரூம்கள் அடுத்தாப்போல் கட்டியிருக்கிறார்கள். இது தவிர ஆஸ்ரமத்திற்கு வருகிற visitors தங்குவதற்கு சில ரூம்கள் இருக்கின்றன. ஆஸ்ரமத்தில் Store room, dining hall, cooking room எல்லாம் இருக்கிறது. ஒரு cow shedம், பத்துப் பதினேத்துப் பசு மாடுகளும் இருக்கின்றன. இந்தக் கட்டடங்கள் எல்லாம் Assignment ஆன நிலத்தில்தான் இருக்கின்றன. இந்த ரமணாஸ்ரமத்திற்கு Municipal property tax போட்டிருக்கிறார்களோ இல்லேயோ எனக்குத் தெரியாது. Second defendant might have told me that property tax has been levied for this asram. I have never seen in the Ashram account books any entry noting down any payment by way of tax for Ashram. இந்த ஆஸ்ரமத்தில் பிரதி வருஷமும் ஜயந்தி நடந்து வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் என்னுடைய தாயாருடைய Annual ceremonyயும் நடந்து வருகிறது.

இந்த இரண்டு celebrationsம் இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்களே செய்து வருகிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இன்னாருக்கு Invitations அனுப்புகிறதென்று list ஒன்று இருக்கிறது. Most of the persons to whom invitations are sent and others also may contribute on these occasions. என்ன contributions எந்த சந்தர்ப்பங்களில் வருகிறதென்று எனக்குத்

தெரியாது. ஜயந்தி சந்தர்ப்பத்தில் வருஷா வருஷம் என்ன செலவாகிறதென்று எனக்குத் தெரியாது. என் தாயார் annual ceremoneyக்கும் எவ்வளவு செலவாகிறதென்று எனக்குத் தெரியாது. என் mothers annual ceremoney செய்யும்போது நான் ஒன்றும் பூஜை செய்வதில்லை. இவ்விடம் இருப்பவர் செய்வார். நான் தினப்படி பூஜை செய்கிறேன். ரமணாஸ்ரமத்தின் seal அனுஷ்டானத்தில் எத்தனை வருஷமாய் இருக்கிறது என்று நான் எப்படிச் சொல்லுவேன். இப்பொழுது உபயோகத்தில் இருக்கும் sealல் Sree Ramanasram, Tiruvannamalai என்று இருக்கிறது. இந்த seal நான் எப்பொழுதாவது உபயோகிப்பேன். மற்றப்படிக்கு ஆஸ்ரமத்தில் எப்போதிற்கும் உபயோகிக்கிறார்கள் Personal seal and Asram seal is the same. இந்த seal is in the custody of the second defendant. ஆஸ்ரமத்திலிருந்து second defendant அனுப்பும் Correspondenceல் ஆஸ்ரமம் சீலை அவர் உபயோகிக்கிறார். In every book that ls sold from the Ashram Book depot, the Ashram seal is used. இந்த seal நான் ExVII அதாவது power of Attorneyயில் தவிர வேறே எந்தக் காகிதத்திலும் உபயோகித்தது கிடையாது. நான் சீல் புஸ்தகங்களில் வைக்கிறதுண்டு. Ex. VII தவிர வேறே எந்த தஸ்தாவேஜையும் நான் Execute செய்தது கிடையாது. இந்தகேசில் plaint படித்துப் பார்த்தேன். இந்த கேசில் வக்காலத்தில் seal வைத்திருக்கிறேன். இந்த கேசில் written statement என் உத்தரவுமேல்தான் போட்டது. அதை நான் படித்துப் பார்த்ததாக வைத்துக்கொள்ளும். அதில் contents நான் எல்லாம் பார்த்திருக்கிறேன். பவர் இல்லாதவர்கள் எல்லாம் பவர் இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்து, ஆஸ்ரமத்திற்கு விருத்தமாய் நடக்க ஆரம்பித்ததினால் Ex. VII Power of Attorney எழுத வேண்டியதாய் நேரிட்டது. பெருமாள்சாமியார் ஒருத்தர்தான் பவர் இல்லாமலே பவர் இருக்கிறதென்றுச் சொல்லிக் கொண்டிருந்தார். பெருமாள்சாமியார்தான் ரமணாஸ்ரமம் சர்வாதிகாரி என்று பத்திரிகைகளில் போட்டுக் கொண்டு தபால்களை தன்னுடைய உத்தரவு

இல்லாமல் ரமணாஸ்ரமத்தில் கொடுக்கக்கூடாதென்று 1933வது வருஷத்தில் அவர் தடை செய்தார்.

(Sd) V. KRISHNA REDDI
Commissioner, 5-12-36.

The Commission is adjourned to 8-12-36

(Sd) V. KRISHNA REDDI
Commissioner, 5-12-36

8-12-36

Enquiry commenced at 5-30 P. M. Neither the plaintiff nor his pleader has turned up in spite of the written intimation given to the pleader for plaintiff that enquiry will be commenced at 4-30 P. M. to day.

As none of them is present I declare that the cross examination of the witness is closed

The advocate for the 1st defendant wants to re-examine the witness. Hence the witness is solemnly affirmed.

Re-examination :— என்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் இருப்பவர்களை இந்த ஆஸ்ரமத்தில் சேர்க்கிறதில்லை. ஆஸ்ரமம் அலுவல்களை அப்போதைக்கப்போது பார்த்துக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய இஷ்டத்தின்மேல்தான் பார்த்துக்கொண்டு வந்தார். In Ex. A in page 153 the sentence beginning with "There again money was freely raised........." and ending with "his dependents ever since" the incidents referred to are not those relating to claims to property, but only to the personal differences among those who Stayed in the ashram. ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கிக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய அனுமதிமேலும் என்னுடைய அனுமதி பெற்றவர்களுடைய உத்திரவு மேலும் இவ்விடம் தங்கிக்கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கி இருப்பவர்கள் என்னுடைய உத்திரவுமேல்தான் அவ்விடம் இருந்துவருகிறார். I have not studied Law, I do not know legal expressions. இந்த ஆஸ்ரமத்தில் Europeans கட்டியிருக்கும் rooms அவர்கள் என்னுடைய உத்திரவுமேல் அதற்காக அவர்களே பணம் கொடுத்து

கட்டினது. நான் எப்பொழுதும் பூஜை செய்தது கிடையாது. பூஜை செய்பவர் பக்கத்தில் இருப்பதுண்டு. ஜயந்தி உத்ஸவத்தை அனுசரித்து பக்தாள் சில கைங்கரியங்கள் கொடுப்பதுண்டு. இவ்விடம் இருப்பவர்கள் அந்த ஜயந்தி கொண்டாடுவதுண்டு. அம்மா பூஜையும் அந்த மாதிரிதான். Plaintiff செய்த தடைகளினால் Ex VII எழுதவேண்டிய தென்று சொல்லி இருப்பது இந்த ஆஸ்ரமத்தில் இருந்து தடை செய்ததல்ல. Plaintiff 1922லேயே விட்டுப் போய்விட்டார்.

(Sd) Not clear }
Ad for D. 18-12-36 }

Mark affixed by the witness in his own hand in my presence. Taken down by me, read over to the defendent and found to be correct by him.

(Sd) V. KRISHNA REDDI
Commissioner 8-12-36

---

திருவண்ணாமலை டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் O. S. 35, 36 கேசில் 15-11-36 யன்று கமிஷனர் முன்னிலையில் முதல் வாதி ரமண ரிஷி கொடுத்த வாக்குப் பிரமாணம்:—

வாதியின் வக்கீல் நடத்திய குறுக்கு விசாரணை

கேள்வி:—எக்ஸிபிட் A1 136 பக்கத்தில் Disciple of Maharishi (மகரிஷியின் சீடர்கள்) என்று எழுதி யிருக்கிறது. உங்களுக்கு சிஷ்யர்கள் உண்டா?

பதில்:—எக்ஸிபிட் A1 கீழ்க் குறிப்பில் (பக்கம் 46ல்) disciples (சிஷ்யர்கள்) விபரம் கொடுத்திருக்கிறது.

இந்த விவரம் எக்ஸிபிட்டினுடைய ஆசிரியரே எழுதினார். என்னைக் கேட்டு எழுதவில்லை. எக்ஸிபிட்டில் 46ம் பக்கத்தின் கீழ்க்குறிப்பில் சீடர் என்னும் வார்த்தைக்கு என்ன அர்த்தம் [illegible] கொடுத் திருக்கிறதோ அதே அர்த்தம் தான் எக்ஸிபிட் VII [illegible] (Disciple) சீடர் என்பதற்கும் அர்த்தம். (Disciples) [illegible] பக்தர்கள் devotees என்ற வார்த்தைகளுக்குச் சரியான [illegible] பதங்கள் எனக்குத் தெரியும். எக்ஸிபிட் A1 பக்கம் 28ல் [illegible] ஆசிரியரே என்னுடைய பெயரைக் கையெழுத்திடாமைக்[illegible]

ணம் காட்டியிருக்கிறார். எனது எழுத்துப் பிரமாண அறிக்கையின் 13-வது பாராவில் நான் மானேஜ்மெண்ட் முதலிய விவகாரங்களைப்பற்றி கவலை எடுத்துக் கொள்வதில்லை என்று கூறியிருக்கிறேன். அது சரியே.

எனக்குச் சொத்துக்கள் சேர்ப்பதில் ஆசை கிடையாது. ஆனால் சொத்துக்கள் வருகின்றன, நான் அவற்றை ஏற்றுக் கொள்கிறேன்.

நான் கந்தாஸ்ரமத்திற்கு வந்த பிறகு, கொடுக்கப்பட்ட பொருள்களைப் பற்றிய விவரங்களில் சில எனக்குத் தெரியும். அவ்வாறு பொருள்கள் கொடுத்தவர்களின் சிலருடைய பெயர்கள் மட்டும் நினைப்பிலிருக்கின்றன. பொருள்கள் கொடுத்தவர்களுடைய கணக்குகள் இருக்கோ என்னமோ எனக்குத் தெரியாது.

எக்ஸிபிட் Eயைப் பார்த்ததாக எனக்கு ஞாபகமில்லை.

கந்தாஸ்ரமம் என்க்ரோச்மெண்ட் என்று பி. மிமோ நோட்டீஸ் வந்தது.

இப்பொழுது மாலை 5-20 ஆகிவிட்டதால், சாட்சி விசாரணை 22-11-36ந்தேதிக்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 15-11-36

வாதியின் வக்கீல் விருப்பப்படி 5-12-36க்கு ஒத்திப் போடப்பட்டது.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 22-11-36

5-12-36ல் சாட்சி (D) குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எக்ஸிபிட் Aல் 126ம் பக்கத்தில் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளது, உண்மையானதே. "சுவாமி பந்தத்துவத்திற்கு மேலானவர் என்றும், இரத்தபாசத்தின் மூலம் சொத்துக்கு உரிமை பாராட்டுவது சுவாமிக்கு வெறுப்பானவை என்பதுமான முக்கிய நீதிகளைக் காட்டினார்."

எக்ஸிபிட் Aல் 152-ம் பக்கத்தில் கூறியுள்ள வாக்கியங்களும் உண்மையானவையே:-

...நவண்ணுமலை வந்து சேர்ந்தவுடன் தன்னிட மிருந்த ...ா ரூபாய்களை எறிந்துவிட்ட பிறகு மஹரிஷி பணத்தைக் ... தொடவில்லை. மஹரிஷி எப்படியோ செல்வம் வறுமை ...ிஷயங்களை சாதுர்யத்தோடு வெற்றிகரமாக தம்மைச்சார்ந் ...ர்கள் மத்தியிலும் வந்து போவோரிடமும் கையாண்டு

வந்தார் என்று நினைக்கலாம். ஆனால் உலகத்தில் எந்தப் பொருளும் பூரணமாக இல்லை. ஆசிரமத்திலும் வறுமையின் வெற்றி பொதுவாக சில விஷயங்களில் இருந்து வந்தன."

எக்ஸிபிட் Aல் 153-ம் பக்கத்தில் கூறியுள்ள "அங்கும் மறுபடியும் பணம் தாராளமாய் வசூலிக்கப்பட்டது." என்பதும்,

எக்ஸிபிட் Aல் 219-ம் பக்கத்தில் கூறியுள்ள புத்திசாலித்தனமானது, நியாயமானது" என்று ஆரம்பிக்கும் வாக்கியமும் உண்மை.

எக்ஸிபிட் K. (2) என்னுடைய கையால் எழுதப் பட்டது. அதிலுள்ள கருத்துக்கள் வாதியால் கூறப்பட்டவையே. அவற்றை வாதி வேறு இரண்டு பேரிடமிருந்து கேட்டு வந்தார். நான் அந்தக் கருத்துக்களை ஒத்துக் கொண்டதாகவே இருக்கட்டும். நான் அவற்றை ஒத்துக்கொண்டதாக எவ்வாறு சொல்லக்கூடும். ஒருவன் ஒரு மரத்தை சுப்ரமண்யர் என்று வர்ணிக்கலாம். அவன் செய்கிறான், அதை நான் எப்படித் தடுக்க முடியும்.

எக்ஸிபிட் Aல் என்ன கூறியிருக்கிறதோ அது என்னைக் குறிக்கிறது. ரமண விஜயம் என்னும் தமிழ்ப் புத்தகம் எக்ஸிபிட் Aல் மொழி பெயர்ப்பு அல்ல. சுமார் 1904 சிலர் கற்கண்டு கொண்டு வந்து கொடுத்தார்கள். என் முன்னே வைத்தார்கள். அப்பொழுது இரண்டாம் பிரதிவாதியான என்னுடைய தம்பி எடுத்துக்கொண்டு விட்டான். அதற்காக நான் எடுக்க ஒருவருக்கும் உரிமை கிடையாது என்று சொல்லிக் கண்டித்தேன். ஸ்கந்தாஸ்ரமத்தில்,

இந்தக் கேள்விக்கு பிரதிவாதிகளின் வக்கீல் ஆக்ஷேபித்தார் பிறகு வாதியின் வக்கீல் "ஷெட்யூல் இரண்டில் உள்ளது பாவாஜி நிலமும் கவர்மெண்ட் நிலமும் சேர்ந்ததா" என்னும் கேள்வியைக் கேட்டார்.

பதில் :—2வது ஷெட்யூல் கவர்ன்மெண்ட் நிலத்தை மட்டும் கொண்டுள்ளது.

அடமானம் ஆவதற்கு முந்தி கவர்ன்மெண்ட் நிலத்தில் கட்டடங்கள் கட்டியிருக்கிறதோ இல்லையோ, கவனமில்லை. எக்ஸிபிட் Jல் அடமானம் செய்யக் கேட்டுக்கொண்டதற்காக கூறியுள்ள காரணங்கள் சரியானவைகளே.

கேள்வி:—இங்குள்ள ரூம்களில் பல உம்முடைய சொந்த சௌகர்யங்களுக்காக இல்லையே,

விடை:—என்னுடைய சொந்த சௌகர்யத்துக்காக இல்லை; இந்த ஆஸ்ரமத்தில் சில ஐரோப்பியர்கள் தங்கி வருகிறார்கள்.

இது தவிர, ஆஸ்ரமத்திற்கு வருகிற விசிடர்கள் தங்குவதற்கு சில ரூம்கள் இருக்கின்றன. ஆசிரமத்தில் ஸ்டோர் ரூம், சாப்பாட்டு ஹால், சமையல் அறை எல்லாம் இருக்கிறது. ஒரு பசு மடமும், பத்து பதினைந்து பசு மாடுகளும் இருக்கின்றன. இந்த கட்டடங்கள் எல்லாம் அடமானம் ஆன நிலத்தில் தான் இருக்கின்றன. இந்த ரமணாஸ்ரமத்திற்கு முனிசிபல் சொத்து வரி போட்டிருக்கிறார்களா இல்லையா, எனக்கு தெரியாது. இந்த ஆஸ்ரமத்துக்கு சொத்து வரி விதிக்கப்பட்டிருக்கிறதென 2ம் பிரதிவாதி எனக்கு சொல்லி யிருக்கலாம். ஆசிரமத்துக்காக வரி ஏதும் கட்டியிருப்பதாகக் குறித்திருப்பதை ஆசிரமக் கணக்குப் புத்தகங்களில் நான் ஒரு போதும் பார்த்தது கிடையாது. இந்த ஆஸ்ரமத்தில் பிரதி வருஷமும் ஜயந்தி நடந்து வருகிறது. இந்த ஆஸ்ரமத்தில் என்னுடைய தாயாருடைய வருடாந்திர சடங்கும் நடந்து வருகிறது. இந்த இரண்டு கொண்டாட்டங்களும் இந்த ஆஸ்ரமத்தில் இருப்பவர்களே செய்து வருகிறார்கள். இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் இன்னாருக்கு அழைப்புத் தாள்கள் அனுப்புகிறதென்று லிஸ்ட் ஒன்று இருக்கிறது. அழைப்பு அனுப்பப்படுபவர்களில் பலரும் இன்னும் மற்றவர்களும் இந்த சந்தர்ப்பங்களிலும் பொருள் கொடுப்பார்கள். என்ன நன்கொடைகள் இந்த சந்தர்ப்பங்களில் வருகிறதென்று எனக்குத்தெரியாது. ஜயந்திசந்தர்ப்பத்தில் வருஷா வருஷம் என்ன செலவாகுகிறதென்று எனக்கு தெரியாது. என் தாயாருடைய வருடாந்திர சடங்குக்கும் எவ்வளவு செலவாகிறதென்று எனக்கு தெரியாது. என் தாயாருடைய வருடாந்திர சடங்கு செய்யும்போது நான் ஒன்றும் பூஜை செய்வதில்லை. இவ்விடம் இருப்பவர் செய்வார். நான் தினப்படி பூஜை செய்கிறேன். ரமணாஸ்ரமத்தின் சீல் முத்திரை அனுஷ்டானத்தில் எத்தனை வருடமாய் இருக்கிறது என்று நான் எப்படி சொல்லுவேன். இப்பொழுது உபயோகத்தில் இருக்கும் சீலில் ஸ்ரீ ரமணாஸ்ரமம், திருவண்ணாமலை என்று இருக்கிறது. இந்த சீல் நான் எப்பொழுதாவது உபயோகிப்பேன்.

மற்றப்படிக்கு ஆஸ்ரமத்தில் எப்போதிற்கும் உபயோகிக்கிறார்கள். சொந்த சீலும், ஆஸ்ரமம் சீலும் ஒன்றே. இந்த சீல் இரண்டாவது பிரதிவாதியின் வசமே இருக்கிறது. ஆஸ்ரமத்திலிருந்து இரண்டாம் பிரதிவாதி அனுப்பும் போக்கு வரத்துக்களில் ஆஸ்ரமம் சீலை அவர் உபயோகிக்கிறார். ஆஸ்ரம புத்தக சாலையில் விற்கப்படும்

ஒவ்வொரு புத்தகத்திலும் இந்த ஆசிரமம் சீல் உபயோகிக்கப்படு கிறது. இந்த சீல் நான் எக்ஸிபிட் VII அதாவது அதிகாரப் பத்திரத்தில் தவிர வேறே எந்தக் காகிதத்திலும் உபயோகித்தது கிடையாது. நான் சில புத்தகங்களில் வைக்கிறதுண்டு. எக்ஸிபிட் VII தவிர வேறே எந்த தஸ்தா வேஜையும் நான் எக்ஸிகியூட் செய்தது கிடையாது. இந்த கேசில் ப்ளெயிண்ட்டைப் படித்துப் பார்த்தேன். இந்த கேசில் வக்காலத்தில் சீல் வைத்திருக்கிறேன். இந்த கேசில் எழுத்துப் பிரமாணம் என் உத்திரவு மேல் தான் போட்டது. அதை நான் படித்துப் பார்த்ததாக வைத்துக்கொள்ளும். அதில் கண்டிருந்தவைகள் யாவும் நான் பார்த்திருக்கிறேன். பவர் இல்லாதவர்கள் எல்லாம் பவர் இருக்கிறது என்று சொல்ல ஆரம்பித்து ஆஸ்ரமத்திற்கு விரோதமாய் நடக்க ஆரம்பித்ததினால் எக்ஸிபிட் VII ஆகிய அதிகாரப் பத்திரம் எழுத வேண்டியதாய் நேரிட்டது. பெருமாள் சாமியார் ஒருத்தர் தான் பவர் இல்லாமலே பவர் இருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருந்தார். பெருமாள் சாமியார் தான் ரமணாஸ்ரமம் சர்வாதிகாரி என்று பத்திரிகைகளில் போட்டுக்கொண்டு தபால்களை என்னுடைய உத்திரவு இல்லாமல் ரமணாஸ்ரமத்தில் கொடுக்கக் கூடாதென்று 1933வது வருஷத்தில் அவர் தடை செய்தார்.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 5-12-36

கமிஷன் 8-12-36க்கு ஒத்திப்போடப்பட்டது.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 5-12-36

8-12-36 விசாரணை மாலை 5-30 மணிக்கு ஆரம்பித்தது. வாதியின் வக்கீல் இன்று மாலை 4-30 மணிக்கு விசாரணை ஆரம்பிக்கப் படும் என்று எழுத்து மூலம் அறிவித்திருந்தும் வாதியாவது அவருடைய வக்கீலாவது வரவில்லை. அவர்கள் யாரும் வராததால் சாட்சியின் குறுக்கு விசாரணை முடிந்துவிட்டது என்று நான் தீர்மானிக்கிறேன். முதல் பிரதிவாதியின் வக்கீல் சாட்சியை மறு விசாரணை செய்யவேண்டுமென்றார்.

ஆகவே சாட்சி மறு விசாரணை

என்னுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் இருப்பவர்களை இந்த ஆஸ்ரமத்தில் சேர்க்கிறதில்லை. ஆஸ்ரமம் அலுவல்களை அப்போதைக் கப்போது பார்த்துக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய இஷ்டத்தின் மேல் தான் பார்த்துக்கொண்டு வந்தார். எக்ஸிபிட் A 153 பக்கத் தில் உள்ள "மறுபடியும் பணம் தாராளமாய் வசூலிக்கப் பட்டது" என்று ஆரம்பித்து "அவரிடமிருந்து வந்தவர்கள்" என்று முடியும் வாக்கியத்தில் குறித்துள்ள விஷயங்கள் சொத்துரிமையைப் பற்றி னவை அல்ல. ஆனால் அவைகள் ஆஸ்ரமத்தில் தங்கி யிருந்தவர்க ளிடையே ஏற்பட்ட மனோ வித்தியாசங்களைப் பற்றியவைகளே. ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கிக்கொண்டு வந்தவர்கள் என்னுடைய அனு மதி மேலும் என்னுடைய அனுமதி பெற்றவர்களுடைய உத்திரவு மேலும் இவ்விடம் தங்கிக் கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஸ்கந்தாஸ்ரமத்தில் தங்கி இருப்பவர்கள் என்னுடைய உத்திரவு மேல் தான் அவ்விடம் இருந்து வருகிறார். நான் சட்டங்களை (லா) படித் தது கிடையாது. சட்ட விஷயமான வார்த்தைகள் எனக்குத் தெரி யாது. இந்த ஆஸ்ரமத்தில் ஐரோப்பியர்கள் கட்டியிருக்கும் அறை கள் அவாள் என்னுடைய உத்திரவு மேல் அதற்காக அவர்களே பணம் கொடுத்து கட்டினது. நான் எப்பொழுதும் பூஜை செய்தது கிடையாது. பூஜை செய்பவர் பக்கத்தில் இருப்பதுண்டு. ஜயந்தி உத்ஸவத்தை அனுசரித்து பக்தாள் சில கைங்கரியங்கள் கொடுப்ப துண்டு. இவ்விடம் இருப்பவர்கள் அந்த ஜயந்தி கொண்டாடுவ துண்டு. அம்மா பூஜையும் அந்த மாதிரிதான். வாதி செய்த தடைக ளினால் எக்ஸிபிட் VII எழுத வேண்டியதென்று சொல்லி இருப்பது இந்த ஆஸ்ரமத்தில் இருந்து தடை செய்ததல்ல. வாதி 1922 லேயே விட்டுப் போய் விட்டார்.

இந்தக் குறி சாட்சி தனது சொந்த கையினாலே என் முன்னிலை யில் போடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டி சரி யென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(கை) வி. கிருஷ்ண ரெட்டி
கமிஷனர் 8-12-36

---

இந்த வாக்குப் பிரமாணத்த[illegible] திருவுருவத்தைத் தாம் செய்யச் சொல்லவில்லை என்றும், [illegible] செய்தது தமக்குத் தெரியாதென்றும் ரமணமஹரிஷி கூறியு[illegible]ளார். ஆனால், கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கடிதங்கள் இவர் கூறியது எவ்வளவு பச்சைப்பொய் என்பதை வெளிப்படுத்துமென நம்புகிறோம். இந்தக் கடிதங்கள் அப்போது சென்னைக்குச் சென்றிருந்த பெருமாள் சாமியாருக்கு திருவண்ணாமலை ஈசான்ய மடத்துச் சுவாமிகள் எழுதிய கடிதங்களாகும்.

உ

திருவண்ணாமலை ஈசானியமடம் | சிவமயம் | மதராஸ்.

விபவ ௵ ஆவணி ௴ 31௳

ஸ்ரீமத் சுவாமிகளுக்கு நமஸ்காரம். 13-9-28ல் எழுதிய கடிதமும் பத்திரிகையும் 14-9-28ல் எழுதிய கார்டும் வந்தன.

பத்திரிகை புரூப்பைப் பார்த்து இத்துடன் வருகிறது. இத்துடன் வரும் "தனலக்ஷ்மி ஆர்ட்ஸ்" என்னும் விளம்பரத்தில் கண்டபடி விக்ரஹ விஷயத்தைப் பற்றி நாகப்பா அவர்களுக்குத் தெரியாமல் செலவாகிற துகை விஷயத்தை விசாரித்துத் தெரிந்து சொள்ளலாமென்று ஸ்ரீ பகவான் சொல்லியபடி சுவாமிகளும் செய்யலாமென்று தோன்றுகிறது.

*　　*　　*

வேண்டும் ஸ்ரீ சற்குருநாதன் துணை.

(ஒப்பம்) நடேச சுவாமி

உ

திருவண்ணாமலை ஈசானியமடம் | சிவமயம் | மதராஸ்

விபவ ௵ புரட்டாசி ௴ 1௳

ஸ்ரீலஸ்ரீ பெருமாள் சுவாமி அவர்களுக்கு

நேற்றைய தினம் தங்களுக்கு எழுதிய லெட்டரில் கண்ட அ[illegible]க்கம் விளம்பரம் ஒன்று இத்துடன் அனுப்பி யிருக்கிறேன்.

*　　*　　*

ரமணரிஷி ... தமது தாயாருடைய 10-ம் நாள் சடங்குக்கு ... யார் 10 பேருக்கு சாப்பாடு போட்டதாகவும், அதில் ...ம் கொஞ்சம் உணவு கொடுத்ததாகவும் கூறியுள்ளார். ...ல அந்தச் சடங்குக்காக அன்று செலவான தொகை மொத்தம் ரூபா 606-3-9 என்பதற்கு திருவண்ணுமலை அ. சு. பொன்னுசாமி செட்டியார் கம்பெனியினுடைய புள்ளியும் இருக்கிறது. இவ்வளவு ரூபாய் செலவான ஒரு சடங்கில் 10 பேருக்கு மட்டுமா சாப்பாடு போடப்பட்டிருக்கும் என்பதைப் பொது மக்களே ஊகித்துக் கொள்ள வேண்டியது மன்றி ரமண மஹரிஷிகளது வாக்குமூலத்தின் யோக்கியதையையும் தெரிந்து கொள்வார்களாக.

---

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 15 | 11 | விசினன் | வீசினன் |
| 16 | 4 | விவேகியாய் | விவேகியென நினைத்த |
| 17 | 15 | பிராமண | பிரமாண |
| 11 | 16 | சந்சாசி | சந்யாசி |
| 19 | 11 | சேராதது | சேராத |
| ,, | 12 | ஆத்தியாஸ்ரமம் | அத்தியாஸ்ரமம் |
| 21 | 12 | ஈதெல்தாம் | ஈதெல்லாம் |
| ,, | 15 | ஆத்யாஸ்ரமி | அத்யாஸ்ரமி |
| 24 | 10 | விருந்தளித்தும் | விருந்தளித்ததும் |
| 25 | 9 | செல்லம்மாள் என்னும் இப்பெண் | இந்தம்மாள் வளர்த்த செல்லம்மாள் என்னும் பெண் |
| ,, | 17 | மஹாஷிகள் | மஹரிஷிகள் |
| 26 | 27 | அ:— | ஆ:— |

# இப்புத்தகம் கிடைக்குமிடங்கள்

1. ரமணாஸ்ரமம் பெருமாள்சாமி,
துர்க்கையம்மன் கோவில் நந்தவனம்,
திருவண்ணாமலை.

2. சாமி அருணகிரிநாதர்,
சாது நாராயண தேசிகர் சித்தாஸ்ரமம்,
121, திருவொற்றியூர் ஹைரோட்,
தண்டையார்பேட்டை, சென்னை.